
கல்கி



கல்கி
பொருளடக்கம்

''கல்கி''யில் வெளிவரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே. சம்பவங்களும் கற்பனையே.

பாரதியார் ஒரு நாள் ரயில்வே ஸ்டேஷனில் ரயில் ஏற வந்தார். பின்னோடு சிநேகிதர்கள் சிலர் வந்திருந்தார்கள். ரயில் ஏறப்போகும் சமயத்தில் கால் தடுக்கிக் கீழே விழுந்துவிட்டார் பாரதியார். சிநேகிதர்கள் பதறிப்போய் அவரை விரைந்து தூக்க முயன்றார்கள். பாரதியார், ''வேண்டாம்! என்னைத் தூக்காதீர்கள். இந்தப் புண்ணிய பாரத பூமியின் மண்ணில் இன்னும் கொஞ்சம் புரள்கிறேன். என்னைப் பெற்று வளர்த்த பூமி! பெரியோர்கள் வாழ்ந்த பூமி!'' என்று சொல்லிப் புரளவும் தொடங்கினார். சிநேகிதர்கள், ''வாஸ்தவந்தான்; ஆனால் இந்தப் பாழும் அந்நிய நாட்டு ரயில் நீங்கள் இல்லாமலே போய்விடுமே! இந்தப் பரிசுத்த பூமியில் புரளுவதை இன்னொரு சமயம் வைத்துக் கொண்டால் நல்லது!'' என்று கூறி அவரைத் தூக்கி எடுத்து ரயிலில் ஏற்றினர். -கல்கி, 1941



பறக்கும் ரத்தினகம்பளம்
சர்க்கார் கஜானாநிதி
வாக்காளர்
பிச்சையிலும் நடுநிலைமை
அமெரிக்காவுக்குக் கப்பரை
ரஷ்யாவுக்குக் கப்பரை
PK

மலர் 25 ✽ இதழ் 43



எதிர்க் கட்சி இதற்காகவே

‘எதிர்க்கட்சி எதற்காக?’ என்று கேட்போருக்கெல்லாம் ஆணித்தரமாக விடை சொல்கிறது இப்போது நடக்கும் தேர்தல் ஆண்டு.

சர்க்காரின் சமீப கால நடவடிக்கைகள் சிலவற்றைப் பார்ப்போம்: சிற்சில தொழில்களில் கன்ட்ரோல்கள் நீக்கப்பட்டிருக்கின்றன; தங்கக் கட்டுப்பாட்டை நீக்கலாம் என்பது பற்றி யோசனை நடக்கிறது; பாதுகாப்பு விதிகளை மிகவும் கடுமையாகப் பின்பற்றக் கூடாது என்ற உணர்வு சிறிதே ஏற்பட்டிருக்கிறது; நிலவரி உட்படப் பல வரிகளைக் குறைப்பது அல்லது ரத்து செய்வது குறித்துச் சிந்திக்கப்படுகிறது; ஹிந்தி பேசாத பகுதிகளில் ஆங்கிலத்தை நீடிக்கச் சட்டம் வரப்போவதாகத் தெரிகிறது; உணவு மண்டலம் குறித்துக் கூடப் புனராலோசனை செய்யப்படும் என்று நம்பப்படுகிறது. இவ்வாறு நீண்டகாலமாக விரும்பப்பட்ட பல காரியங்களில் ஒன்றையடுத்து ஒன்றாகச் சர்க்கார் இப்போது கவனம் செலுத்துகிறதெனில் அதன் காரணம் என்ன? இது சுயமாகவே செயல்படும் இயற்கையின் போக்கா? அல்லவே அல்ல. தற்போது சர்க்கார் தேச வாழ்வின் பல முக்கியமான அம்சங்களில் புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, தனது பழைய தவறுகளை ஓரளவுக்கேனும் திருத்திக் கொள்ள முயல்கிறதெனில் அதற்கு முக்கியமான காரணம் தேர்தல் வெற்றி குறித்து அதற்குள்ள அக்கறைதான். இவை மக்கள் விரும்பும் சீர்திருத்தங்கள்; இவற்றை எதிர்க்கட்சிகளே வலுவாக எடுத்துக் கூறி வருகின்றன; எனவே, இனியும் இந்தத் துறைகளைக் கவனியாது விட்டால் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பலம் அதிகரித்து விடக்கூடும் என்ற ஐயமும் பயமுமே காங்கிரஸ் சர்க்காரின் கண்களைப் பிரத்தியட்ச நிலைக்குத் திருப்பி விட்டிருக்கின்றன.

தற்போது கையிலெடுத்துக் கொண்ட காரியங்களைச் சர்க்கார் தேர்தல் முடிகிற வரை இழுத்து விட்டுக் கொண்டிராமல், திட்டவட்டமான முடிவுகளைக் கண்டால்தான் அதன் அந்தரங்க சுத்தியை வாக்காளர்கள் நம்புவார்கள். வெறும் பாசாங்கு செய்வதும் மன்னிப்புக் கேட்பதும் மக்களை மயக்கிவிடாது. நிழலோடு சண்டையிடுவதாலேயே பிரச்னையைத் தீர்த்ததுபோன்ற பிரமையை ஏற்படுத்திவிட முடியாது.

உதாரணத்துக்குத் தங்கக் கட்டுப்பாட்டை எடுத்துக் கொள்வோம். இவ்விஷயத்தில் சர்க்கார் மனப்பூர்வமாக ஈடுபட்டிருப்பின், கட்டுப்பாட்டைப் பூரணமாக ரத்துசெய்வது தவிர வேறு வழி கிடையாது. தங்கத்தின் விலை உயர்ந்திருக்கிறதெனில் அதற்குக் காரணம் மக்கள் திடீரென்று இந்த உலோகத்திடம் பிரேமை கொண்டு, போட்டி போட்டு வாங்கிச் சேமித்துக் கொள்ள எண்ணியதல்ல. காங்கிரஸின் கொள்கையால் ரூபாய் மதிப்புக் குறைந்து கொண்டே வந்ததின் எதிர்விளைவுதான் தங்கத்தின் விலை உயர்வு. பட்டினி கிடக்கும் பொற்கொல்லர்கள் தங்கத்தின் விலையைக் குறைக்க முடியாது. அரிசிக்கும், கறிகாய்க்கும், பழத்துக்கும் தேவை அதிகமாகும் போது விலை உயர்வது போன்றதல்ல, தற்போது தங்கத்துக்கு விலை உயர்வு ஏற்பட்டிருப்பது. ரூபாயின் மதிப்பு குறைந்ததொன்றே இவ்விலை உயர்வுக்குக் காரணம். எனவே, தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் நிழலை வெட்ட முயல்வது போன்ற காரியமே. இது பற்றி மறு சிந்தனை செய்யும்போது நிழலிடம் போவதன் மடமையை உணர்ந்து, தங்கக் கட்டுப்பாட்டை அடியோடு நீக்கி விட்டு, நிழலுக்குக் காரணமான வரிக் கொள்கை - பணவீக்கக் கொள்கை இவற்றோடு போர் தொடங்க வேண்டும். இத்தனை ஆண்டுகளாக எதிர்க் கட்சியார் கூறி வந்ததற்கெல்லாம் செவி சாய்க்காமலே பிடிவாத

மாக இருந்த அரசாங்கம் இப்போது நல்ல பாதையில் முழுமனத்துடன் செயலாற்றுகிறதா இல்லையா என்பது இனி எடுக்கும் நடவடிக்கைகளிலிருந்தே தெளிவுபடும்.

நாட்டுக்குகந்த நல்ல காரியம் நடக்க வேண்டியதுதான் நமக்கு முக்கியம். யார் செய்கிறார்கள் என்பது பற்றிக் கவலையில்லை. எனினும், எந்த நோக்கத்தோடு செய்கிறார்கள் என்பதைக் கவனித்தால்தான் நல்ல காரியம் நீடிக்குமா என்பதும் தெரியும். தேர்தல் நடக்கும் வரையில் நாட்டு நலனுக்காக ஓரிரு காரியம் செய்வதாகக் காட்டிவிட்டு, பிறகு வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டால் பயனில்லை. காங்கிரஸ் தற்போது பூரண மனமாற்றம் கொண்டு அந்தரங்கசுத்தியுடன் மேற்கூறிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதும், தேர்தல் கண்ணோட்டத்திலேயே செயல்படுகிறது என்பதும் அக்கட்சியினரின் இயல்பை உணர்ந்தோருக்கு நன்கு தெரியும். ஆயினும் இப்போது ஒன்று நிதரிசனமாகியிருக்கிறது. அதுதான் எதிர்க்கட்சிகளின் சக்தி. தில்லியில் நடைபெறும் மாறுதல்களைப் படிக்கும் வாசகர்கள், அதன் பின்னணியில் எதிர்க்கட்சிகளின் தார்மிக சக்தியை உணர வேண்டும்.

நாட்டு நடப்பில் நிபுணரின் பங்கு

நமது மாபெரும் தேசத்தின் சிக்கலான விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் விஷயமறியாதவர்கள் தலையிட்டுச் செய்யும் தீங்கைப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் உணர்ந்து விட்டாரோ என்று தோன்றுகிறது. 'தொழில் நுட்ப அறிவு பெற்றவர்களைக் கணிசமான அளவில் சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும்' என்று அவர் சமீபத்தில் கூறியிருப்பது நமக்கு இத்தகைய நம்பிக்கையை ஊட்டுகிறது. அங்கத்தினர்கள் எல்லாத் தொழில் துறைகளையும் அறிந்திருக்க முடியாது. அவர்கள் சுயநலனையோ, கட்சி நலனையோ கருதாவிடினும் கூட, இன்றுபோல் எல்லாத் தொழில்களிலும் சர்க்கார் பிரவேசிக்கும்போது, அவை எல்லாவற்றையும் குறித்து விஷய ஞானம் பெற்றிருக்க இயலாது. இத்தகைய அரசியல்வாதிகளையும் வரி வசூலிக்கும் அதிகாரிகளையும் வைத்துக் கொண்டு தேசத்தின் உழவையும் தொழிலையும் நிர்வகிக்க முயலுவது விபரீதத்தில்தானே கொண்டு விடும்? எனவே, நாட்டு நடப்பில் நிபுணர்களும் அதிகப் பங்கு பெற வசதியளிக்க வேண்டும் என்று பிரதமரவர்கள் கூறியிருப்பதை மனமார வரவேற்கிறோம். ஆனால் பிரதமரின் விவேகமான யோசனையை அவிவேகமான முறையில் நிறைவேற்றிவிட ஏதுவுண்டு. சட்டசபைக்கு நிபுணர் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் பொறுப்பைச் சம்பந்தப்பட்ட துறையினருக்கு அளிக்காமல் அரசியல் கட்சிகளுக்கு அளித்தால் அது பெர்மிட்–லைசென்ஸ் ராஜ்யத்துக்கு இன்னொரு முக்கியமான அங்கமாகிவிடும். விவசாயம் — உற்பத்தித் தொழில் — வியாபாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்தோர் குறிப்பிட்ட ஸ்தானங்களுக்குத் தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்து அனுப்பிவைக்க வழி செய்தால்தான் உண்மையில் நாட்டின் முன்னேற்றத்துக்கு உதவும். இல்லாவிடில் அவர்கள் கட்சி எஜமானர்களின் முன் பல்லைக் காட்டிக் கொண்டு நிற்க நேரிடும். பாரபட்சம், ஊழல் யாவும் பெருகும்.


ஸ்ரீமதி இந்திரா அவர்களின் கருத்தை ராஜாஜி நீண்ட நாட்களாக வலியுறுத்தி வருவதை வாசகர்கள் அறிவார்கள். ராஜ்ய சபை, மேல் சட்டசபை இவற்றின் ஸ்தானத்தில் நாட்டு வாழ்வில் அங்கம் வகிக்கும் எல்லாத் துறைகளின் பிரதிநிதிகளும் அடங்கிய ஓர் அவை அமைய வேண்டும் என்று அவர் பன்முறை கூறியிருக்கிறார். எதிர்க்கட்சிகள் கூறும் பல கொள்கைகளைச் சர்க்கார் தாமே மேற்கொண்டிருக்கும் தற்போது, எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்கிணங்கத் தேசப் பிரதமர் சிந்திப்பது குறிப்பிடத்தக்கது.

தரும உணர்வு நசிக்கலாகுமா?

'தனி மனிதர்கள் செய்து வந்த தான தருமங்களுக்குப் பதிலாக அரசாங்கமே ஏழைகளின் எல்லா நலன்களையும் கவனிக்கத் தொடங்கியபின் பலருக்கு அன்னமிடப்பட்டது; பலருக்கு வேலை கிடைத்தது. இருந்தாலும் நாட்டு மக்கள் எதையோ இழந்து விட்டார்கள். தங்களை மனிதர்களாக்கிய தார்மிகப் பொறுப்பை அவர்கள் சர்க்காரிடம் விட்டுக் கொடுத்து விட்டார்கள்' என்று ரால்ஃப் ஹாஸ்டெட் என்ற அமெரிக்கர் தமது நாட்டு நிலைமையைப் பற்றிக் கூறுகிறார்.

இந்தியாவிலும் இதே போல் ஏழைகளின் முன்னேற்றத்துக்காகச் சர்க்காரின் நடவடிக்கைகள் அதிகமாக ஆக, மக்களின் தான தரும உணர்ச்சி குறைந்து, இப்போது அடியோடு மறைந்துவிடக்கூடிய நிலையைப் பார்க்கிறோம். தான தருமம் செய்யக்கூடியவர் மீது மிகவும் கடுமையாக வரி விதித்திருப்பதும் இதற்கு இன்னொரு காரணம்.

நல்ல நிலையில் உள்ளோர் மற்றோரை ரட்சிக்க வேண்டியது அவர்களின் தார்மிகப் பொறுப்பு என்று காந்தியடிகள் வலியுறுத்தி வந்தார். இதனைப் பூர்வத்தில் நம் நாட்டினர் நன்கு உணர்ந்திருந்தனர். இப்போது நாம் வேறு யுகத்தில் வசிக்கிறோமோ என்றே தோன்றுகிறது.



ராஜாஜியின் கருத்துக்கள்

- ★ சீனத்தின் போக்கு
- ★ கண்டனக் குரல் எழுப்புமா?
- ★ லஞ்ச ஊழலுக்கு ஓர் உதாரணம்
- ★ சாஸனத்தின் கருத்து

மூன்றுவது அணுகுண்டை வெடித்த சீனம் நாகரிக விதிகளைத் தகர்த்தெறிந்து விட்டது. உலக வல்லரசுகள் மாஸ்கோவில் செய்து கொண்ட அணு ஆயுத சோதனை நிறுத்த ஒப்பந்தத்தைச் சீனம் பொருட்படுத்தாது. உலகச் சூழலையும், உலகத்தின் நீர்ப்பரப்பையும், நிகழ்கால — வருங்கால வாழ்வையும் அது விஷமயமாக்கியே வரும். அமெரிக்காவும் ருஷியாவும் சோதனை நிறுத்த உடன்படிக்கைக்குமுன் பலமுறை அணுகுண்டுகளை வெடித்ததால் இப்போது சீனத்தைக் கட்டுப்படுத்த வழி காணவில்லை. சம்பந்தப்படாத நாடுகள் உட்பட லட்சக்கணக்கான மக்களுக்கு —இனி பிறக்கப் போகிறவர்களுக்குக்கூட — உயிராபத்தான தொல்லை விளைவிக்கும் ஒரு நாடு நாகரிக சமுதாயத்துக்கு உரிய நலன்களைப் பெறவோ, சர்வதேச வியாபாரத்தால் பலன் அடையவோ தகுதி பெற்றிருக்கவில்லை. உலகச் சட்டத்தை மதிப்பதற்கு மறுக்கும் சீனத்துக்கு மற்ற நாடுகள் பண்டங்கள் அனுப்பி வைப்பதில் பொருளில்லை. பிரஷ்டம் செய்ய வேண்டிய ஒரு மிருகமாகி விட்டது சீனம். அதைத் தடுக்காமலிருப்பது சோதனைத் தடை ஒப்பந்தத்தை வெறும் வேடிக்கையாக்குவதற்கே சமம்.

ஃ ஃ ஃ

பெர்மிட்—லைசென்ஸ் வலைப் பின்னல்களில் சிக்காத சுதந்திரப் பொருளாதாரத்தைப் பத்திரிகை உலகு ஆதரிக்கத் தொடங்கியுள்ளது. ஆளும் கட்சியின் தேர்தல் வருஷ நடவடிக்கைகள் ஆரம்பித்தவுடனேயே பத்திரிகைகள் இவ்வாறு சுதந்திரமாகப் பேசத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. கட்டுப்பாடுகளைத் தளர்த்தலாம் என்று அதிகார ஸ்தானம் நினைத்த பின்பே பத்திரிகைகளும் எண்ணெய் பூசிய சக்கரத்தில் செல்வதுபோல் அதைப் பின்பற்றி எழுதுகின்றன. இரண்டாவது உலக யுத்தம் முடிந்ததற்குப் பிறகு கட்டுப்பாடுகள் காடுபோல் மண்டியிருப்பதற்கு மழையும் வெயிலும் காரணமல்ல, காங்கிரஸ் தலைமையின் சிந்தனைக் குழப்பமே காரணம் என்பதைப் பத்திரிகையுலகம் வெளியிடத் தயங்குகிறது. பிரிட்டிஷ் ஆட்சியின் போது பொதுமக்களின் எழுச்சிக்குக் காரணமாய் அமைந்த பத்திரிகையுலகு இன்றும் அதே போல் திரமுடன் கண்டனக் குரல் எழுப்பினால் எவ்வளவு நன்றாக இருக்கும்! தங்கள் மனத்திலிருப்பதைச் சொல்வதற்கும் காங்கிரஸ் தலைவர்களிடமிருந்து சமிக்ஞை வர வேண்டும் என்று பத்திரிகைகள் காத்துக் கொண்டிருக்கும் நிலை மாற வேண்டும். ஆனால் பத்திரிகைகளைப் பழித்துப் பயனில்லை. காடாக மண்டி வளர்ந்த கட்டுப்பாடுகள் பத்திரிகையுலகையும் சூழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஃ ஃ ஃ

கான்பூரிலுள்ள ஜே.கே. பருத்தி ஆலையார் 1957ல் காங்கிரஸின் தேர்தல் நிதிக்குக் கொடுத்த ரூ. 50,000 நன்கொடை வியாபார நலனை உத்தேசித்த ஒரு செலவு அம்சமாகாது; எனவே, இத்தொகைக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்க முடியாது என அலஹாபாத் ஹைகோர்ட் தீர்ப்பளித்துள்ளது. இந்த நன்கொடைக்கும் வியாபார முன்னேற்றத்துக்கும் நேரடியான தொடர்பைக் காட்ட எந்தச் சான்றும் இல்லை என்று நீதிபதிகள் கூறியுள்ளனர். கட்சிக்கு நன்கொடை வழங்கியதால் கம்பெனிக்கு முன்னேற்றம் ஏற்பட்டது என்று நிரூபணமாகியிருப்பினும் அது அப்பட்டமான லஞ்ச ஊழலுக்கே ஓர் உதாரணமாக இருந்திருக்கும்.

ஃ ஃ ஃ

கட்டுப்பாடு, சுதந்திரம் இரண்டும் சரியான விகிதத்தில் இருக்க வேண்டும். மக்களின் சுதந்திரத்தை ஒடுக்காமலே, அவர்கள் தவறு செய்யாதபடி கட்டுப்படுத்தும் வகையில் சர்க்கார் நடப்பதற்கு நமது அரசியல் சாஸனம் வகுக்கப்பட்டது. அதன் மூன்றும் பாகத்தில் மக்களின் சுதந்திரமும், நான்காம் பாகத்தில் சர்க்காரின் அதிகாரமும் வரை யறுக்கப்பட்டன. மக்களின் சுதந்திரங்களைப் பறிக்காமலே நிர்வாகம் நடைபெற வேண்டுமென்பது சாஸனகர்த்தர்களின் கருத்து. மக்களின் சுதந்திரங்களை யெல்லாம் பறித்து விட்டு ஆட்சி நடத்துவது எளிதாக இருக்கலாம்; ஆனால் இது கொடுங்கோன்மையாகும். அதே போல் மக்களை மனம் போனபடி விட்டுச் , சர்க்கார் வெறுமே இருப்பது எளிதாயிருக்கலாம்; ஆனால் இது அராஜகமாகும். சுதந்திரத்தையும் கட்டுப்பாட்டையும் ஒரு முழுமை பெற்ற அமைப்பில் உசிதப்படி அமைப்பதற்கு 'நிரம்பச் சிந்தனையும் ஆழ்ந்த ஆலோசனையும் சக்தி வாய்ந்த அறிவும் அவசியம்' என்று ஆங்கிலேயப் பெரியார் எட்மண்ட் பர்க் எழுதினார். இதைத் தான் நமது சாஸனகர்த்தர்கள் செய்து காட்டினர். அரசியல் நிர்ணய சபையின் எல்லா அங்கத்தினரும் விசுவாசப் பிரமாணம் செய்து கொண்டது இந்த சாஸனத்துக்குத்தான்.

என்ன சேதி?

பாதுகாப்புக்கு ஓர் அணி
குஜராத் செய்திகள்
சபாஷ் சுந்தரம்!
அநுதாபமும் ஆத்திரமும்
உலக ஸ்தாபனத்தில் ஒரு தமிழர்

சீனம் மீண்டும் அணு சோதனை நிகழ்த்தியிருப்பது குறித்து மக்கள் கொதிப்படைந்திருப்பது நியாயம். எனினும், கோபத்தினால் விவேகத்தை இழந்துவிடலாகாது. 'சீனம் அணுகுண்டு உற்பத்தியில் இறங்கி விட்டதால் நாமும் அணுகுண்டு தயாரிக்க வேண்டும்' என்று கூறுவது பொருத்தமாகாது. அணு ஆயுத வல்லரசின் நட்பை நாம் பெறுவதே சீனத்தைத் தடுத்து நிறுத்தப் போதுமானது. அணுகுண்டுத் தயாரிப்பில் நம் பொருளை ஏராளமாகச் செலவிடுவது உசிதமாகாது. சமூக தருமத்துக்கும் அணுகுண்டுத் தயாரிப்பு ஒவ்வாது.

உலக முழுவதிலும் அணு ஆயுதங்களை ஒழிக்கும் இலட்சியத்தைப் பின்பற்றி வந்த நமது சர்க்காரும் இப்போது, 'அவசியம் நேருமாயின் நாமும் அணுகுண்டு உற்பத்தியில் இறங்கக் கூடும்' என்று கூறுவது வரவேற்கத் தக்கதல்ல. சீனம் ஒரு குற்றம் செய்கிறது என்பதற்காக நாமும் அதனோடு போட்டியிட்டுக் கொண்டு குற்றம் செய்வது நீதியாகி விடாது. உலக சமுதாயத்திலிருந்து விலக்கி வைக்கப்பட வேண்டிய ஒரு நாட்டுடன் போட்டியிடுவது நமக்கு அழகல்ல.

'அணு ஆயுதங்களை நாம் உற்பத்தி செய்வதில்லை; வல்லரசுகளும் இந்த ஆயுதக் குவிப்பைக் கைவிடுமாறு மற்ற நாடுகளின் ஒத்துழைப்போடு முயற்சி செய்ய வேண்டும்' என்பதே இதுகாறும் நமது நோக்கமாயிருந்திருக்கிறது. இதை இப்போது விட்டுவிடலாகாது. அணுஆயுதங்களை எதிர்க்கும் சர்வதேச இயக்கத்தில் இந்தியா கொண்டுள்ள ஈடுபாட்டை இம்மியும் தளர்த்திவிடக் கூடாது.

அணு ஆயுதங்களைக் கொண்டு எந்த நாடும் தற்காப்புச் செய்து கொள்ள இயலாது என்பது சிந்தித்துப் பார்த்தால் புரியும். எதிரி நாட்டாரைப் பெருமளவில் அழிக்கத்தான் அவை உதவும் என்பதோடு, உலகச் சூழலை மாசுபடுத்தி நமது நண்பர்களுக்கும் நமக்குமே தீங்கு விளைவிக்கும். அப்படியாயின் அணு ஆயுதத்தைக் காட்டிப் பயமுறுத்தும் நாடுகளுக்கு எப்படி ஈடு கொடுப்பது என்று கேட்கலாம். எப்போதும் நமது உதவிக்கு வரக்கூடிய அணு வல்லரசுகளின் உதவியைப் பெறுவதே அதற்கு வழி. நாட்டோ, ஸீயோ, ஸென்டோ, அன்ஜஸ் முதலிய ராணுவக் கட்டுப்பாடுகளைப் பார்த்தோமாயின் பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா போன்ற மிகவும் செல்வாக்கும் கௌரவமும் சுதந்திர உணர்ச்சியும் பெற்ற பல நாடுகளும் அமெரிக்காவுடன் கூட்டுச் சேருவதில் அவமானம் காணவில்லை என்பதை உணர்வோம். ஜப்பான், தென் கொரியா, தேசிய சீனம், இவை தனித் தனியாகவே அமெரிக்காவுடன் ராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. நாமும் பிடிவாதத்தை விட்டு நமது பாதுகாப்புக்கு இந்த உதவியை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமேயன்றி, தருமமற்றதும் வீண் விரயத்துக்கு இடம் தருவதுமான போட்டியில் இறங்குதல் தகாது.

❀❀❀

சமீப காலத்தில் குஜராத் மாநிலத்திலிருந்து மிகுந்த ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் செய்திகள் வந்தவண்ணம் இருக்கின்றன. ஸ்ரீ வாடிலால் மேத்தா என்ற பிரபல காங்கிரஸ்காரர், அந்தக் கட்சியைத் துறந்துவிட்டு, சுதந்திரக் கட்சியில் சேர்ந்திருக்கிறார். அவர் காங்கிரஸை விட்டதற்குக் கூறப்படும் பல்வேறு காரணங்களில் ஒன்று, ராஜ்ய சர்க்கார் பள்ளி மாணவர்களுக்கு இரண்டாவது வகுப்பு அல்லது மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கத் தொடங்காமல் ஒன்பதாவது படிவம் வந்தபின்னர் தொடங்குவதே! அவர் பாலப் பருவத்திலேயே ஆங்கிலம் கற்பிக்கத் தொடங்கினால் தான் மாணவர்கள் பல்வேறு துறைகளில் முன்னேற முடியும் என்று தீவிரமாகக் கருதுகிறார். உண்மைதானே!

குஜராத் மாநில மின்சார போர்டுத் தலைவர் எச். எம். பட்டேல் அவர்கள் பழைய ஐ. ஸி. எஸ். குழுவைச் சேர்ந்தவர். பிரிட்டிஷ் ஆட்சி நடந்த போதும், சுதந்திர ஆட்சியிலும் இந்திய சர்க்காரின் மிக உயர்ந்த பதவிகளில் அமர்ந்து திறம்படப் பணியாற்றிச் செயல் திறமை மிக்கவர் என்ற புகழ் எய்தியவர். இவரும் சுதந்திரக் கட்சியில் சேர்ந்துள்ளார்.

பவநகர் என்றவுடனேயே, நமக்குத் தமிழக கவர்னராக இருந்த பவநகர் மகாராஜாவின் நினைவு வரும். அவர் நமது ராஜ்யத்தை விட்டுச் சென்றதும், வேறு எந்தப் பதவிக்கும் ஆசைப் படாமல், விவசாயத்தில் கண்ணும் கருத்துமாக இருந்தார். சர்க்கார் போக்குப் பிடிக்காமல் அவர் மனம் மறுகி வந்தாலும் அரசியலில் தீவிர பங்கு எடுத்துக் கொள்ளாமல் இருந்தார். இப்பொழுது அவரது புதல்வர் மகராஜ்குமார் சிவபத்ர சிங்ஜி தரமான ஒரு காரியம் புரிந்திருக்கிறார். சமீபத்தில் பவநகர் மாவட்டத்தில் நடைபெற்ற விவசாயிகள் கூட்டத்தில் தாம் சுதந்திரக் கட்சியில் சேர்ந்து விட்டதாக அவர் அறிவித்தார். அக்கூட்டத்திலேயே குஜராத்

சுதந்திரக் கட்சித் தலைவர் திரு பாயிலால் பாய் பட்டேல் அத்தொகுதியில் பார்லிமெண்டு அங்கத்தினர் தேர்தலுக்கு ஸ்ரீ சிவ பத்ர சிங்ஜி நிறுத்தப்படுவார் என்று பெரு மகிழ்ச்சிக்கிடையே அறிவித்தார்.

* * *

சுதந்திரக் கட்சியின் புது ராஜ்ய சபை அங்கத்தினர் திரு ஜி. கே. சுந்தரம் தமது முதல் பிரசங்கத்திலேயே அரசாங்கத்தின் 'லட்சணத்தை' வெகு அழகாக வர்ணித்திருக்கிறார்.

"பட்ஜெட் உற்பத்திக்கு ஊக்கம் அளிப்பதாக இல்லை என்பது நிச்சயம். அரசாங்கம், 1966ம் ஆண்டினை உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஊக்கும் "உற்பத்தியாண்டு" என்று அறிவித்திருக்கிறது. ஆனால் பட்ஜெட் வெளியானதும் பம்பாய் ஆலைத் தொழிலாளர்கள் எப்படி வரவேற்றார்கள்?— 14 நாட்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள்! அதைத் தொடர்ந்து "பம்பாய் பந்த்", "டெல்லி பந்த்", "கல்கத்தா பந்த்" "ஏர் இந்தியா (விமானிகள்) பந்த்", "ஐ. ஏ. ஸி. பந்த்", "என்.ஜி.ஓ. பந்த்" கடைசியாகத் தலைநகரில் மின்சார நிறுத்தம் ஆகிய பல வேலை நிறுத்தங்களை இந்தப் பட்ஜெட்டை வரவேற்றுள்ளன !" என்று கூறியிருக்கிறார்.

நாட்டில் தொழில் உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிடுவதாகச் சொல்லிக் கொண்டே சர்க்கார் செய்யும் காரியங்கள் எவ்வளவு நேர்மாறாக இருக்கின்றன என்பதை இதைவிட அழுத்தம் திருத்தமாக யாராலும் கூற முடியாது. இதைப் பார்க்கும்போது, "சபாஷ் சுந்தரம்!" என்று சொல்லத் தோன்றுகிறது.

* * *

கிங்ஸ்லி மார்டின் இந்தியாவின் பழைய நண்பர். பிரிட்டிஷ்காரர். மதிப்பு வாய்ந்த பத்திரிகையாளர். அவர் சமீபத்தில் இங்கிலாந்திலிருந்து வெளியாகும் "நியூ ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிறார் :

"இத்தாலி நாட்டிலிருந்து என் நண்பர் ஒருவர் 'இந்தியாவின் மீது இங்கு மக்களுக்கு அளவுகடந்த கோபம் எழுந்துள்ளது. இங்குள்ள குழந்தைகள் முதற்கொண்டு இந்தியாவுக்காகத் தங்கள் சிறு சேமிப்புக்களையெல்லாம் திரட்டி அனுப்பிக் கொண்டிருக்க, பிரதமர் இந்திரா காந்தி அமெரிக்காவுக்குப் போய், இந்தியாவில் மக்கள் பட்டினியால் ஒன்றும் செத்துக் கொண்டிருக்கவில்லை என்று கூறுகிறாரே' என்று எழுதியிருக்கிறார்."

நிதிமந்திரி உணவுப் பஞ்சப் பிலாக்கணம் மிகப் பலமாகப் பாடியதில் உலக மக்கள் அனைவருடைய அனுதாபத்தைக் சம்பாதித்தோம். அதே சமயம் 'இந்தியர்கள் பொய்யர்களோ' என்ற ஐயப்பாடும் அவர்கள் மனத்தில் எழக் காரணமாகி விட்டது நமது ஓலம்! வரம்பு மீறிப் போவதில் உள்ள கஷ்டம் இதுதான் !

* * *

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஜேம்ஸ் எஸ். ராஜ் அவர்கள் இன்டர்நேஷனல் பைனான்ஸ் கார்ப்பரேஷன் என்ற உலக பாங்குடன் இணைந்த அகில உலக நிதி கார்ப்பொரேஷனின் நிர்வாகத் துணைத் தலைவராக (Deputy Executive Vice-President) நியமிக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தியைக் கேட்டு யார்தான் உள்ளம் பூரிக்காமல் இருக்க முடியும்? 1913ல் பிறந்த திரு ஜேம்ஸ் ராஜ், சென்னை கிறிஸ்துவக் கல்லூரியிலும் லண்டன் பல்கலைக் கழகக் கல்லூரியிலும் பயின்று, சில காலம் ரங்கூன் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றினார். பின்னர் 1942ல் இந்திய அரசாங்கத்தில் சேர்ந்து பல உயர் பதவிகள் வகித்து 1953ல் 'இன்டர்நேஷனல் மானிடரி



பண்டு' என்னும் அகில உலக ஸ்தாபனத்தில் சேர்ந்து, படிப்படியாகப் பல உயர் பதவிகள் வகித்து, இன்று நிர்வாகத் துணைத் தலைவர் பதவிக்கு வந்துள்ளார்.

உலகில் உள்ள பல்வேறு பின் தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைத் தனியார் துறை மூலமாக ஊக்குவிக்க, ஐ. நா. ஸ்தாபனத்தைச் சேர்ந்த நாடுகள் இந்த ஸ்தாபனத்தை நடத்தி வருகின்றன. எண்பத்தொரு நாடுகளின் 99.4 மில்லியன் டாலர் மூலதனத்துடன் தொடங்கிய இந்த ஸ்தாபனம் இன்று 34 நாடுகளில் 155 மில்லியன் டாலர் மூலதனமிட ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது என்றால் அதன் வளர்ச்சியையும், பொறுப்பையும் ஒருவாறு ஊகிக்கலாம். இத்தகைய ஸ்தாபனத்தில் பொறுப்பு வாய்ந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள ஜேம்ஸ் எஸ். ராஜ் அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.



hat you can't see in
செஞ்சுரியின்
ஃபேஷன் துணி ரகங்க
...தொட்டுப் பார்த்தால் தெரியல
அவைகள் அணிய எவ்வளவு
சுகமளிப்பவை என்று.
சூப்பர்கோம்டு மற்றும் சூப்பர்ஃபைன்
டாப்பி ஷர்ட்டிங்குகள், செக் ஷர்ட்டிங்குகள்
புட்டா பாப்ளின்கள், ப்ளீச்டு மற்றும்
டைடு பாப்ளின்கள், உடுப்புகளுக்கான
துணிகள், சூப்பர்ஃபைன் ஸ்கிரீன்
பிரிண்டெட் சாரிகள், பிரிண்டெட்
வாயில்கள், லெனோஸ்.
தி செஞ்சுரி ஸ்பின்னிங் & மானு கோ., லிட்., பம்பாய் -1



மாயா என்று ஒரு பெண் யானை. அதற்கு ஒரு வெண்ணிற யானைக் குட்டி. மிக அபூர்வமாகப் பிறக்கும் வெண் யானைக் குட்டிக்கு நமது சமுதாயத்தில் எவ்வளவு மகிமை! அந்த யானைக் குட்டியை எப்படியாவது கவர்ந்துவிட வேண்டும் என்று பல சூழ்ச்சிகள், தந்திரங்கள் கையாளப்படுகின்றன. இவற்றையெல்லாம் தாய் யானையும் அதன் உரியவர்களான ராஜு என்ற சிறுவனும் அவனுடைய அமெரிக்க சிநேகிதன் டெர்ரியும் மிகத் துணிச்சலோடு ஈடு கொடுத்துச் சமாளிப்பதே இந்தப் படத்தின் அடிப்படைக் கருத்தாகும்.

முழுக்க முழுக்க இந்தியச் சூழ்நிலையில், இந்தியக் காடுகளில் எடுக்கப்பட்டுள்ள இந்தப் படம் சினிமா ரஸிகர்களுக்கு அலாதியான திருப்தியும் மகிழ்ச்சியும் அளிக்கிறது.

இந்திய சினிமா முதலாளிகள் இந்தியாவில் எடுத்த படங்களைப் பார்க்கும்போது நாம் எங்கே அமெரிக்காவில் இருக்கிறோமா என்று தோன்றும். முதல் தடவையாக இந்திய நாட்டை வெள்ளித் திரையில் தத்ரூபமாகப் பார்க்கும் வாய்ப்பைப் பெறுகிறோம்.

பட்டிக்காட்டு ரயில்வே ஸ்டேஷன் என்றால் உண்மையான பட்டிக்காட்டு ரயில்வே ஸ்டேஷனையும், அந்தச் சூழ்நிலையையும் கொண்டு வந்து பிரமையையே பார்ப்பவர்களுக்கு உண்டாக்கி விடுகிறார்கள். அதே போல், ஆற்றங்கரை, கடைத் தெரு ஆகியவற்றின் உண்மையான குண விசேஷங்களையும் பாவத்தையும் அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார்கள்.

அமெரிக்க நடிகர்களும் இந்திய நடிகர்களும், இந்திய வனாந்தரமும், யானையும் புலிகளும் சேர்ந்து, ஒரு நல்ல உயர்தரமான படத்தைப் பார்த்த மன நிறைவை அளிக்கின்றன.

'டெர்ரி' என்ற அமெரிக்கச் சிறுவனாக ஜெநார்த்தும், இந்தியச் சிறுவனாக ஸஜித்தும், ஒற்றைக் கண்ணுடைய கொடு மனப் பிச்சைக்காரனாக ஜோ தஹரும், அவன் மகளாக உமாராவ் என்ற நமது கலாக்ஷேத்திரத்தைச் சேர்ந்த சிறுமியும் மிக நன்றாக நடித்து சபாஷ் பட்டம் பெற்று விடுகிறார்கள்.

மாயா



சினிமா



MTP-J-P-1-65/66 TM





மன்னன் மனுநீதிச் சோழன் திசைகளைத் திகைத்துப் பார்த்தான்; உயிரற்ற உடல்போல் அசையாது நின்றான். பதைந்து உருகினான்.

"மன்னுயிர் புரந்து வையம்
பொதுக்கடிந் தறத்தில் நீடும்
என்னெறி நன்றால்" என்னும்;
என் செய்தால் தீரும்" என்னும்;
தன்னிளம் கன்று காணாத்
தாய் முகங் கண்டு சோரும்
அந்நிலை அரசன் உற்ற
துயரம்ஓர் அளவிற் றன்றால்.

அரசனின் அல்லலைக் கண்டு கல்லும் மண்ணும் உருகின; அமைச்சரும் மற்றையோரும் அலறினார்கள்.... மன்னனை வணங்கி, "அரசே! எங்கள் சொற்களைக் கேட்டருள வேண்டும்.



கருணையேவடிவானவராதலால் தாங்கள் இவ்வாறு துன்புறுகின்றீர்கள். தங்கள் புதல்வர் மனதார அறிந்து இத்தவறு செய்யவில்லை. அவர் அருளே வடிவானவர்; ஓர் எறும்புக்கும் தீங்கு செய்யாதவர். செடி கொடிகள் காற்றில் அசையக் கண்டாலும் கண்ணீர் ததும்ப அவைகளை அணைந்து அலக்கணுறுவார்; அவர் மீது குற்றம் இல்லை. விதியினால் ஏவப்பெற்ற கன்று பல்லாயிரம் பேரையும் தாண்டி வந்து தானே தேரில் சிக்கி உயிரைவிட்டது. எல்லாம் அறிந்த தங்களுக்கு நாங்கள் அதிகம் கூற வேண்டுவதில்லை. அறியாமல் நேர்ந்த இக்கொலைக்குப் பரிகாரம் தேடுவதே முறை'' என்று கூறினார்கள்.

''அமைச்சர்களே! நன்றாகக் கூறினீர்கள். நடுநிலை தவறாதவர்க்கு இது நியாயமாகாது. தனக்கென்றால் ஒரு நியாயம்; பிறர்க்கென்றால் ஒரு நியாயமா ? நீங்கள் பட்சபாதமாய்ப் பேசுகின்றீர்கள்.

''மாநிலங்கா வலனவான்
மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு
தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால்
கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்துந் தீர்த்
தறங்காப்பான் அல்லனோ?''

''தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், கள்வராலும், விலங்குகளாலும் தீங்கு நேராவண்ணம் குடிகளைத் தன்னுயிர் போல் தருமநெறி தவறாமல் காப்பதன்றோ மன்னனது கடமை? என் மகன் செய்தான் என்பதற்காகப் பிராயச்சித்தம் செய்வது என்பதும், மற்றவன் செய்தால் மரண தண்டனை விதிப்பது என்பதும் எவ்வாறு நீதியாகும்? அவ்வாறு செய்தால் தருமம் சலியாதோ? உயிர்க்கு இறுதி நேர்ந்தாலும் உறுதியிலின்று தவறாத நீங்களா இப்படிக் கூறுகின்றீர்கள் ? என்னுடைய வினைப் பயன்தான் உங்களை இவ்வாறு சொல்ல வைத்தது போலும்! 'மனுச் சோழன்' என்ற பெயரைத் தாங்கியுள்ள நான் அணுவளவும் மனு நெறியினின்றும் வழுவமாட்டேன். வழுவினால் இருபத்தெட்டு கோடி நரகமும் என்னை வாவென்று அழைக்கட்டும். பரிகாரமா சொல்கிறீர்கள்? பிராயச்சித்தமா சொல்லுகிறீர்கள்? எனக்கு ஒரு பரிகாரம், ஒரு பிராயச்சித்தம்தான் தெரிகிறது. கன்றை இழந்த இப்பசுவைப் போல நானும் மகனை இழந்து வருந்துவது ஒன்றே தக்க பிராயச்சித்தமும் நியாயமும் ஆகும். என் மகனுக்கு மரண தண்டனை விதிப்பதே எங்களிருவருக்கும் கழுவாய்'' என்று மனுநீதிச் சோழன் பாறையினும் உறுதியான உள்ளத்துடன் கூறினான்.

மந்திரிகள் திடுக்கிட்டனர். மன்னனைப் பணிந்து, ''மாநிலங் காக்கும் மகிபரே! நாங்கள் கூறுவதைத் தயை செய்து கேட்டருள வேண்டும். தாங்கள் கூறியது நியாயமாகாது. பசுவதை புரிந்தோர் இறந்த பசுவின் தோலைப் போர்த்திக் கொண்டு பசு மந்தையில் வசித்தும், கோநீரால் குளித்தும், பசுவைக் காத்தும், பசு தானம் புரிந்தும், பசுக்கள் மேயும் போது வெய்யிலில் இருந்தும், மழையில் பசு நனையும் போது தானும் நனைந்தும், பட்டினி கிடந்தும் உயிர் பரக்குமாறு சிறிது காய் கனிகள் அருந்தியும் பன்னிரண்டு ஆண்டுகள் இருந்தால் பிராயச்சித்தம் கிடைக்கும் என்றும் அறநூல்கள் கூறுகின்றன. இவ்வாறு கழுவாய் தேடுவதை விடுத்துப் புதல்வனைக் கொல்வது முறையன்று'' என்று வேண்டிக் கொண்டனர்.

''அமைச்சர்களே! அற நூலில் பசுவதைக்குக் கழுவாய் வகுக்கப்பட்டுள்ளதை நான் அறிவேன். அக்கழுவாய், உயிரில் விருப்பமுள்ளவனுக்கும், காமிய கருமங்களைச் செய்பவனுக்கும் விதிக்கப்பட்டுள்ள சாமானிய தருமமேயாகும். அப்பிராயச்சித்தம் சிவகதி அடைய விரும்பியவர்க்கும், பற்றற்றவர்க்கும் விதியாகாது. பசுவின் கன்று இறந்ததற்குக் காரணம் என் புதல்வனே. என் மகனுக்குப் பிராயச்சித்தம் விதித்து விட்டால் போதாது. அருமைக் கன்றை இழந்து பசு அலறுவது போல், நான் என் புதல்வனை இழந்து அலற வேண்டும். அதுவே சிறந்த நீதியாகும். சாமான்ய நீதி, விசேட நீதி என்று நீதி இரு வகைப்படும். விசேட நீதியை அனுசரிக்கும் என்னிடத்துச் சாமானிய நீதியை எடுத்துரைக்கலாமோ?'' என்றான் மனுநீதிச் சோழன்.

''மன்னர் பெரும! தாங்கள் கூறுவதும் நியாயமே. ஆயினும் சிந்திக்கத் தக்கது ஒன்று உளது. ஆறறிவு படைத்த மனிதனை மனிதன் கொன்றால்தான் மரண தண்டனை விதிக்கலாம் என்று அறநூல் வகுத்துள்ளது. இறந்த பசுங்கன்றோ ஐயறிவு படைத்தது...'' என்று அமைச்சர்கள் இழுத்தார்கள்.

மன்னன் வெகுண்டான். ''அமைச்சர்களே! இறுமையுடன் பேசிவிட்டீர்கள். உங்கள் மதிநுட்பம் சாலவும் அழகியது.

அறிவு என்பது உடம்பையும் பிறப்பையும் குறித்ததன்று. பகுத்தறிவு இல்லாத மனிதன் விலங்குதான். விலங்குக்கு அவ்வறிவு வாய்க்கப் பெற்றிருப்பின் அது மனிதன்தான். மனிதரில் விலங்கு உண்டு; மனிதரில் மனிதர் உண்டு. மனிதரில் தேவர் உளர். திருவானைக்காவில் சிவபெருமானுக்கு வெய்யிலும் சருகுகளும் படா வண்ணம் பந்தர் செய்த சிலந்தியையும், முப்போதும் பெருமானைப் பூசித்த யானையையும் விலங்கு என்று கூறலாமா? இந்தப் பசுவோ, தமக்கு எவரேனும் தீங்கு புரியும்போது இம்மணியை அசைத்தால் நான் நேரில் வந்து நியாயம் வழங்குவேன்' என்று நம்பி வாயிலில் கட்டிய மணியை அசைத்து என்னிடம் தன் குறையை அறிவித்து நியாயம் எதிர்பார்த்து நிற்கின்றது. இதனை ஐயறிவு படைத்த விலங்கு என்று கூறுவது? அன்றியும் திருவாரூரில் பிறந்தார் எல்லோருக்கும் யான் அடியேன். திருவாரூரில் பிறந்த உயிர்களெல்லாம் புண்ணியம் செய்த உயிர்கள். ஆகவே, இறந்தது பசுங் கன்றுதானே என்று எண்ணி விடாதீர்கள். இப் பசுவின் துயரை நீக்கும் திறமையில்லாத நான் அதன் துன்பத்தை அடைதலே தக்க பிராயச்சித்தமாகும்'' என்று கூறினான். மந்திரிகள் மௌனமாயினர்.

மனுநீதிச் சோழ மன்னர் காவலரையனுப்பி வீதிவிடங்கனை அழைத்து வரச் செய்தார். தந்தையின் அழைப்பு கிடைத்தவுடனே, வீதிவிடங்கன் அஞ்சி நடுங்கியபடி வந்து சேர்ந்தான். மன்னர் மகனை நேராகப் பார்க்கவில்லை. மகனிடம் நீதி விசாரணை நடத்தினார்.

''பசுவின் கன்றைக் கொன்றது நீதானா?''

''ஆம்.''


''ஏன் கவனக் குறைவாகத் தேர் ஓட்டிச் சென்றாய்?''

தேரை வீதிவிடங்கன் ஓட்டவில்லை; பாகன்தான் ஓட்டினான்; ஆயினும் குற்றத்தைத் தன்பால் ஏற்றிக் கொண்டு, ''குற்றம் செய்து விட்டேன்'' என்று ஒப்புதல் அளித்தான்.

''மனுச் சோழன் மகனா நீ?'' கோபாவேசத்துடன் கேட்டான் அரசன்.

''தந்தையாருக்குத் தீராத பழி ஏற்படுத்திவிட்டேன்.'' — மனம் உருகி விடை பகர்ந்தான் வீதிவிடங்கன்.

மன்னன் தன் அமைச்சர்களுள் ஒருவராகிய கலாவல்லபரை அழைத்து, ''பசுவின் கன்று மாண்ட இடத்தில் இவனைப் படுக்க வைத்து, இவன் ஏறிச்



சென்ற தேரில் அமர்ந்து இவனது மார் பின் மீது அதனைச் செலுத்துக'' என்று ஆணையிட்டார். இம்மியும் மனம் குலை யாது மன்னன் தன் மகனுக்கே மரண தண்டனை விதித்து விட்டான்!

கலாவல்லபரின் தலைசுழன்றது; மனம் கலங்கியது; உள்ளம் உருகியது. அவ் விடத்திலின்றும் நீங்கினார். 'அரசரின் ஆணையை நிறைவேற்ற மறுப்பது ராஜத் துரோகம். இப்புதல்வனைக் கொல்வதோ பெரும் பாவம். தெய்வமே! பார்த்துப் பார்த்து என்னிடமா மன்னர் இந்த ஆணையைப் பிறப்பிக்க வேண்டும்?' எனக் கலங்கினார். கடைசியில் அரசன் மகன் அடைய வேண்டிய தண்டனையைத் தாமே ஏற்றுக் கொள்வதென முடிவு செய்தார். கன்று இறந்து கிடந்த இடத்தில் விழுந்தார் கலாவல்லபர்; ஐந் தெழுத்தைச் சொல்லிக் கொண்டு கண் களை மூடினார். அவ்வளவில் அவரது ஆவி பிரிந்து விட்டது.

தூதர்கள் மன்னரிடம் விஷயத்தைத் தெரிவித்தனர். அருள் நிறைந்த அரசர் கோமான் அதனைக் கேட்டுக் கலங் கினான். துன்பத்துக்கு மேல் துன்ப மெய்தினான். ''பழிக்கு மேல் பழியும் பாவத்துக்கு மேல் பாவமும் உண்டா கியதே! என் மகன் பசுவின் கன்றைக் கொன்றான்; நான் அன்பிற் சிறந்த என் அமைச்சரைக் கொன்றேன். தியா கேசப் பெருமானே! இப்படியும் என் னைச் சோதிக்கலாமா? ஐயனே! நெறி தவறாத என் ஆட்சி முறிந்து விட்டதே. என் செய்வேன்? குற்றம் எவர் மீதும் இல்லை; என்மீதுதான். அழுவதால் இனிப் பயன் ஒன்றும் இல்லை. மாண்ட பசுங் கன்றுக்காகத் தானே மகனைக் கொல்வதும், மாண்ட மந்திரிக்காக நான் உயிர் துறப்பதுமே செய்யக் கூடிய தக்க செயலாகும்'' என்று முடிவு செய்து கொண்டான்.

விதிவிடங்கனை மகன் என்று நோக்கா மல், பசுங்கன்று விழ்ந்து இறந்த இடத்தில் சென்று படுத்திருக்குமாறு கட்டளையிட்டான். தந்தையின் நியா யத் தீர்ப்பைக் கேட்ட அம்மைந்தன் உள்ளம் உவந்தான். கன்று இறந்து கிடந்த இடத்துக்குச் சென்று மல் லாந்து படுத்தான். கண்களை மூடிக் கொண்டு சிவ சிந்தையுடன் இருந்தான். நகரத்து மக்கள் ''ஆ! ஆ!'' என்று அலறினார்கள். ''ஆண்டவனே! இந்தக் குழந்தையைக் காத்தருள வேண்டும்'' என்று கைகூப்பித் தொழுதனர். மன்ன னின் தீர்ப்பை அறிந்த விதிவிடங்கனின் தாய் மயங்கித் தரையில் விழ்ந்து தளர்ந்து அழுதாள்.

மகனின் உடம்பின் மீது தேரைச் செலுத்துவதற்காக மனுநீதிச் சோழன் தேர் ஏறி வருகிறான்; வானும் மண் ணும் கலங்குகின்றன; தேவர்கள் திகைத்து நிற்கிறார்கள்.

ஒருமைந்தன் தன்குலத்துக்
குள்ளானென் பதும்உணரான்
தருமம்தன் வழிச்செல்கை
கடனென்று தன்மைந்தன்
மருமம்தன் தேராழி
உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி
அரிதோ? மற்றெளிதோதான்!

மற்ற அரசர்கள் தருமம் போன வழி யில் போனார்கள். ஆனால், இம் மனு வேந்தன் போன வழியில் தருமம் செல் கிறது. கம்பர் பெருமான் இதனைப் பின்பற்றியே ''விதி முன்செல்ல தருமம் பின்னிரங்கியேக'' என்று பாடினார்.

''தியாகேசப் பெருமானே! என் உள் நின்று நீ உணர்த்திய வண்ணம் நீதியைச் செலுத்துகிறேன். குற்ற வாளிகளை இங்கேயே தண்டிப்பதற்குக் காரணம், அவர்கள் மறுமையில் நரகம் எய்தக் கூடாது என்பதேயாகும்; அத் தண்டனையைக் கண்டு மற்றவர்கள் குற் றம் செய்யாதிருக்கும்பொருட்டுமாகும். நான் என் மகன் மீது கொண்ட கருணை யினாலேயே அவனைத் தண்டிக்கிறேன். பெருமானே! என் மகனின் ஆவி, குற்றம் அகன்று நன்மை அடைய அருள் புரிய வேண்டும்'' என்று தியா கேசப் பெருமானை வணங்கித் தியா னித்து மல்லாந்து படுத்திருந்த மக னின் மார்பில் தேரைச் செலுத்தினான் மன்னன். அழகிய அரசிளங் குமரனின் திருமேனி தேர்க்காலில் அகப்பட்டு அரைபட்டு, அவனது ஆவி பிரிந்தது. நீதியைச் செலுத்தி விட்டான் மனு நீதிச் சோழன்!

மண்ணவர் எல்லோரும் கண்ணீர் மழை சொரிந்தார்கள். தேவர்கள், பூமாரி பொழிந்தார்கள். தேவர்க்கும் மூவர்க்கும் எட்டாத எம்பெருமான், உமையம்மையாரோடு விடை மீது தோன்றினார்.

தண்ணளிவெண் குடைவேந்தன்
செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார்
வானவர்பூ மழைசொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே
அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான்
வீதிவிடங் கப்பெருமான்

அகக் கண்ணுற் கண்ட ஆண்டவனைப் புறக் கண்ணுலும் கண்டார் அரசர். செஞ்சடையில் விளங்கும் பிஞ்சு மதியையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும், மரகதக் கொடி போன்ற மங்கை நல்லாளையும் கண் குளிரக் கண்டு கை கூப்பிஞர்.

"பூதநாயகனே போற்றி!
புராரியே போற்றி!ஞான


போதநா யகனேபோற்றி!
புண்ணியப் பொருப்பே போற்றி!

நாதநா யகனே போற்றி!
நங்கைநா யகனே போற்றி!

வேதநா யகனே போற்றி!
விமலனே போற்றி; போற்றி!"

என்று வாயாரத் துதித்தார் மன்னர். கருணை மழை பொழிந்தார் ஈசன். உடனே விதிவிடங்கன் உயிர் பெற்று எழுந்தான் என்று தானே எதிர்பார்க்கிறீர்கள்? அதுதானில்லை. விதிவிடங்கன் முதலில் உயிர் பெற்றெழுந்தால் மீண்டும் அவனைத் தேர்க் காலில் இட்டுச் சோழ மன்னன் கொன்று விடுவான்





என்று பரமன் நினைத்தார். எனவே, முதலில் கன்றை உயிர் பெற்று எழச் செய்தாராம் எம்பெருமான்! ஆன் கன்று உயிர் பெற்ற பின் சிறந்த கோன் கன்றான வீதி விடங்கனும் மதி மந்திரியும் உயிர் பெற்றெழுந்தனர். சிவபெருமான் மனுநீதிச் சோழனை நோக்கி, ''நெடுங்காலம் இந்நில உலகை நீ நீதி வழுவாது அரசு புரிந்து சிவபதம் அடைவாய்'' என்று அருளி விட்டு மறைந்தார்.

உயிர் பெற்று எழுந்த வீதிவிடங்கன் தந்தையார் தாள் மேல் வீழ்ந்தான். மன்னன் மைந்தனை எடுத்து, மார்போடு அணைத்து மனம் மகிழ்ந்தான். ''என் கண்ணே! காணக் கூடாத கண்ணுதற் கடவுளை உன்னால் கண்டேன். நீயே என் குலவிளக்கு. உன்னை ஒப்பார் விண்ணிலும் இல்லை; மண்ணிலும் இல்லை'' என்று புகழுரை கூறித் தழுவிக் கொண்டான். உயிர் பெற்று எழுந்த மதிமந்திரியாரும் மன்னனைத் தொழுதார். மன்னர் அவரைத் தழுவி அவரது அன்பைப் பாராட்டினான். தன் கன்றைக் கண்ட பசு மடி சுரந்து மோந்து மகிழ்ந்து நின்றது. கன்று பால் உண்டு பரிந்து நின்றது.

அடிபணிந்த திருமகனை
 ஆகமுற எடுத்தணைத்து
நெடிதுமகிழ்ந் தருந்துயரம்
 நீங்கினான் நிலவேந்தன்
மடிசுரந்து பொழிநிம்பால்
 வருங்கன்று மகிழ்ந்துண்டு
படிநனைய வரும்பசுவும்
 பருவரல்நீங் கியதன்றே

சிவபெருமான் திருவருளால் மாண்ட அனைவரும் உயிர் பெற்று எழுந்த அதிசயத்தைக் கண்ட மக்கள் இன்பக் கடலில் மூழ்கினார்கள். அரசமாதேவி அளவற்ற ஆனந்தம் அடைந்து மகனை அணைத்து மகிழ்ந்தாள். எல்லோருமாகத் திருக்கோயில் சென்று பெருங் கருணை புரிந்த பிறைமுடிப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வித்து வாயார வாழ்த்தி, தலையாரக் கும்பிட்டு நெஞ்சார நினைத்து முறைப்படி வழிபாடு செய்தனர். பின்னர் மகனுடன் அரியணைமீது இருந்து தன்னனியுடன் மண்ணகமெல்லாம் மாட்சிமையுற ஆட்சி புரிந்தான் மனுநீதிச் சோழன். (தொடரும்)

இந்தக் கை பாதுகாப்பை நாடுகிறது. மற்றொரு கை அதைக் கொடுக்கத் தயாராக இருக்குமா?



நீங்கள் 20 முதல் 30 வயதிற்குட்பட்டவராகவோ அல்லது 35க்குட்பட்டவராகவோ இருக்கலாம். உங்களுக்கு ஒரு வேலையிருக்கிறது, எதிர்காலமும் இருக்கிறது.

உங்களுக்கு கல்யாணமாகி விடுகிறது.

உங்கள் மனைவிக்கு, மற்றெல்லாவற்றையும் விட, பாதுகாப்பு அளிப்பது உங்கள் கடமை. பாதுகாப்பு என்பது குடும்பத்தில் உங்களுக்குள்ள பற்று, பொறுப்பு உணர்ச்சி மட்டுமல்ல. எதிர்காலத்திற்காக சேமிக்க விழையும் மனப்பான்மையும் வேண்டும்.

நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்கில் சேமிப்பது மிகச் சுலபம். ஐந்தே ரூபாய்களைக் கொண்டு ஒரு சேவிங்ஸ் பாங்கு கணக்கு ஆரம்பித்து விடலாம். ஆண்டுதோறும் 4% வட்டியும் சேர்ந்து உங்கள் சேமிப்பை வளர்க்கும்.

நீங்கள் பிற்பாடு அவ்வப்பொழுது போடும் தொகைகள் சொற்பமாக இருப்பினும் பாதகமில்லை. ஏனெனில் சிறிது சிறிதாகவே, உங்கள் குடும்பத்தினர் எதிர்பார்க்கும் பாதுகாப்பிற்கு வேண்டிய அளவிற்கு சேமிப்பு வளர்ந்துவிடும்.

நீங்கள் சேமிக்கும் பணம் எப்பொழுதும் உங்களுக்குக் கிடைக்கும். தேவையானபொழுது வாங்கிக் கொள்ளலாம்.

இதை மறவாதீர்கள், நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் உங்களுடைய பாங்கு.

நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் குடும்ப முழுவதற்கும் சேவை புரிகிறது.

ஞாபகமிருக்கட்டும், நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ்தான் உங்கள் குடும்ப பாங்க்!

நேஷனல் அண்ட் கிரிண்ட்லேஸ் பாங்க் லிமிடெட்

இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது ○ அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது
அஸோஸியேடட் பாங்குகள் : லாயிட்ஸ் பாங்க் லிமிடெட்
நேஷனல் புரொவின்ஷியல் பாங்க் லிமிடெட்

கிளைகள் : சென்னை : 3, நார்த் பீச் ரோடு; 378, நேதாஜி சுபாஷ் 'சந்திரபோஸ் ரோடு.' (லாயிட்ஸ் கிளை); 6, அரமனைக்காரத் தெரு; 158, மவுண்ட் ரோடு,
தூத்துக்குடி : 44, பீச் ரோடு; ஹைதராபாத் : அபித் ரோட்

காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும், புதுமையுடனும் இருங்கள்



அன்றலர்ந்த மலர்களின் புதுமையுடனும், சுகந்தத்துடனும்கூடிய காஷ்மீர் பொக்கே டால்க் உங்களைச் சூழ்ந்து பரவி இருக்கட்டும்...உங்களைச் சுற்றி அதன் குளுமையான, பூவிதழ்போன்ற மென்மையான ஸ்பரிசத்தையும், வசீகரிக்கும் நறுமணத்தையும் உணர்ந்து அனுபவியுங்கள். பலமணிகளுக்குப் பிறகும், காஷ்மீர் பொக்கே டால்க்கின் குன்றாத நறுமணமும், புதுமையும், மலர்க்கொத்துகள் போன்று உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள்.

காஷ்மீர் பொக்கே ஒரு உன்னதமான அழகுசாதன டால்க் மட்டுமல்ல. குழந்தைக்கும் ஏற்ற அற்புத டால்க். அது இருவருமே உபயோகிக்கக்கூடிய சௌகரியமான ஒரு பவுடர்!





காஷ்மீர் பொக்கே

ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ள டால்கம் பவுடர்

கால்கேட்டின் தரமான தயாரிப்பு

CB.6.21 TAM.



மலேசியா மாநாடு

சா. கணேசன் எம்.எல்.ஏ

மலேசியாவில், 'அனைத்து நாட்டுத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு' நடைபெறுகிறது; அதற்கு நீயும் வரவேண்டும்; ''படிமக்கலை இலக்கணம்'' பற்றி எழுத்துரை ஒன்று சமர்ப்பிக்கவும் வேண்டும்' என்று மகாநாட்டு அமைப்புக் குழுவிலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. மனமகிழ்வுடன் இசைந்தேன். சென்றேன்; கண்டேன்; பங்கு கொண்டேன். திரும்பினேன். இப்பயணம் பற்றிச் சில கட்டுரை எழுத வேண்டும்என்பது கல்வி ஆசிரியர் கட்டளை. அதன் பயனே இனி நீங்கள் அனுபவிக்கப் போவது.

'அனைத்து நாட்டுத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு' என்ற சொற்றொடர் தமிழ் அன்பர்க்குச் செவியைக் குளிர்விக்கும் அருந்தொடராகும். இந்திய மொழிகளில், பேசுவோர் எண்ணிக்கையால் 'பெரிய'மொழிகள் பல இருக்க, இந்தத் தமிழுக்கு எப்படி இந்த அதிர்ஷ்டம் அடித்தது? என்று வியப்படைந்தவர் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். பேசுவோர் எண்ணிக்கையின் அளவால் 'பெரிய' மொழி அல்ல என்றாலும், இலக்கிய—இலக்கண வளத்தாலும், பல்துறை நூல்களின் பரப்பாலும், மொழியின் செம்மையாலும், இயல்பாகவே வளர்ந்து ஆயிரம் பல்லாயிரம் ஆண்டுகளாக வழக்கில் நிலைத்துவிட்ட எண்ணற்ற சொற்களை உடைமையாலும், தமிழ் மெய்யாகவே ஒரு பெரிய மொழியாகும். அன்றியும், தமிழ்க் கல்வெட்டுக்களைச் சீனு போன்ற பழம் பெரும் நாடுகளில் முற்காலத்திலேயே அந்நாட்டவர் பொறித்திருப்பதிலிருந்து தமிழ் மொழியின் செல்வாக்கு எப்படிப் பரந்து விளங்கியது என்பதையும் நாம் எளிதில் ஊகித்தறியலாம்.

இவற்றுக்கெல்லாம் மேலாக, இந்திய மொழிகளில் தமிழ் மொழி ஒன்றுதான் வேறு நாடுகளிலும் நாட்டு மொழி—அல்லது ஆட்சி மொழியின் அந்தஸ்தை அடைந்து விளங்குகிறது. தமிழகத்தில் மட்டுமின்றி, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய பிற மூன்று நாடுகளிலும் தமிழ் அரசாங்க அங்கீகாரம் பெற்ற மொழியாக அரியாசனத்திலிருந்து வருகிறது.

மேலே: மலேசியா-கோலாலம்பூர் அனைத்து நாட்டுத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு மாநாட்டிற்குத் தமிழகத்திலிருந்து, மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து பிரதிநிதிகள் புறப்படுமுன்பு எடுத்த படம்.

எதிரில்: மலேசிய இயற்கைக் காட்சி.






தலைவர்
ஜான் பில்லியோஸா



பேராசிரியர்
எப். பி. ஜாகோபஸ் கூய்ப்பர்



பேராசிரியர்
மர்ரே பார்ன்சன் இமேனியால்

மலேசிய ஆளும் கணத்தவருள் இரு அமைச்சர்கள் தமிழர். அப்படியே சிங்கப்பூர் ஆளும் கணத்தவருளும் இரு தமிழ் அமைச்சர்கள் பணியாற்றக் காண்கிறோம். இவற்றையெல்லாம் பார்க்கும் போது தமிழ் மொழியின் அருமையை — பெருமையை — நாமும் நன்குணர முடிகிறது. அந்த உணர்வின் காரணமாய் நம் தலை நிமிர்ந்து வீற்றிருக்கவும் செய்கிறது. இல்லையா?

"கம்யூனிஸ்ட் சீனா நம் நாட்டை ஆக்கிரமிக்காமல் இருந்திருந்தால் இந்த அனைத்து நாட்டுத் தமிழ் மாநாடு நம் நாட்டிலேயே நடைபெற்றிருக்கும்" என்று தமிழக முதலமைச்சர் திரு பக்தவத்ஸலம் அவர்கள் கூறியதுடன் அமையாது அடுத்த மாநாடு தமிழகத்தில் நடைபெற வேண்டும் என்று மாநாட்டுத் தொடக்கத்திலேயே அழைப்பு விடுத்தமை எல்லார்க்கும் இன்பூட்டியது.

இம்மாநாட்டுக்கு அடிகோலிய பெருமை அனைத்து நாட்டுத் தமிழாராய்ச்சிக் கழகத்துக்கே (International Association of Tamil Research) உரியதாகும். அக் கழகத்தின் தலைவர்: பிரஞ்சு நாட்டுப் பேராசிரியரும் பாண்டிச்சேரி இந்தியத்துவக் கழக இயக்குநருமான ஜான் ஃபில்லியோஸா (Prof Jean Filliozat). அதன் உபதலைவர்கள் ஐவர். ஒருவர் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தின் சம்ஸ்கிருதப் பேராசிரியரான தாமஸ் பர்ரோ. (Thomas Burrow) மற்றவர், கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்தில் சம்ஸ்கிருத — மொழியியல் துறைகளின் பேராசிரியராக உள்ள மர்ரே பார்ன்சன் இமேனியால் (Murray Barnson Emeneau) மூன்றாமவர், உலாந்தா (Holland) நாட்டு லெய்டென் பல்கலைக் கழகத்துச் சம்ஸ்கிருதப் பேராசிரியரான ஃபிரான்ஸிஸ்கஸ் பெர்னார்டஸ் ஜாகோபஸ் கூய்ப்பர் (Franciscus Bernardus Jacobus Kuiper) நான்காமவர் மதுரைப் பல்கலைக் கழகத்துத் துணைவேந்தரும், பல்கலைச் செல்வரும், பன்மொழிப் புலவருமான பேராசிரியர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார். ஐந்தாமவர், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்— தமிழ்த் துறைத் தலைவர் மு. வரதராசனார். அதன் கூட்டமைச்சர்கள் இருவர். ஒருவர் செக் நாட்டுத் தலைநகர் ப்ராஹாவில் உள்ள சார்லஸ் பல்கலைக் கழகத்தின் திராவிடத் துறைப் பேராசிரியரான கமில் ஸ்வெலபில் (Kamil Zwelebil); மற்றவர் மலேயா பல்கலைக் கழகத்தின் இந்தியக் கலைத் துறைத் தலைவரும் பேராசிரியருமான சேவியர் எஸ். தனிநாயக அடிகள் (Xavier S. Thani-nayagam); அதன் பொருளாளர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முன்னாள் பொதுச் செயலாளரான திரு ஆ. சுப்பையா.

இம்மாநாட்டுக்கு அடிகோலிய பெருமை (IATR) அ. நா. த. க.வுக்கே உரியதெனப் பொதுவாகச் சொன்னாலும் சிறப்பாக அப் பெருமைக்குரியவர்கள் தனிநாயக அடிகளும், திரு சுப்பையாவும் என்பதை மறக்க முடியாது.

இம்மாநாட்டுக்குச் சுமார் முப்பத்தைந்து நாடுகளிலிருந்து பெருமக்கள் (Delegates) வருவதாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பலவேறு காரணங்களால் சுமார் இருபத்திரண்டு நாடுகளிலிருந்து சுமார் 120 பெருமக்களே (பிரதிநிதிகளே) வந்திருந்தனர். இதில் மூன்றில் ஒரு பங்குக்கு மேற்பட்டவர்கள் தமிழகத்திலிருந்து வந்தவர்கள்.

11—4—66லிருந்தே பெருமக்கள் மலேசியாவின் தலைநகரும், மாநாடு நடைபெறுமிடமுமான கோலாலம்பூருக்கு வரத் தொடங்கி விட்டனர். குறிப்பிட்ட சிலரைத் தவிர மற்றையெல்லோருக்கும் மூன்றாவது மாணாக்கர் விடுதியில் (Third Residential College) தங்க இடம் தந்தனர். அதன் முதல்வர் (Principal) திருமதி சந்தோஷம் அவர்கள் உணவு முதல் அனைத்துக்கும் வழி வகை செய்திருந்தார். இந்த இடத்தில் ஒரு விளக்கம் இன்றியமையாததாகும். 'ரெஸிடென்ஷியல் காலேஜ்' என்றால் கல்லூரி மாணாக்கர் விடுதி என்றும், 'பிரின்ஸிபல்' என்றால் விடுதித் தலைவர் (வார்டன்) என்றும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அது மாணாக்கர் விடுதிதான் என்றாலும் ஒவ்வோர் அறையும் அருமையான முறையில் படுதாக்களுடன், மேசை, நாற்காலிகளுடன் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. மேசைகள் கட்டில்கள், அலமாரிகள், புத்தகத் தாங்கிகள் எல்லாம் பளபள வென்று வைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கட்டிலிலும் 'டன்லப் பில்லோ' மெத்தையும் தலையணையும் தூய்மை

யாகக் கிடத்தப்பட்டிருக்கின்றனா? ஒவ்வோர் அறையிலும் 48'' மின்சார சிவிறி சுழன்று கொண்டிருக்கிறது. (என்ன 'சிவிறி' யா? என்று யோசிக்கிறீர்களா? அல்லது அச்சுக் கோப்பவர் தடுமாற்றம் செய்து விட்டார் என்று ஐயமடைகிறீர்களா? அப்படி எல்லாம் எண்ணி விடாதீர்கள். சிவிறி என்ற சொல்லே சரியானது; பழைமையானது. பின்னே அது மாறி விசிறி என்றாயிற்று என்பதைத் தமிழாராய்ச்சி மாநாடு நடந்த பிறகாவது நாம் தெரிந்து [கொள்ள வேண்டாமா? ''தெரிந்து கொள்வதிருக்கட்டும், புரிந்து கொள்ள விடுங்களய்யா!'' என்று சொல்கிறீர்கள்! சரி, அப்படியே ஆகட்டும்.)



லட்சுமிகாந்தன்

அறைகளின் வரிசையில் குளியலறைகள் பளிங்குச் சில்லுகள் பதிக்கப்பட்டுக் காத்துக் கிடக்கின்றன. காலைக் கடன் கழிக்கவோ, முகக்ஷவரம் செய்து கொள்ளவோ எல்லாம் அருமையான வசதிகளுடன் தூய்மையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. குளிக்க வேண்டுமா ? எல்லா அறைகளிலும் வெந்நீர், தண்ணீர் குழாய்கள் தாமாகவே இயங்கு முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. எவ்வித கவலையுமின்றித் தாராளமாக எவ்வளவு தண்ணீரை — ஆம், வெந்நீரையும் தான் — வேண்டுமானாலும் யாரும் பயன் படுத்தலாம்.

படியிறங்கினால் குளிர்நீர் குழாய்த் தொட்டி (Water Cooler) நம் வாயை எதிர் பார்த்தே ஏங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அருகில் பிடித்துப் பருக ஒரு குவளை தான் இல்லை. என்ன செய்வதென்று விழித்துக் கொண்டிருந்த போது பக்கத்திலே வந்த அன்பர் ஒருவர் வித்தையைக் கற்பித்தார். வாயை, மேல் நோக்கிய சிறு குழாய்க்கு நேரில் வைத்துக் கொண்டு பக்கத்தில் உள்ள ஒரு சிறு பொத்தானை அழுத்தினால் குளிர்நீர் நேரே பீய்ச்சிக் கொண்டு வந்து நம் வாயினுள்ளே புகுந்து தொண்டையைக் கடந்து வயிற்றையே குளிர வைத்துவிடுகிறது. பக்கத்தில் ஒரு குவளையை வைத்தால் எல்லாரும் அதை வாய் வைத்துக் குடித்து எச்சிற்படுத்தி விடுவார்களாம். அதனால் நோய் தொற்றிக் கொண்டு விடுமாம். ஆகவே தான் இந்த முறையைக் கையாளுகிறார்களாம்.


இவை யெல்லாம் மாநாட்டுப் பெரு மக்களுக்காகச் செய்த வசதிகள் என்று எண்ணி விடப்படாது. இந்த எல்லா அமைப்புக்களும் மாணுக்கர்கட்கென்றே நிரந்தரமாகச் செய்யப்பட்டவை. ஒவ்வோர் அறையிலும் சுவரில் உள்ள கரும் பலகை இல்லா விட்டால் அருமையான ஒரு ஹோட்டலாகவே கருதக் கூடும். உணவுக்கூடமும், அங்கு காணப்படும் மேஜை நாற்காலிகளும்தான் அப்பப்பா ! என்ன பளபளவென்று கண்ணைப் பறிக்கின்றன. என்ன சுத்தம்! என்ன அழகு! காசைக் காசாகவா பார்க்கிறார்கள்! அப்படி அள்ளிக் கொட்டி, வருங்காலப் பெரியவர்களுக்கு இப்படியெல்லாம் வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

இவற்றை அமைத்துக் கொடுத்த நிர்வாகத்தைப் பாராட்ட வேண்டும்; பலரும் வியந்து பாராட்டினார்கள். மேலும், ''செல்வ வளமிருந்தால் எதைத்தான், எப்படித்தான் செய்ய முடியாது?'' என்று திறனாய்வு செய்தவர்களும் இல்லாமலில்லை. ஆனால் நான் நினைத்ததைத் தெரிவிக்காமல் இருக்க முடியுமா? இவ்வளவு செய்து கொடுத்ததைப் பாராட்ட வேண்டும்தான். ஆனால் அதற்கெல்லாம் மேலாக மாணுக்கர்களைத்தான் பாராட்ட வேண்டும். எங்கும் அழுக்கு, கிறல்கூட இல்லாமல் எவ்வளவு ஒழுங்காக மாணுக்கர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள்! சுவர்களிலோ குளியலறை, கக்கூசு முதலிய எங்குமே பென்சிலால்கூடக் கிறுக்கவில்லை! எந்தப் பண்டத்துக்கும் சேதம் விளைவிக்கவில்லை. எவ்வித அசம்பாவிதமும் எங்கும் காணக் கிடைக்கவில்லை. இதை எண்ணும் போது எனக்கு வெறும் மகிழ்ச்சி ஏற்படவில்லை ; உள்ள நிறைவே ஏற்படுகிறது.


பேராசிரியர்
தனிநாயகம் அடிகள்



டாக்டர்
மு. வரதராசனுர்



பன்மொழிப் புலவர்
தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர்



''வாழ்க, மாணாக்கர் பண்பாடு!'' என்று வாய் மணக்க வாழ்த்தவும் செய்கிறேன்.

அடுத்துப் போக்குவரத்து வசதியைக் குறிப்பிட வேண்டும். சில கார்கள், இரண்டு டாக்ஸிகள், மூன்று பஸ்கள் செம்மையாகப் பணியாற்றின. கூடிய வரை எல்லாரையும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் இட்டுச் செல்ல எவ்வளவோ பாடுபட்டன. ஒருவர் வந்தால் மற்றவர் வந்து சேர மாட்டார். பஸ் நிர்வாகிகள் பாடாய்ப் பட்டு எப்படியும் இழுத்து வந்து, விடாமல் பெய்து கொண்டிருக்கும் மழையிலும் தாம் நனைந்து கொண்டு விருந்தினரை நனைய விடாமல் பஸ்ஸுக்குள் கொண்டு சேர்த்த நேர்த்தியை நெஞ்சாரப் பாராட்ட வேண்டும். எல்லா நிகழ்ச்சிகளும் ஓரிடத்தில் நிகழவில்லை. தொடக்க விழா நடந்தது ஓரிடத்தில். விருந்து நடந்தது மற்றோரிடத்தில். கூட்டம் நடப்பது பிறிதோரிடத்தில். இப்படியாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்றன. ஒன்றுக்கொன்று மைல்கணக்கில் விலகியிருக்கும். என்றாலும் எல்லாரையும் கொய்து பிடித்துக் கொண்டு போய்ச் சேர்த்து வைக்கும் திறமையையும் பொறுமையையும் கண்டு மகிழவும் வாழ்த்தவும் கொடுத்து வைத்தவர்களுள் நானும் ஒருவன். இவ்வளவுக்கும் அடிப்படையாய் இருந்து அரும்பணியாற்றியவர் வழக்கறிஞரான திரு லட்சுமிகாந்தன் என்பதைப் பலர் நேரடியாக அறியமாட்டார்கள். நிரம்பப் பேசாமல், படாடோபம் இல்லாமல் பதவிசாகப் பணியாற்றும் இயல்பினர் அவர். தொழிலாளர் அமைச்சரான திரு மாணிக்கவாசகம் அவர்களின் தம்பியான அவர் எவ்வளவு அந்தரங்கமாகப் பிறர் அறியாமல் பணியாற்றுகிறார் என்பதை அறிய வேண்டுமா? இதோ ஓர் எடுத்துக் காட்டு. 11—4—66 இரவு சுமார் ஒன்பதரை மணிக்குக் கோலாலம்பூர் விமானத் திடலுக்கு வந்து சேர்ந்த என்னையும், சங்கீத பூஷணம் திரு எஸ். ராமநாதனையும் என் நண்பர் திரு அன்பு நடனம் 'ஹோட்டல் மெஜஸ்டி'க்கு அழைத்துச் சென்று தங்க வைத்தார்.

அன்றிரவை அங்கு கழித்தோம். காலையில் என் மகளும் மாப்பிள்ளையும் வந்து எங்களை ஒரு நண்பர் வீட்டுக்கு உணவருந்த அழைத்துச் சென்றார்கள். நாங்கள் உணவருந்தி விட்டு ஹோட்டலுக்குத் திரும்பி வந்தோம். எங்கள் அறைச் சாவியை நிர்வாகியிடம் கேட்டோம். அவர், ''யாரோ வந்து உங்கள் சாமான்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்'' என்று கூறினார். நான் உண்மையிலேயே திடுக்கிட்டுப் போய்விட்டேன். திரு ராமநாதன் வீணையும் போய் விட்டதே என்று இடிந்தே போய்விட்டார் எனக்கோ ஆத்திரமும், கோபமும் பொத்துக் கொண்டு வருகின்றன. வந்து என்ன செய்ய? ஊர் பேர் தெரியாத ஒரு சீனனிடம் சண்டையிட்டு மரியாதையாகத் தப்பிக்க முடியுமா, என்ன? எனவே, சினத்தை விழுங்கி விட்டு, ''எங்கள் சம்மதமின்றி எப்படி எங்கள் உடைமையைப் பிறர் எடுத்துக் கொண்டு போக அனுமதிக்கலாம்?'' என்று கேட்டோம். அவன் ஒரு சிறு துண்டுக் கடிதத்தைக் கொண்டு வந்து தந்தான். அதில்,

> ''உங்கள் சாமான்களை நானே எடுத்துச் சென்று, (Third Residential College) அறையில் வைத்திருக்கிறேன். சந்தேகமிருந்தால் 54—211க்குப் போன் செய்க !
>
> —காந்தன்.''

என்றிருந்தது. கூடவந்த நண்பர்கள் 'காந்தன் என்பவர் நம் மந்திரி மாணிக்கவாசகத்தின் தம்பி. ஒரு பாரிஸ்டர். அருமையான அன்பர் எல்லாம் சரியாயிருக்கும். இனி நாம் இங்கிருக்க வேண்டாம். நேரே தேர்டு ரெஸிடென்ஷியல் காலேஜுக்குப் போகலாம் என்றார்கள். புறப்பட்டோம். அங்கே எங்கள் பொருள்கள் யாவும் பத்திரமாக இருந்தன என்பதைச் சொல்லவா வேண்டும்? (தொடரும்)

வயது சிறிது! சாதனை பெரிது!

விக்டர் ஹூகோ பிரஞ்சு அகாடமிக்கு முதல் தடவையாகப் பாட்டொன்றை எழுதி அனுப்பினார். அப்போது அவருக்கு வயது பதினைந்து !

மகாவீரர் அலெக்ஸாண்டர் தம் தந்தையின் கிரேக்கப் படைகளுக்குத் தலைமை வகித்து நடத்தியபோது, அவருக்கு வயது பதினாறு!

கலிலியோ பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரத்தைப் பற்றிய உண்மைகளைக் கண்டு பிடித்து வெளியிட்டபோது அவரது பிராயம் பதினேழு !

ஜோன் ஆப் ஆர்க் பிரெஞ்சுப் படைகளுக்குத் தலைமையேற்றுப் போர் முரசு கொட்டினாளே, அப்போது அப்பெண்மணியின் வயது இதுதான் — பதினெட்டு!

ஜார்ஜ் ஸ்டீபன்சன் நீராவி மூலம் ஓடும் ரயில் என்ஜினை உருவாக்கிக் கொண்டிருக்கையில், ஸ்டீபன்ஸன் அடியெடுத்த வயது பத்தொன்பது !

வாஷிங்டன் இர்விங் புரட்சி மிகுந்த தம் கருத்துக்களை, கட்டுரைகள் மூலம் வெளியிட்டவரின் வயது இருபது !

பீத்தோவன் இசை மேதையாக விளங்கி, புகழ்ச் சிகரத்தை அடைந்த போது அவர் வயது இருபத்தொன்று!

ஆல்பிரட் நோபல், நோபல் பரிசைத் தோற்றுவித்தவர், வெடிமருந்தைக் கண்டு பிடித்தார் ! அப்போது அவரது வயது இருபத்திரண்டு !

ஜூலியஸ் ஸீஸர் ஐரோப்பாவையே நடு நடுங்க வைத்து, போர்க்களத்தில் அமோக வெற்றி பெற்று, பெரிய வரவேற்பும் கொடுக்கப்பட்ட போது வயது இருபத்து மூன்று!

ஸர் ஐஸக் நியூட்டன் பூமிக்கு ஆகர்ஷண சக்தி உண்டு என்பதை நிரூபித்தபோது அவரது வயது இருபத்துநான்கு!

—ஏ. சுவாமிநாதன்

ஓடையும் மலரும்

சலசலவென்று ஓடை ஓடுகிறது. தொடுவானத்தை நோக்கி விரைகிறது. அதன் இரு புறங்களிலும் அடர்ந்த சோலை பச்சென்று பூத்துக் குலுங்குகிறது. ஓடை வளைந்து வளைந்து ஓடுகிறது. நீர்ப் பரப்பிலே காய்ந்த இலைச் சருகுகள் மிதந்து செல்கின்றன. ஆங்காங்கே சுழிக்கும் நீர்ச் சுழல்களில் மிதக்கும் இலைகள் தட்டாமாலை சுற்றுகின்றன. மெல்லிய காற்று ஓடைப் பரப்பில் தவழ்ந்து கோலமிடுகிறது.

அந்தி நேரம். வானம் இருட்டிக் கொண்டு நிற்கிறது. பளீர் பளீரென மின்னல் வெட்டுகிறது. தொடர்ந்து சடசட சடாரென இடிமுழக்கம். உலகம் குலுங்குகிறது. அண்டங்கள் இடிவதுபோல் சத்தம் கேட்கிறது. இதை யெல்லாம் இலட்சியம் செய்யாமல் ஓடை பாடிக் கொண்டே ஓடுகிறது.

ஓடைக் கரையிலே அடர்ந்த புதர். கோரைப் புதர். அசையும் காற்றும் அசைகின்றது. நீரோட்ட வேகத்தாலும் அவ்வப்போது ஆடுவதுண்டு.

கோரைகளுக்கு நடுவே ஒரு செடி தலையை நீட்டிக் கொண்டு நிற்கிறது. அதன் பெயர் தெரியாது. தாழ்ந்து வணங்கி நிற்கிறது. அதன் முடியிலே ஒரு வண்ணப் பூ. பளிச்சிடும் நிறம். குங்கும நிறத்திலே ஐந்து இதழ்கள்.

இம்மலருக்கு இவ்வளவு அழகிய வண்ணத்தை யார் தடவி விட்டார்கள்?

ருத்ரன் தன் கரத்தால் உமையின் கன்னத்தைத் தடவியதும் பராசக்தியின் முகம் இப்படித்தான் ஆகுமோ ?

சிவந்த நிறமுடைய தேவியின் முகத்தைத் தொட்டு விட்டு இம்மலரைத் தடவினுனே பரமன் ?

விஞ்ஞான அறிவு கொண்டு காரண காரியம் கொண்டு அறிய முடியாது.

அம்மலர் நீரோடையின் மேற்பரப்பின் அருகிலே படிந்தது. தன் மேனியழகை நீரிலே பார்த்தது. பசுமைத் தண்டிலே செம்மை வதனம். தன் எழில் சிறப்பைக் கண்டு சிலிர்த்துக் கொண்டது.

''ஹஹஹஹஹா...ஹா!''

சிரிப்பொலி கேட்டது.

மலர் அழகு பார்ப்பதில் மெய்ம் மறந்து நின்றதால் இந்தச் சிரிப்பொலி கேட்கவில்லை. உறுமும்



தேதியூர் பாலு

இடிச் சத்தமே கேட்காத போது இந்த நகைப்பொலியா கேட்கும்?

''உஸ்....'' என்றது காற்று. மலர்ச் செடி அசைந்தது. ஆடியது. நீர்ப் பரப்பைத் தொட்டு நிமிர்ந்தது.

மீண்டும் தன் வனப்பை ஓடையிலே கண்டு ரஸிக்கத் தொடங்கியது மலர்.

''கல.....கல.....கல.......!''

மீண்டும் சிரிப்பொலி.

''யார் சிரித்தது?'' மலர் முகத்தைத் திருப்பாமலே கேட்டது.

''அழகு பார்க்கிறாயா, என் மேனியிலே? பார், நன்கு பார்.....''

''யாரது?''

''ஏன் என் அருகிலேயே நிற்கிறாய்? என்னாலேயே உயிர்க்கிறாய்..... என்னால் வனப்பும் பெறுகிறாய். என்னையே 'நீ யார்?' என்று கேட்கிறாய்.''

மீண்டும் கலகலவென்ற நகைப்பொலி தொடர்ந்து கேட்டது.

''ஓடையா.....? ஓடை நீரா?''

''ஓடையில்லா நீரா.... நீரில்லா ஓடையா? இதென்ன இப்படி என்னைப் பிரித்துப் பார்க்கிறாய்? நான் ஓடை. உனக்கு உயிர் ஊட்டுகிறேன். உன்னை வளர்க்கிறேன். உன் தாய்க்குப் பசுமை தருகிறேன். உனக்கு எழில் தருகிறேன். எல்லாம் நான்...நான் நானே !''

மீண்டும் சிரிப்பு. ஓடிக் கொண்டே ஓடை உரையாடுகிறது.

''என்ன.... நீயா எனக்கு உயிரூட்டுகிறாய்? எனக்கு வண்ணமளிப்பது நீயா?'' என்று திகைப்புடன் வினவியது மலர்.

''ஆம்.... ஐயமேன் மலரே...ஐயம் ஏன்?'' என்றது ஓடை.

மலர் ஓடையின் விளக்கத்தை ஆவலுடன் கேட்கும் பாவனையில் தணிந்தது.

''உனக்கு மட்டுமல்ல.... என் அரவணைப்பில் இருக்கும் எல்லா ஜீவராசிகளுக்குமே உயிர் தருபவன் நான். நானின்றேல் இந்தச் சோலை ஓங்கி வளருமா? அந்த நெடிய மரங்கள் நெடிது வளருமா? பச்சைப் புல் தலை நீட்டுமா ? பால் தரும் பசுதான் அசை போட்டு உறங்குமா? செந்நெல் எங்கே? கவைக் கன்னல் எங்கே....? கனி மரம் யாரால் கனி தரும்? என்னால்... என்னால்...''

உரக்கப் பேசியதால் சலசலப்பு உண்டாயிற்று. ஓரிரு கயல் குஞ்சுகள் துள்ளிக் குதிக்கின்றன.

''எனக்கு உயிர் தருவது நீ..... எனக்கு வண்ணமளிப்பது நீ.... என் தாயின் மேனிக்குப் பசுமை தடவுவது நீ.... அப்படியா?''

''ஆம்.... ஆம்.... என் அண்டையிலே நின்று கொண்டு இதுகூடத் தெரியாத ஜடம் நீ......''

சிரித்தது ஓடை. சிதறியது தண்ணீர். விரித்தது மலர். தெறித்தது மது.

''ஆமாம்..... எனக்கு உயிர் தந்தாய் நீ. ஒத்துக் கொள்கின்றேன் ஓடையே. ஒத்துக் கொள்கிறேன்.... உனக்கு நன்றி செலுத்துகிறேன்.''

கருவம் ஓங்கியது ஓடைக்கு. கரையின் மேல் மோதியது. சிறு இடிபாறை தொப்பென நீரில் விழுந்தது. அதில் இருந்த மண் கரைந்து நீரில் சிற்றலை பேரலையாகி நீர்ப் பரப்பில் வட்டம் போட்டது.

''எனக்கோர் ஐயம்.''

''என்ன ஐயம்....? ஐயப்படுபவன் அழிவான் மலரே.... மறை வாக்கு இது.''

''வேறொன்றுமில்லை..... எனக்கு உயிர் தருவது நீ. உனக்கு உயிர் தருவது யார்?'' என்று கேட்டது மலர்.

''ம்.... நான் எனக்கு....ம்..... உயிர் தருவதா.... எனக்கு.....'' பல குமிழ்கள் நீர்ப்பரப்பில் குமிழியிட்டன.

''சட சட..... சட்டச்சடா....''

இடி முழக்கம் வானைப் பிளக்கிறது. இந்திரன் இடியையும் மின்னலையும் காட்டிக் கண்ணுறுத்த விளையாடுகிறான். மேகங்கள் நெருங்குகின்றன.

''சள....சள....சள......''

நீர்த் துளிகள் வானிலிருந்து ஓடை மேல் விழுந்து ஜலதரங்கம் வாசிக்கின்றன.

இடி ஓய்ந்தது. மின்னல் ஓய்ந்தது.

மெல்லிய காற்று மட்டும் ஜிலுஜிலு வென்று வீசுகிறது.

'சோ...' என மழை கொட்டுகிறது.

பூமிக்குத் தண்ணீர் கிடைக்கிறது.

பிறகு இரவு நீங்கிச் சூரிய உதயம் ஆகிறது.

ஒளி தோன்றுகிறது. அதைப் பார்த்து ரிஷிகள் கைகூப்பி மந்திரம் பாடுகின்றனர்.

பறவைகள் பாடுகின்றன. பூக்கள் மலர்கின்றன. நீரும் காற்றும் சிரிக்கின்றன.

ஓடை அமைதியாய் ஓடுகிறது.

மலர் ஆசையாகத் தன் முகத்தை நீர்ப் பரப்பில் பார்த்துக் கொள்கிறது.

விற்பனையாளர் (மற்றவரிடம்): மலிவு விலையிலே உருளைக் கிழங்கு என்று சொன்னவுடனே ஓடி வந்தவங்க நாற்றம் தாங்காமே ஓடிப்புட்டாங்க! நாம அப்படி ஓட முடிகிறதா? மூக்கைப் பிடித்துக் கொண்டு நாம உட்கார வேண்டியிருக்கே !







இந்தியாவில் வைசிராயாக இருந்த லார்டு வெல்லிங்டன் பிரபு ஒரு சமயம் கனடாவுக்கு கவர்னர் ஜெனரலாக இருந்தார். டோரோன்டோ என்ற நகரத்துக்குத் தாம் ஒரு குறிப்பிட்ட நாளில் வருவதாக அந்நகரத்தின் மேயருக்கு அறிவித்திருந்தார். முதன் முதலாக அப்போதுதான் கவர்னர் ஜெனரல் என்ற முறையில் வருவதால், மேயர் பெரிய வரவேற்புக் கொடுக்க விரும்பினார். ஆனால் அதே நாளில், அதே நேரத்தில், டோரோன்டோவில் பிறந்த ஒரு பிரபல ஹாலிவுட் நடிகை தமது பிறந்த ஊருக்கு வருவதாக இருந்தது. தங்கள் ஊரில் பிறந்த ஹாலிவுட் நடிகை அதே நேரத்தில் வருவதால், நகர மக்களும் தாமும் நடிகையை வரவேற்கச் செல்வதாகவும் கவர்னர் ஜெனரல் தாம் வரும் நேரத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று மேயர் கேட்டுக் கொண்டார். ஆனால் வெல்லிங்டன் உறுதியானவர். தாம் வரும் நேரத்தை எக்காரணம் கொண்டும் மாற்ற முடியாது என அறிவித்து விட்டார். ஆகவே வேறு வழியின்றி டோரோன்டோ நகர மேயரும், மக்களும் வெல்லிங்டனை வரவேற்றிருப்பார்கள் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை, வரவேற்பு பெற்றது ஹாலிவுட் நடிகைதான்! பாவம், வெல்லிங்டன்! —விஜய்

நடப்பதா, கடப்பதா?



வயலுக்கு நீர் பாய்ச்சும் ஒரு வாய்க்காலைக் கடந்து போவதற்கு உதவியாக அதன் மீது ஒரு மூங்கிற் பாலம் அமைக்கப்பட்டிருந்தது. அந்த மூங்கிற் பாலத்தின் மீது நடந்து போகப் பழக்கமும் சாமர்த்தியமும் பெற்றிருந்தார் காந்தியடிகள். நவகாளி ஜில்லாவில் ஹிந்து முஸ்லிம் மக்களிடையே அமைதி ஏற்படுத்த முயன்ற வண்ணம் ஸ்ரீராம்பூரில் முகாம் போட்டிருந்த சமயம் அது.

காந்தியடிகள் கைக் கோலை ஊன்றிக் கொண்டும் அந்தக் கோல் இல்லாமலும் மூங்கிற் பாலத்தின் மீது தாம் நடந்து செல்லும் வித்தையை ஜவாஹர்லால் நேருவுக்குக் காட்டினார். ஜவாஹர் சிரித்தார். 'தாங்கள் நினைப்பது போல் இந்த வாய்க்காலைக் கடப்பது அவ்வளவு சுலபமில்லை' என்றார் காந்தியடிகள்.

உடனே ஜவாஹர், 'இதோ பாருங்கள்' என்று அந்த வாய்க்காலை ஒரே தாண்டாகத் தாண்டிக் கடந்து விட்டார்.

(பி. ஸ்ரீயின் 'நேர்மையே அழகு' சிறு சம்பவங்களிலிருந்து)

தகவல்: இரத்தினம்.

அதிசயங்கள்!



❀ பெட்ரோலில் நீந்த முடியாது. காரணம் ஒரு கன அடி பெட்ரோலின் எடை 6.3 பவுண்டு ஆகும். நீரின் நிறையோ ஒரு கன அடிக்கு 8 பவுண்டு. நீரைவிட பெட்ரோல் மிகவும் இலேசாக இருப்பதால் பெட்ரோலில் மிதந்து மனிதன் நீந்த முடியாது.

❀ என்ன, ஆச்சரியமாக இருக்கிறதா? எரியும் பொருளில் தண்ணீரை ஊற்றினால் அது அணைந்துவிடும் என்பது உண்மை. ஆனால் மொட்டாலிக் பொட்டாசியம் என்ற இரசாயனப் பொருளில் கொஞ்சம் தண்ணீரை ஊற்றினால் அது குபீர் என்று தீப்பற்றிக் கொள்ளும்.

- இரா. சுந்தரராஜன், சிவகங்கை.

'பூ, ஒரு அங்குலம்'

❀ 'ஓர் அங்குல மழை பெய்தது' என்று பத்திரிகைகளில் செய்தி படிக்கும்போது, நாம் அதைச் சர்வ சாதாரணமாக எண்ணுகிறோம். ஆனால் ஓர் அங்குல மழை பெய்தது என்றால் ஓர் ஏக்கரா நிலப் பரப்பில் 113 டன் எடை தண்ணீர் கொட்டியிருக்கிறது என மதிப்பிடல் வேண்டும்.



நீண்ட பிரசங்கி

❀ தென் ஆப்பிரிக்கா மலை ஜாதியாருக்கு நீண்ட பிரசங்கங்களைப் பொறுமையாகக் கேட்டுப் பழக்கம் இல்லை. அவர்கள் பிரசங்கத்தின் நீளத்தைக் குறைக்க இப்படி ஒரு விதியை அநுசரிக்கிறார்கள்.

பேசுபவர் ஒற்றைக் காலில் நின்றபடி பேச வேண்டியது. விழுந்துவிட்டால் பேச்சை நிறுத்திவிட வேண்டியது! நாமும் முயன்று பார்த்தால் என்ன?

ஆதாரம்: 'இங்கிலீஷ் டைஜஸ்ட்' - என். எஸ். எஸ்.



மாடுகளின் மீது விளம்பர வாசகம்

அந்த மனிதரிடம் தன் வியாபாரத்தை விளம்பரப்படுத்தப் போதிய பொருளாதார வசதி இல்லை. ஆனாலும் அவரிடம் மனோ வேகம் தன் வியாபார லட்சியத்தில் அதிகரித்ததேயன்றிக் குறையவில்லை.


இந்த நிலையில் அவருக்கு ஒரு புதிய விளம்பர யோசனை உதித்தது. பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப் பணம் வேண்டும். பணம் கேட்காத ஒன்றின் உருவம் தென்பட்டது. அவ்வளவுதான்! செயல் முறைக்கும் வந்து விட்டார்!

ஆம், தெருவில் திரிந்த வெள்ளை நிற மாடுகளின் முதுகில், தம் பெயர் கொண்ட தேயிலையைக் கரித்துண்டால் எழுதத் தொடங்கினார்! அன்று இப்படி விளம்பரம் செய்த மனிதர் யார் தெரியுமா?

அமெரிக்காவுக்கு ஏழையாகச் சென்று, பின்னர் வணிக மன்னர்களில் ஒருவராகவும், அமெரிக்கக் குபேரர்களில் ஒருவராகவும், வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒருவராகவும் திகழ்ந்த திரு லிப்டன்தான்!

இன்று லிப்டன் தேயிலை விளம்பரம் உலகின் எல்லாப் பெரிய பத்திரிகைகளிலும் வெளிவருகின்றன!

ஆதாரம்: 'வாழ்க்கையில் வெற்றி' தகவல்: ஏ. சுவாமிநாதன்







கழுதை கெட்டால் குட்டிச்சுவர் என்கிறோம். ஏன் பின்வருபவைகளையும் இம்மாதிரி சொல்லக் கூடாது?

கழுதை கெட்டால் குட்டிச் சுவர்; காளை மாடு கெட்டால் எலக்டிரிக் கம்பம்; எருமை கெட்டால் பாசிக் குளம்; நாய் கெட்டால் பூட்டோ; மாணவன் கெட்டால் சினிமாக் கொட்டகை; டிரைவர் கெட்டால் புளியமரம்; சீசன் கெட்டால் ஜலதோஷம்; உணவு கெட்டால் பி.எல். 480; மனைவி கெட்டால் மாதர் சங்கம்; மந்திரி கெட்டால் ராஜிநாமா; நெஞ்சு கெட்டால் நஞ்சு; சாது கெட்டால் பேமினி.

- எஸ். கே. சண்முகம்.



தங்கக் காசு

இச்சம்பவம் ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது. அக்காலத்தில் குற்றால மலையில் அரசாங்க சுற்றுலா மாளிகை ஒன்று இருந்தது. அம்மாளிகைக் காவல்காரனுக்குப் பணத்தின் மீது பற்றுதல்.

ஒரு நாள் ஒரு பெரியவர் வந்தார். அவர் பெரிய பணக்காரர். ஆயினும் நிறைந்த மதிப்புடன் கூடியவர். காவல்காரனிடம் தங்க இடம் கேட்டார். அவனும் வழக்கம்போல் உரிய பணத்துக்கு மேல் அதிகமாகப் பணம் கேட்டான். அவர் சிறிது தயங்கினார். அதே சமயம் மற்றொருவர் இவன் கேட்கும் செப்புக் காசுகளைவிட அதிகமாக வெள்ளிக் காசுகள் தருவதாகக் கூறினார். இது கேட்ட முதல் பணக்கார வயோதிகர், 'நான் தங்கக் காசு தருகிறேன்' என்று கூறினார். காவல்காரனுக்கு அளவில்லா மகிழ்ச்சி! குதூகலத்துடன் அவர் தங்க ஒப்புக் கொண்டான். அவ்வயோதிகர் இரண்டு நாட்கள் தங்கினார். காவல்காரன் தனக்குக் கிடைக்கப்போகும் தங்கக்காசுகளை எண்ணி அவரை மிக நன்கு கவனித்துப் பணிவிடைகள் செய்தான். அவர் மாளிகையைவிட்டுப் புறப்பட்டார். 'ஐயா, தங்கக் காசு.......' என்று நீண்டு இழுத்தான். உடனே அவர், 'இதோ, தருகிறேன்' என்று கூறிப் பணப்பையை எடுத்தார். இரண்டு நாள் விடுதியில் தங்க உரிய பணத்தைச் சரியாக எண்ணி அவனிடம் கொடுத்தார். அவன் விழித்தான். 'இங்கு தங்குவதற்கு உரிய காசை அதாவது தங்கக் -- காசைக் கொடுக்கிறேன் என்றுதானே கூறினேன். உரிய கட்டணம் கொடுத்துவிட்டேன் அல்லவா? மிக்க நன்றி! வருகிறேன்' என்று கூறிக் கிளம்பி விட்டார்.

--பி. உ. முகமது உசேன்


நாளுக்கு நாள்...
உங்கள் மேனியெழிலே
ஓங்கச் செய்வது
ரெக்ஸோனு
அழகுசாதனத் தைலங்கள் இணைந்த விசேஷக் கலவை
யாகிய 'கேடில்' அடங்கியது ரெக்ஸோனு ஒன்றுதான்.
பூரிக்கும் இன்ப நறுமணம் நேரமெல்லாம் உங்கள்மீது
நின்றுநிலவச் செய்வது ரெக்ஸோனு ஒன்றுதான்.
அன்றுடம் உபயோகியுங்கள் ரெக்ஸோனு.
Rexona
GOOD FOR YOUR SKIN
'கேடில்' அடங்கிய
ரெக்ஸோனு
உங்கள் மேனியெழிலுக்கு
உகந்தது
லின்டாஸ்-RX.26-140 TI
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

ஊர் வம்பு

★ பரதக் கலை

★ ஆதர்சப் பள்ளி

பரதக் கலையை அப்பியசிக்க தேவர்களும் கூசினார்களாம்; முனிவர்களாலேயே இக்கலை அப்பியசிக்கவல்லது என்று பிரம்மா கருதினார் என்று நாட்டிய சாஸ்திரம் கூறுகிறது. இதிலிருந்து பரதநாட்டியம் எவ்வளவு புனிதமானது என்பதை உணரலாம். அதன் புனிதத் தன்மையைக் காப்பாற்ற வேண்டுமாயின் கலைஞர்கள் எப்படிப்பட்ட பக்குவத்தை எய்த வேண்டும் என்பதையும் உணரலாம். பிரதிதினமும் ஒரு குழந்தை அரங்கேற்றம் செய்து வரும் இக் காலத்தில் பரத சாஸ்திரம் இவ்வளவு எளிதாகிவிட்டதா என்ற ஐயம் எழுகிறது. கலை அதிகமாகப் பிரசாரமாவதில் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், அதன் தூய்மை காக்கப்படுகிறதா, அல்லது பிரசார நோக்கத்திலேயே அதன் புனிதம் போய் விடுகிறதா என்ற கவலையும் எழுகிறது. இப்படியெல்லாம் கலைக்காக உண்மையாகக் கவலைப்படுபவர்களில் ஸ்ரீ வி. சந்திரசேகரன் அவர்களுக்கு ஒரு தனி இடமுண்டு. சென்னை மியூஸியம் தியேட்டரில் ஏப்ரல் 28ந் தேதியன்று தொடங்கப்பட்ட பத்தொன்பதாவது நாட்டியக் கலை மகாநாட்டில் ஸ்ரீ சந்திரசேகரன் அவர்கள் நிகழ்த்திய தலைமையுரை பரதக் கலை பயிலுவதில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகளை அழகாகக் கூறி, தவிர்க்க வேண்டிய அம்சங்களையும் தெற்றெனச் சுட்டிக்காட்டிற்று. 'பரத வித்தை பயில்வோருக்கு ஆத்மார்ப்பண உணர்வு இருக்க வேண்டும்; நல்ல சங்கீத ஞானமும் அதனின்று வேறாகச் சொல்ல இயலாத லயப் பிரக்ஞையும் இருக்க வேண்டும்; அடவு, முத்திரை இவற்றைவிட ஆடை அணிகளுக்கு அதிக முக்கியத்துவம் தந்து விடலாகாது; நாட்டியமாடுபவர் நல்ல கற்பனா சக்தியோடு புதுப் புது அழகுகளை வெளிக் கொணர வேண்டும்; அபிநயங்கள் உள்ள நிருத்தியத்துக்காக வெறும் ஆடலாகிய நிருத்தத்தின் முக்கியத்தைக் குறைத்துவிடக் கூடாது' என்பன சில உதாரணங்கள்.

இம்மகாநாட்டை ஸ்ரீ பிஜூ பட்நாயக் தொடங்கி வைப்பது எதனாலோ என்று நாம் ஆச்சரியப்பட்டோம். ஸ்ரீ பட்நாயக்கும் ஆச்சரியப்பட்டார். இருந்தாலும் அவர் சாமர்த்தியசாலியல்லவா? 'கோனார்க் எங்கள் ஒரிஸ்ஸாவில்தான் இருக்கிறது. நம் சிற்பமும், சங்கீதமும், ஆடலும் யாவும் ஒருங்கிணைந்த கலைகள்தாமே! எனவே, கோனார்க்கின் ரஸிகன் என்ற முறையில் எனக்குப் பரதத்தைப் பற்றியும் பேசத் தகுதி இருக்கிறது' என்று ஒரு போடு போட்டார்.

ஒருவரிடம் பொறுப்பைக் கட்டிவிட்டால், அதைத் திறம்பட நிறைவேற்ற வேண்டும் என்ற பொறுப்பு அவருக்குத் தானாகவே வந்து விடும்; நல்ல பெயர் எடுக்க வேண்டும் என்ற ஆசையும் ஏற்பட்டு விடும். சைதாப்பேட்டையில் உள்ள ஸ்ரீ சரஸ்வதி ஆரம்பப் பாடசாலையை 1921ம் ஆண்டில் நிறுவியவர் ஸ்ரீ கே. சாம்பசிவம் என்பவர். அவர் காலமானதும் அதன் நிர்வாகப் பொறுப்பை இப் பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களும், ஆசிரியைகளுமே ஒரு நிர்வாகக் குழு அமைத்துக் கொண்டு வலிய ஏற்றுள்ளார்கள். ஆசிரியர்கள் பொறுப்பில் நடக்கும் ஆரம்பப்பள்ளி சென்னை மாவட்டத்திலேயே இதுதான். ஒற்றுமையோடு ஆசிரியர் குழாம் பள்ளியின் வளர்ச்சியிலே நாட்டம் செலுத்துவதனால், இந்தப் பள்ளியின் தரம் உயர்ந்து நிற்கிறது.



ஆடிக் களிக்கும் பள்ளிச் சிறுமிகள்.

மாணவ — மாணவிகள் கல்வியோடு கலை நிகழ்ச்சிகளையும் கற்று மகிழ்கிறார்கள். பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியைக் கண்டு களிக்கிறார்கள். இவ்வாண்டு, இப் பள்ளியின் நாற்பத்து நான்காவது ஆண்டு விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் ஆசிரியர் குழாத்துக்கும் பெற்றோர்களுக்கும் மகிழ்ச்சி தரும் வகையில், மாணவிகள் கலை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொண்டு இப்பள்ளியின் வளர்ச்சியில் தங்களுக்குள்ள பொறுப்புக்கும் எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள்.



வீட்டுச் சலவையின்
பெருமை
ஸர்ப் சலவையின்
அருமை
Surf
AMAZING BLUE POWDER
FOR THE WHITEST WASH!



மோனலிஸாவின் பிரயாணம்

1962-ம் வருடம் டிசம்பர் 14ந் தேதி காலை நேரத்தின் மங்கலான ஒளியில் போலீஸ் பாதுகாப்புடன் கூடிய ஒரு மோட்டார் கார் பாரிஸில் உள்ள லோவர் மியூஸியத்திலிருந்து கிளம்பி லீ ஹேவர் என்னும் துறைமுகத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. உலகப் புகழ்பெற்ற லியனார்டோ டாவின்ஸியின் ஓவிய மங்கை ''மோனா லிஸா'' அமெரிக்காவுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். பின்னால் வாஷிங்டனில் உள்ள நேஷனல் காலரியில் நான்கு வாரங்களும், நியூயார்க்கில் உள்ள மெட்ரோபொலிடன் கலைக் கண்காட்சியில் நான்கு வாரங்களும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வாயாரப் புகழும் வகையில் ''மோனா லிஸா'' கொலு வீற்றிருந்தாள்.

''மோனலிஸா''வைக் கடல் கடந்த நாட்டுக்கு அனுப்பும் முயற்சியில் ஒரு கலைப் பொக்கிஷத்துக்கு எந்த வகையில் வரக் கூடிய ஆபத்தையும் உணர்ந்து தடுக்கவல்ல ஒரு முயற்சியை லோவர் மியூஸியம் மேற்கொண்டது. தொழில் நுணுக்கம் தெரிந்த கலைஞர்கள் கலைப்பொருளின் பாதுகாப்புக்கான ஒவ்வொரு சிறு பகுதியையும் கூர்ந்து கவனித்து ஆவன செய்தனர். முதலில் ஓவியத்தினைப் பெரிய அளவினதான போட்டோக்களாகவும், எக்ஸ் ரே படங்களாகவும் பல பிரதிகள் எடுத்தனர். பிறகு ஓவியத்தை அதன் பிரேம்களிலிருந்து எடுத்து ஆட்ட அசைவுகள் பாதிக்காமலிருக்க, நைலான் கட்டைகளுக்கு இடையில் வைத்தனர். அதற்காகவே பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெட்டியினுள் அதைப் பத்திரப் படுத்தினார்கள். அந்தப் பெட்டி 80 கிலோகிராம் எடை கொண்டது. அந்த ஓவியத்தை அதிர்ச்சிகளிலிருந்தும், வெப்ப தட்ப மாறுதல்களிலிருந்தும் பாதுகாக்கும் வகையில் அந்தப் பெட்டி பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

இதற்கு முன்னமேயே ஒரு தடவை ஓவியர் ரெம்ப்ரண்ட்டின் ஓவியங்களை வியன்னாவுக்கு அனுப்புகையில் லோவர் மியூஸியம் ஏர்கண்டிஷன் அமைப்புக்கள் கொண்ட பெட்டிகளை உபயோகித்திருந்தது. ஒருவேளை ஓவியத்தை எடுத்துச் செல்லும் கப்பல் வழியில் எங்காவது பாறைகளில் மோதி மூழ்கி விடலாம் என்று கருதியவர்கள், ஓவியத்துக்கு மேலும் அதிகமான பாதுகாப்புத் தர முன்வந்தனர். ஆதலின் ஓவியத்தை வைக்கும் பெட்டியை மூழ்கும் தன்மையற்றதாய், மிதக்கும் தன்மை கொண்டதாய் அமைத்திருந்தார்கள். பயணத்தின்போது ஆறு காவல் வீரர்கள் அதைச் சுற்றி நின்று காவல் புரிந்தனர். கப்பலில் அதற்கெனத் தனி அறை ஒதுக்கப்பட்டு அந்த அறையின் வெப்ப தட்ப நிலை நான் முழுதும் ஒரே சீராக அமைந்திருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

450 வயதாகும் மங்கை மோனா லிஸாவை லியனார்டோ டாவின்ஸி 1516ம் ஆண்டில் இத்தாலியிலிருந்து பிரான்சுக்குக் கொண்டு வந்தார். அப்பொழுது அவளுக்கு ''லா ஜியோகொண்டா'' என்னும் இயற்பெயர் வழங்கப்பட்டது. இத்தாலி நாட்டைச் சேர்ந்த ''பிரான்ஸிஸ்கோ டெல் ஜியோகொண்டா'' என்பவருடைய மனைவியின் உருவத்தை இந்த ஓவியம் சித்திரிக்கிறது என்று நம்பப்படுகிறது. பிரான்சைச் சேர்ந்த முதலாம் பிரான்சிஸ் என்பவர் டாவின்ஸியிடமிருந்து மோனலிஸாவை 4000 ப்ளோரின் நாணயங்களுக்கு வாங்கினார். ஆனால் மோனலிஸா இன்று விலைமதிக்க முடியாத அளவினுக்குப் பெருமையுற்றிருக்கிறது. 1911ம் ஆண்டு காணமற்

போன மோனலிஸா இரண்டாண்டுகள் வரையில் யார் கண்ணிலும் தென்படாமல் இருந்து பிறகு இத்தாலியில் கண்டு பிடிக்கப்பட்டாள். 1957ஆம் ஆண்டு ஒரு கலைத் துரோகி தூக்கி எறிந்த கல் ஒன்று மோனலிஸாவை மிகச் சிறிதளவு காயப் படுத்திவிட்டது. அதுமுதல் மோனலிஸா மிக மிகப் பத்திரமான இடத்தில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறாள். யாரேனும் கைத்துப் பாக்கியை மறைத்து எடுத்துப் போய் ஓவியத்தைச் சுட்டுவிடலாம் என்று நினைத்தால் அதுவும் முடியாத அளவுக்கு அதைக் காப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

1962ம் ஆண்டு பிரஞ்சு அரசாங்கம் அமெரிக்காவுக்கு மோனலிஸாவை இரவலாகக் கொடுக்க முன்வந்தபோது பல விதமான நிபந்தனைகள் போடப்பட்டன. வாஷிங்டனிலும், நியூயார்க்கிலும் மோனலிஸா காட்சிக்கு வைக்கப்பட்டபோது ஓவியத்தின் மேல் சாதாரண வெளிச்சத்தைத் தவிர புகைப் படக்காரர்கள் உபயோகிக்கும் கண்ணைப் பறிக்கும் பல்புகளின் வெளிச்சம்கூட அனுமதிக்கப்படவில்லை. அவ்வெளிச்சத்தினால் உண்டாகும் வெப்பம் ஏர்கண்டிஷன் செய்யப்பட்டுள்ள அறையின் வெப்ப நிலையைப் பாதிக்கும் என்பதனால் இந்த நிபந்தனை!

சுமார் 16 லட்சம் அமெரிக்கர்கள் கண்டு களித்த மோனலிஸா 1963ம் ஆண்டு மார்ச் 12ம் தேதி பத்திரமாக லோவர் மியூசியத்துக்குத் திரும்பி வந்து சேர்ந்தாள்.

ஆதாரம்: 'யுனெஸ்கோ கோரியர்'
தகவல்: த. ஜெயராமன்

சட்டம் வந்தால்......!



"இனிமேல், நம் நாட்டிலே பிச்சை எடுத்தால் அபராதமாம்!"

"சரி, அப்படியானால் நான் தேர்தலில் நின்று ஜெயித்து, மந்திரியாகி அமெரிக்காவுக்குப் போய்ப் பிச்சை எடுக்கிறேன்!"



"டேய்! விஷயம் தெரியாதா உனக்கு; பிச்சை எடுத்தால் அபராதம் போட்டு ஜெயிலிலேதான் போடுவா!"

"போடாதவங்களை நரகத்திலே தான் போடுவாங்க!"




"இவன் நிஜமாகவே கண் இல்லாதவனாகத்தான் இருக்கணும்; இல்லாட்டா இந்தச் சமயத்திலே நம்மகிட்டேயே வந்து பிச்சை கேட்பானா?"



லக்ஷக்கணக்கானவர்களின்
தேர்ந்தெடுப்பு
உலகத்தில் 40 நாடுகளில் வசிக்கும் லக்ஷக்கணக்கானவர்கள் திறமைக்கும் துல்லியமான எந்திர வேலைப்பாட்டுக்கும், உஷா விசிறிகளையே தேர்ந்தெடுக்கிறார்கள்.
நீங்கள் ஒரு விசிறி வாங்கும் போது நம்பிக்கையுடன் உஷாவை வாங்கலாம் ... அது தான் இன்று விற்பனையிலிருக்கும் விசிறிகளிலே ஜனங்களால் மிக விரும்பப்படுவது
ஒரு
JAY
தயாரிப்பு
எல்லா ஸீலிங் விசிறிகளும் நீண்ட காலம் தொல்லையின்றி சேவை செய்ய டபிள் பால் பேரிங்ஸ் பொருத்தப்பட்டவை.
உஷா
ஜே எஞ்சினியரிங் ஒர்க்ஸ் லிமிடெட்,
கல்கத்தா-32



டயல் ஒன் நாட் நாட்
கதை: கௌசிகன்
சித்திரம்: ரமணி.
கல்லடி பட்ட பையன்
ராமு பள்ளி மாணவன். புத்திசாலி. ஆனால் ஏழை. தாயாரைப் பிரிந்து கல்விச் செல்வம் பெற ஒரு நண்பரின் ஆதரவில் திருச்சியில் படித்து வந்தான்..
அம்மாவிற்கு உடல் நலமில்லையாம். இந்தச் சமயத்தில் நான் அவள் அருகில் இருக்க வேண்டுமம்மா.
உன் உணர்ச்சிகள் எனக்குத் தெரியும் ராமு. பரீட்சைக்கு ஒரு மாதம் தானிருக்கிறது. இப்போது நீ போக வேண்டாம். உன் அம்மாவைக் கவனித்துக் கொள்ள
ராமுவிற்கு அது போதவில்லை. தாயாரைக் காணக் கிளம்பி விட்டான். ரயிலில் போகக் கையில் பணமில்லை. ஆனால் என்ன? சென்னைக்குப் போக அவனுக்கு மார்க்கமா இல்லை?
இப்போ லாரி சென்னைக்குத் தானே போகிறது?
அதெல்லாம் சௌகரியப் படாது தம்பி, போய் வா.
ராமு போகவில்லை..
எத்தனை பார்சல்கள் ஏத்தியாச்சா? இன்னிக்கு ராத்திரி ஒன்பது மணிக்குள்ள சென்னையில் இருந்தாகணும். சீக்கிரம்.
கிளம்பிடலாம். இதுதான் கடைசிப் பெட்டி.
இதுதான் சரியான சந்தர்ப்பம். இதை நழுவ விடக் கூடாது.
லாரி சென்னையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது.
லாரியைக் கடத்திச் செல்பவர்களுக்கு இது ஒரு அருமையான சந்தர்ப்பம்.
டேய் நிறையச் சாக்கு ஏத்திட்டு நிக்குது லாரி!
நமக்காகத்தான். ம்.. யோசிக்காதே. போய் ஏறி வண்டியைக் கிளப்பு.
டீக் கடையில் இருந்தவர்கள் கூச்சலிட லாரி பறந்து விடுகிறது.
அண்ணே! இங்கே ஒரு அதிசயம் பாரு.


வணக்கம் சொல்லிவிட்டு வண்டி நகர்ந்த போது...
உண்மை தான். சரக்கை நம்ம வண்டிக்கு மாத்திட வேண்டியது தானே?
சிங்காரம் வருவதற்கான காரணம் என்ன?


நாமு சாமர்த்தியசாலி என்பதைச் சிங்காரம் எப்படி எந்த வகையில் முடிவு கட்டினான்? தெரியாவிட்டால் 71ம் பக்கம் பாருங்கள்.
ஆஹா! நான் போய் அதைக் கவனிக்கிறேன்.



இரயில் புறப்பட்டது. மூன்றும் வகுப்புப் பெட்டி ஒன்றில் சன்னல் ஓரமாக அமர்ந்து வெளியே பார்த்துக் கொண்டிருந்தான் நாணு. அருகில் தோல் பெட்டியில் கள்ளிக்கோட்டை தொழிலாளர் சங்கத்தைப் பற்றிய இரகசியச் செய்திகளும் அறிக்கைகளும் இருந்தன. பணிக்கர் அந்தச் சங்கத்தின் பொறுப்பைக் கவனித்துக் கொண்டவரை எல்லாம் சீராகவே இருந்தன. இப்போது அங்கே பிளவுகளும், உட்பிளவுகளும் ஏற்பட்டுத் தலைவர் தேர்தலில் பெருங் கலவரமே நிகழ விருந்தது. அந்தத் தேர்தலைச் சீராக நடத்தி வைக்கவே நாணு போய்க் கொண்டிருந்தான்.

இயற்கை அன்னையின் கர்ப்பக் கிருஹம் போன்ற தோற்றம் தரும் மலையாளப் பகுதியின் அழகு அவனை இருபுறமும் நின்று வரவேற்றது. தொலைவில் தெரிந்த மலைகள் அவன் வரவுக்காக வளையப்பட்ட வளைவுகள் போல் நின்றன. வானத்தில் நீல மேகங்களுக்கிடையே சந்திரன் கூட இரயிலுக்குச் சரியாக ஓடிவர முயன்றான். பௌர்ணமியானதால் எங்கும் தண்ணொளி பரந்து கிடந்தது. அந்தக் குளுமை, மலைகளின் பசுமையுடனும், வயல்களின் செழுமையுடனும் உறவாடி, அவனுக்கு ஒரு மானச உலகைக் காட்டிக் கொண்டிருந்தது.

சங்க அலுவலாகத்தான் அவன் செல்கிறான் என்று தெரிந்தும் விசுவநாதன் அவனுடைய வழிச் செலவுக்கென்று இம்முறை பணம் கொடுத்தார். ''எனக்கு எதற்கு மாமா? வேண்டாம்'' என்றான் நாணு. அவர் வலுக் கட்டாயமாகக் கொடுத்த உறைக்குள் ஐந்நூறு ரூபாய் பணம் இருந்ததைச் சற்று முன்தான் நாணு கவனித்தான். 'எதற்கு இவ்வளவு பணம்? யார் கண்டார்கள்? மாமாவின் கணக்குப் பொய்யாக இருக்காது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

ரயில் போய்க் கொண்டிருந்தது.

எதிர்ப் பலகையில் ஒரு கிழவன் உட்கார்ந்திருந்தான். அவன் அருகில் ஓர் இளம்பெண் அமர்ந்திருந்தாள். கிழவன் காலத்தை மென்ற சாதனை போதாதென்று வாயை மென்று கொண்டிருந்தான். உரம் ஏறிய உடல் அவனுக்கு. அதன் அமைப்பில் இன்னமும் உரம் குறையவில்லை. கையிலும் காலிலும் இரண்டு இடங்களில் அரை ரூபாய் நாணய அளவுக்கு வடுக்கள் இருந்தன.

அவள் நல்ல அழகி. எலுமிச்சை நிறம் தோற்றுப் போகிற அழகிய உடல். வெண்ணெயை உருட்டி வைத்த மாதிரி கை கால்கள். அடர்த்தியான கேசம். அதை அலட்சியமாக முடிச்சிட்டு ஒற்றைப் ரோஜாப் பூவை மட்டுமே செருகியிருந்தாள். கையில் ஒற்றை வளையல். கழுத்தில் ஒற்றை வடம் சங்கிலி. காதில் ஒற்றைக் கல் தோடு. சிவப்புக் கல்!

இந்த ஒற்றை அம்சம் அவளுக்குத் தனித் தன்மை போலும் என்று நாணு எண்ணிக் கொண்டான்.

அவன் வண்டியில் ஏறிய போது அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். இப்பொழுதுதான் விழித்திருப்பாள் போலிருக்கிறது. 'அடடா! இவ்வளவு நேரம் தூங்கி விட்டோமே! வெளியே அழகு கொள்ளை போகிறதே!' என்பது போலத் துருதுருவென்று பார்த்தாள்.

''தாத்தா, தாத்தா, அங்கே பாருங்க...'' என்று அவள் கூவினாள்.

''என்னம்மா?''

''ஒரு மான் குட்டி!''

கிழவர் சிரித்தபடியே, ''ஆமாம், அது மான்குட்டி. நீ சகுந்தலை. படுத்திருந்தாயே, ஏன் எழுந்துவிட்டே அதற்குள்ளே?'' என்றார் செல்லமாக. பேத்தியிடம் அவருக்கு உயிர் என்று தெரிந்தது.

''போ, தாத்தா, நான் தூங்கவேயில்லை. இவர் வந்தது, உட்கார்ந்தது, பேப்பர் படிச்சது, பெருமூச்சு விட்டது எல்லாம் தெரியும் எனக்கு.'' நாணுவைச் சுட்டிக் காட்டி அவள் சொன்னாள்.

நாணுவை ஒருமுறை யாரோ உருட்டி விட்டாற் போலிருந்தது. அவனை அவள் கவனித்தே வந்திருக்கிறாள்! அடேயப்பா! உள்ளூறப் பெருமை பிடிபடவில்லை அவனுக்கு.

''அதோ, அங்கே அருவி!''

கிழவர் தலையை ஆட்டினார்.

''தாத்தா, இந்த மலைச்சாரலிலே ஓர் ஆசிரமத்திலே நீ கண்வரிஷியாகவும், நான் சகுந்தலையாகவும் இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும்!'' கற்பனையை உதிர்த்தவாறே, ஒரு முன்ற புடவையைச் சரிசெய்து கொண்டாள். நாணுவின் பார்வை அவளை முழுமையாகத் தரிசித்தது. அடேயப்பா! என்ன அழகு!

''ஸார், மணி என்ன?'' கற்பனை நிகழ்கால வரையறையை விசாரித்தது. நாணுவைப் பார்த்து.

''பன்னிரண்டு ஆகிறது'' என்றான் நாணு.

''வண்டி லேட். இல்லையா?''

''ஆமாம்... நூற்று முப்பது நிமிடங்கள் தாமதமாக வந்து கொண்டிருப்பதாக அறி விப்பிலே சொன்னார்கள்.''

''கடிகாரம் என்ன விலை?'' அவள் கையைப் பார்த்துக் கேட்டாள்.

''தெரியாது.''

''ப்ரஸெண்டேஷனா?''

''ஆமாம்.''

''யார் கொடுத்தது? சிநேகிதரா, அல் லது சிநேகிதியா?''

நாணுவுக்குத் திக்கென்றிருந்தது. இதென்ன கேள்வி! அவளோ குறும்பு மலரச் சிரித்தாள். குறும்பு கண்ணில் மட்டுமா? அவள் உடம்பு முழுவதுமே மலர்ந்திருந்தது.

''என் மாமா கொடுத்தது... விலை மூந் நூற்றுச் சொச்சம்...மதராஸிலே வாங்கினது. வாங்கி ஆறு மாதம்தான் ஆகிறது.'' எல்லா விவரங்களையும் சொன்னான் நாணு, அவள் கேட்பதற்கு முன் சொல்லிவிடலாமே என்று.

''எந்த ஊருக்குப் போகிறீர்கள்?''

''கள்ளிக்கோட்டைக்கு.''

''அப்படியா! நல்லதாப் போச்சு...நானும் அங்கேதான்... தாத்தா, இவரும் கள்ளிக் கோட்டைதான் வருகிறாராம்.''

கிழவர் தலையை ஆட்டினார். வாயை மட்டு மல்ல, வேறு எதையோ சேர்த்து மென்ற வாறே, பேத்தியைப் பார்த்தார். பிறகு நாணு வைப் பார்த்து, ''இவனுக்கு வயசு என்ன இருக்கும் சொல்லுங்கள், ஸார்!'' என்றார்.

நாணுவை மீண்டும் உருட்டி விட்டாற் போலிருந்தது.


''யாராக இருந்தாலும் பேச ஆரம்பித்து விடுவாள். வயசாச்சே என்கிற ஞானம் இல்லை. குழந்தைத்தனம் மாறவே இல்லை!'' என்றார்.

''அது ஏன் மாறணும்?'' என்று கேட்டாள் நாணு.

அவள் கையைக் கொட்டிச் சிரித்தாள். ''அப்படிச் சொல்லுங்கள். நான் குழந்தை யாகத்தானே பிறந்தேன்! வளர்ந்ததும் என் குணம் ஏன் மாறிப் போக வேண்டுமோ, தெரியவில்லை...'' என்றாள்.

''ரொம்ப அழகுதான்'' என்று செருமினார் கிழவர். ''உனக்கு ஒரு குழந்தை பிறக்கிற வயசாகியும், நீயே குழந்தையா இருந்திட்டா அந்தக் குழந்தைக்கு யார் தாயாக இருப்ப தாம்...?''

''தாத்தா, பழனிமலையிலே இருக்கிறாரே, முருகன், அவர் என்ன குமரரா, கிழவரா?...





லைப்பாய்

இருக்குமிடம்: அதுவே...,
ஆரோக்கியம் இருக்குமிடம்

லைப்பாய் சோப்பினால் நீராடுவீர்... அதுவே குதூகல உணர்ச்சியின் குற்றாலம்... ஆரோக்கிய மலர்ச்சியின் ஆலோலம்...ஆஹாஹா...நல்ல சோப்பின் நன்மைகள் யாவும் பெறுவீர், மேலும் பெறுவீர் லைப்பாய் துணையால்...

அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய்

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

லின்டாஸ்-L.56-140 D

ராஜாக்கள் போலே நடமாடுறே. கிருஷ்ணன், அவர் என்ன குமரரா, கிழவரா? நீ சும்மா இரு தாத்தா.......பாருக்குட்டி யாருன்னு தெரியுமோ?''

''உங்கம்மாவும் இப்படித்தான் சொன்னாள்... கடைசியிலே கிழவன் கையிலே உன்னை ஒப்படைச்சுட்டு மகராஜி போய் விட்டாள்... சிறு வயசிலே உங்களுக்கெல்லாம் பொறுப்பு, கடமை, எதுவுமே தெரியறதில்லே... எப்பப் பார்த்தாலும் என்ன சிரிப்பு, விளையாட்டு!'' கிழவர் கடுமையாகவே கண்டித்தார் அவளை.

நாணு அவளைப் பார்த்தான். முகம் சுருங்கி விட்டது அவளுக்கு. தாத்தாவின் கோபத்துக்கு அடங்குபவளைப் போல ஒரு கணம் முகத்தில் சிந்தனையைத் தேக்கினாள். ஆனால் மறு கணமே 'வெவ்வெவ்வே' என்று அவருக்கு அழகு காட்டினாள். முகம் விரிந்தது பூப்போல! குறும்பு சுழன்றது வண்டுபோல!

கிழவர் அந்தக் கதையைச் சொன்னார். பாருக்குட்டியின் அம்மாவின் கதையை. கூடவே தம் கதையையும் சொன்னார். முதல் உலகப் போரில் சிப்பாயாக அவர் சண்டை போட்ட அடையாளங்கள்தான் கையிலும் காலிலும் உள்ள வடுக்கள். பல ஆங்கிலத் துரைமார்களின் பெயர்களை அடுக்கினார். பல போர்க்களங்களின் பெயர்களைச் சொன்னார். அங்கெல்லாம் ஜனங்களின் ஆசாரம் வேறேயாம். ஆண் பெண் வேறுபாடே கிடையாதாம். துரைசானி ஒரு பேச்சுச் சொன்னால் துரை தலையைப் பலமாக ஆட்டி விடுவாராம்.

அவருடைய அம்மு அசாதாரண அழகி. பார்த்தால் மலைத்துப் போக வேண்டும். பாருக்குட்டியை விடவும் குழந்தைத்தனம். குருவாயூர்க் கோவிலிலே வைத்துக் கல்யாணம் செய்து கொடுத்தாராம். அவர்களுக்குக் குலதெய்வம் குருவாயூர் கிருஷ்ணன்.

''ஊஹும்... அவ கதை எப்படியோ ஆச்சு... அழகுஇருந்தா ஆபத்து. புருஷனும் சரியில்லே. எந்நேரமும் அடியும் உதையும் படுவாள். ஆனால் சிரிச்ச முகம் மாறினதில்லே. புருஷனுக்கு அந்த அருமை எங்கே தெரிஞ்சுது? எப்பவும் சிரிக்கிறவ நல்ல பெண்ணில்லேன்னு அவன் அபிப்பிராயம். நான்கூடச் சொல்வேன். 'அட ஏம்மா சிரிக்கிறே? புருஷன் எதிரே அழுது தொலையேன்'னு. கேட்பாளா? ஊஹூம். போங்கப்பா, நான் சிரிக்கக்கிட்டே உயிரை விட்டுடுறேன்'னு. அப்படியே இவளைப் பெத்துப் போட்டுட்டு உயிரையும் விட்டா.''

கிழவருக்குக் கண் கலங்கியது.

''அப்போ நீ அழுதாயாமே, தாத்தா, எப்படி அழுதே? அதை ஊருக்குக் காட்டு'' என்றாள் பாருக்குட்டி.

''பார்த்தீங்களா, அம்மை போன துக்கம் கொஞ்சம்கூட இல்லாம, 'ஒன்ஸ்மோர்' கேட்கிறாள்!'' என்றார் கிழவர்.

''போ, தாத்தா... அழுமூஞ்சி அழுகியா!'' என்று சிணுங்கினாள் அவள்.

''கிருஷ்ணா, குருவாயூரப்பா, ஐயப்பா, இந்தப் பெண்ணுக்குப் புத்தியைக் கொடப்பா'' என்றவாறே கிழவர் படுத்தார்.

வெளியிலே அவர் அழவில்லையே தவிர, உள்ளுற அழுதுகொண்டுதான் இருந்தார் என்று நாணுவுக்குத் தோன்றியது.

ஆனால் அவ்வாறு அவர் சற்றுப் படுத்து அழுவதைக்கூட ரயில் அனுமதிக்கத் தயாராக இல்லை. ஒரு குலுக்குக் குலுக்கி நின்றது. அந்த வேகத்தில் பாருக்குட்டி கீழே விழத் தெரிந்தாள். நாணுவின் தலை ஜன்னலில் மோதிற்று. மேல் பலகையிலிருந்து ஒரு கூடைப் பழங்கள் கீழே விழுந்து உருண்டன. ஒரு குழந்தை வீறிட்டு அழுதது.

''ஏன்? புகை வண்டி நின்று விட்டது?''

''இஞ்ஜின் தடம் புரண்டு விட்டதாம்!''

கிழவர் எழுந்து உட்கார்ந்தார். பச்சைப் பாக்கை வெட்டி வெற்றிலையோடு கலந்து சாவகாசமாகத் தாம்பூலம் தரித்தபடியே விட்டுப் போன கதைக்கு முடிச்சுப் போட்டார்: ''ஜாக்ஸன் துரை தெரியுமா ஸார்... இந்தப் பக்கத்திலே பெரிய டீ எஸ்டேட் முதலாளி அவன். ஆலப்புழையிலே ஒரு வீடு, நிலம் எல்லாம் தரேன், அம்முவை ரிஜிஸ்டர் பண்ணிக்கிறேன்னான். எனக்கு வந்த கோபத்திலே 'கெட் அவுட்'ன்னேன். 'குருப், வாட் ஸஸ் திஸ்?'ன்னான். 'கெட் அவுட்! என் குட்டிக்கு நீயா பார்த்தா? பணத்தைக் காட்டி இந்தக் கிருஷ்ண குருப்பை மடக்கப் பார்க்கிறாயா? எனக்கு மானம்தான் பெரிசு; பணம் இல்லே. 'கெட் அவுட்'டேன்...'' கிழவர் எதிரே துரை இருப்பதாகவே எண்ணி முழக்கினார். பிறகு புகையிலையைக் கிள்ளி வாயில் அடக்கியபடியே, ''என் பாட்டனார் சம்பாதிக்காத பணமா ஸார்? குருவாயூரிலே சத்திரமே கட்டிக் கொடுத்தார் அவர். சத்திரம்னா சாமான்யமா? கொச்சி அரண்மனை மாதிரிக் கட்டடம். கலெக்டர், தாசில்தாரெல்லாம் கைகட்டி நிற்பான் தாத்தாகிட்டே. அந்த வம்சத்திலே வந்தவன் குட்டியைக் காசுக்கா விற்பான், ஸார்?'' என்றார்.

''தாத்தா கதை சொன்னால் பொழுது போவது தெரியாது'' என்றாள் பாருக்குட்டி.

''ஏன், இவளையும்தான் எத்தனை பேர் கொத்திக் கொண்டு போகப் பார்த்தார்கள் தெரியுமா?... கடைசியிலே இந்தக் குஞ்சு ராமன் வந்தான்'' என்று கிழவர் பெருமூச்சு விட்டார்.

''கொஞ்சம் தூங்கு, தாத்தா... தூங்கா விட்டால் இருமல் வந்து கஷ்டப்படுவே'' என்றாள் பாருக்குட்டி, பரிவோடு.

கிழவர் படுத்துவிட்டார் மறுபடியும். தூக்கம் விழித்தால் இருமல் வந்து விடுமாம். வந்தால் இலேசில் போகாதாம். அந்தப் பயத்தில் சற்றைக்கெல்லாம் ஆனந்தமாகக் குறட்டை விடத் தொடங்கினார்.

பாருக்குட்டி அவருக்கு வசதியாகக் காலை நீட்டிப் படுக்க இடமளித்துவிட்டு நாணுவுக்கு அருகில் வந்து உட்கார்ந்துகொண்டாள். உட்கார்ந்ததும் பேச்சு எழுந்தது.

''நீங்க எந்த ஊர்?''

''கோவை.''

''அப்படியா! நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் கோவையிலேதான். மலையாளம் பேசத்

தெரியுமே தவிர, எழுதத் தெரியாது. தமிழ் தான் நான் படிச்சது... அது சரி, வண்டி புறப்பட நேரமாகுமோ?''

''அப்படித்தான் தோன்றுகிறது.''

''கிரேன் வந்துதான் இஞ்சினைத் தூக்கி நிறுத்த வேண்டும் போலிருக்கிறது.''

''அப்படித்தான் தோன்றுகிறது.''

''ஊர் போய்ச் சேருவோமா, மாட்டோமா? நேரம் ஆகும் போலிருக்கிறதே!''

''ஆமாம்'' என்று நாணு தொடங்குவதற்குள் ''அப்படித்தான் தோன்றுகிறதாக்கும்?'' என்று கேட்டுக் கலகலவென்று சிரித்தாள் அவள்.

இந்தச் சிரிப்பொலி கேட்டு வண்டியிலிருந்தவர்கள் அவளையும் நாணுவையும் மாறி மாறிப் பார்த்தார்கள்.

அவள் தன்னுடன் பேசுவதை இத்தனை பொறாமைக் கண்கள் பார்ப்பது நாணுவுக்குப் பெருமையாக இருந்தது.

''உங்களுக்கு என்ன வேலை?''

''வேலை இல்லை, சேவை செய்கிறேன்.''

''என்ன சேவை?''

''பொதுஜன சேவை. தொழிலாளர்கள் சேவை.''

''அட கடவுளே, இந்தப் பைத்தியக்காரத்தனம் எதற்காக?'' முகவாய்க்கட்டையில் இடது கையை வைத்துக் கொண்டு கேட்டாள் அவள்.

''இது பைத்தியக்காரத்தனமா? பாட்டாளி வர்க்கம் இல்லாவிட்டால் இந்த உலகம் ஏது? உழைப்பின் பெருமை எந்தத் தேசத்தில் மதிக்கப்படுகிறதோ, அங்குதான் உண்மையான சுபிட்சம் நிலவும்.''

அவள் சிரித்தபடியே, ''உங்களுக்கு என்ன வயசு?'' என்று கேட்டாள்.

தன் பிரசங்கத்தை இலட்சியம் செய்யாமல் வயதை விசாரிக்கிறாளே என்றிருந்தது நாணுவுக்கு. ''இருபது. உங்களுக்கு?'' என்று கேட்டான்.

''நூறு வயசு!'' என்று அவள் சொல்லி விட்டுக் கலகலவென்று சிரித்தாள்.

நாணு சிரிக்கவில்லை. வெடித்தேவிட்டான்! அப்படி ஒரு சிரிப்பின் அதிர்வெடி அவனை ஆட்கொண்டது. வண்டியிலிருந்த கண்கள் இப்போது அவர்களை மாறி மாறி மட்டும் பார்க்கவில்லை; ஒரு மாதிரியாகவும் பார்த்தன..

'பார்க்கட்டுமே, நன்றாகப் பார்க்கட்டுமே!' கமலாவை உதறிய நெஞ்சில் இந்தக் காரிகை நுழையவும் நிறைய இடம் இருந்தது.

''நூறு வயசுதானா? அதற்கு மேலே இருக்கும் என்று நினைத்தேன்'' என்றான் நாணு சளைக்காமல்.

அவளோடு பேசுவதும் சிரிப்பதும் இப்போதுதான் ஒரு புது உறவின் விளைவாக அமைந்ததென்று அவனுக்குத் தோன்றவில்லை. பண்டுதொட்டே அவளை நன்றாக அறிந்திருந்தாற்போலிருந்தது. அத்தனை சகஜமாகவும் வெகுளித்தனமாகவும் பாருக்குட்டி பழகினாள்.

''வயசு கூடினாலென்ன, குறைந்தாலென்ன? நூறு வயசு ஆனாலும் நான் மாறமாட்டேன். குழந்தையாக இருப்பது தவறா? இப்படிச் சிரிக்காமல் ஏன் அழணும்?'' அவள் கேட்டாள்.

''அழுவது கோழைகளின் காரியம் அல்லவா?'' என்றான் நாணு.

''எனக்கு அழத் தெரியாது... வாழ்க்கை உல்லாசமாக வாழ்வதற்காகத்தான் தரப்பட்டது. இல்லையா?''

நாணுவுக்கு தெருவின் நினைவுதான் வந்தது. அவனும் இப்படித்தான் சொல்வான். ஆனால் தீய பழக்கங்களில் அழுந்திய கட்டுப்பாட்டுக்கு அவன் வகுத்த சமாதானம் அது. பாருக்குட்டியோ குழந்தையின் பேதைமையோடு வாழ்வின் இனிமையை மட்டுமே நுகர விரும்புகிறவளாகத் தோன்றினாள்.

''நீங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்?''

''காலேஜுக்குப் போகிற தகுதியோடு நிறுத்திக் கொண்டேன்.''

''ஏன், மேலே படிப்பதற்கென்ன?''

''அதோடு நின்று விட்டது. தொழிலாளர் நலனில் ஈடுபட்டு விட்டேன்.''

''உங்கள் குடும்பம் கோயமுத்தூரில்தான் இருக்கிறதா?''

நாணு சிரித்தான். ''எனக்குக் குடும்பமே கிடையாது.'' என்றான்.

''அப்பா?''

''இருக்கிறார்.''

''அம்மா?''

''இல்லை. ஆனால் நான் வளர்கிற வீட்டில் ஒரு குறையும் இல்லை. விசுவ லட்சுமி மில்லைத் தெரியுமா? அதன் முதலாளி வீட்டில்தான் வளர்கிறேன்.''

குடும்பக் காவலன்!

ஐஸன்ஹோவர் மேற்கு ஐரோப்பாவில் யுத்தம் தொடங்கிய போது ஓய்வு பெற்ற சில போர் வீரர்களுக்கு அழைப்பு அனுப்பி யிருந்தார். ''அமெரிக்காவைக் காப்பாற்ற இன்று நீங்கள் அவசியம் தேவைப்படுகிறீர்கள்!'' என்று குறிப்பிட்டிருந்தார்.



ஒருவர் பதில் எழுதினார். ''அமெரிக்காவைக் காப்பாற்ற பதினொரு மில்லியன் வீரர்கள் இருக்கிறார்கள். ஆனால் என் குடும்பத்தைக் காப்பாற்ற நான் ஒருவன் தான் இருக்கிறேன்!''

அவரை அரசாங்கம் வற்புறுத்தவில்லை!

-எஸ். எஸ். எஸ். (கொரனெட்)

அவள் குறுகுறுவென்று நாணுவை ஏறிட்டுப் பார்த்தாள்.

"உங்கள் கதையைச் சொல்லவில்லையே, பாருக்குட்டி?"

"அதை? நீங்கள் கேட்கக் கூடாது. என் கதையில் இனிமையே கிடையாது... கலியாணம் என்று ஒன்றை நடத்திவிட்டார் தாத்தா. நான் குதிர் மாதிரி வளர்ந்துவிட்டேனும். அதற்காக...குருவாயூரில்தான் நடந்தது.... கல்யாணம் நடந்தபோதே நான் சிரிச்சுக்கிட்டுத்தான் இருந்தேன். நலங்கு இடும்போது காலில் கிசுகிசு மூட்டுகிறாற் போலிருந்தது. ரொம்பச் சிரிச்சேன்னு தாத்தா சத்தம் போட்டார். நீங்களே சொல்லுங்க. சிரிப்பு வந்தா சிரிக்காமல் இருக்க முடியுமா? கல்யாணத்திலே கூடச் சிரிக்கக் கூடாதா?... என்ன கல்யாணம் வேண்டியிருக்கிறது!... இன்னொரு பிறவியிலே பெண்ணாகவே பிறந்தேன்னா கல்யாணமே செய்து கொள்ள மாட்டேன் நான்."

"அது முடியாது, பாருக்குட்டி! பெண்ணுக்குத் துணை அவசியம். தனி வாழ்க்கையில் சுவை இருக்காது."

"உக்கும்... ஏன் இருக்காது? துணை அவசியம்னு கல்யாணம் செய்துகொண்டால் தானா?... நீங்க எனக்குத் துணையாக இருக்க மாட்டீர்களா?"

"நானா?"

"ஏன் இருக்கக் கூடாது?"

நாணு எச்சிலை விழுங்க அவஸ்தைப்பட்டவன் போல் அவளுடைய பேச்சில் தெரிந்த குறிப்பை விழுங்கத் திணறினான். அவன் அவளுக்குத் துணையாக இருக்க இயலுமா? நெஞ்சு இப்படிப் படபடக்கிறதே, இயலாமையைத்தான் அது தெரிவிக்கிறதோ? இயலும், இயலும் என்று முழக்குகிறதோ?

"சொல்லுங்க..." பாருக்குட்டி அவன் கையைப் பற்றிக் கொண்டு கேட்டாள்.

அனல் — அல்ல பனிக்கட்டி — அல்ல புயல் — அல்ல சூனியம் - அவனைக் கவ்விற்று. அவளுக்குத் துணை வர வாழ்வின் யாத்திரை நெடுகிலும் அவளோடு நடக்க அவன் தயார்!

"துணை இருப்பேன், பாருக்குட்டி!" என்றான் நாணு.

"நல்ல வேளை... பயந்து விடுவீர்களோ என்று பார்த்தேன்."

"ஊஹூம்... எதற்காகப் பயம்?"

"எனக்கு முதல் முதலாக உங்களைப் பார்த்த போது பயமாகத்தான் இருந்தது" என்றாள் அவள். சொல்லிவிட்டுச் சிரித்த படியே, "நீங்கள் வயசில் சின்னவரானாலும் உள்ளூறப் பெரிய ஆள்தான்" என்றாள்.

நாணுவின் உள்ளத்துக்குள் இருந்த அந்தப் பெரிய ஆள் ஒரு விம்மல் விம்மினான் போலும். நாணு சற்றே நிலைகுலைந்தான்.

"பெண்களை நீங்கள் மயக்கி விடுவீர்கள்!" என்று தொடர்ந்து கூறினாள் பாரு, சர்வ சாதாரணமாக.

"இது என்ன அபாண்டமான குற்றச் சாட்டு!" என்றான் நாணு பதிலுக்கு.

"ஆமாம்... அப்படி ஒரு வசீகரம் இருக்கிறது உங்களிடம். ஆனால் இதில் மயங்கினால் எந்தப் பெண்ணும் ஏமாந்து போவாள்."

"அட ராமா!"

"ஏன் தெரியுமா? பார்க்கிறதுக்குச் சின்ன வயசானாலும் உங்க மனசிலே கிழட்டுத்தனம் இருக்கிறது...ஹாஹ்ஹா!"

பாருக்குட்டி விலாப் புடைக்கச் சிரித்தாள். அவளுடைய மனத்தத்துவ, வசிய ஆராய்ச்சிகள் அவனுக்கு வேடிக்கையாக இருந்தன. தன்னுடைய இந்தக் கவர்ச்சி அல்லது பயங்கர அம்சங்களை அவன் எண்ணிப் பார்த்ததில்லை. இப்போது எண்ணிப் பார்க்கிறபோது ஒரு வேளை பாருக்குட்டி சொல்வது உண்மைதான் போலும் என்று தோன்றிற்று. அவனுக்குக் கமலாவைப் பற்றிய நினைவு வந்தது. இது வரை பழுத்த — தெளிந்த ஓர் எச்சரிக்கை உணர்வு அவனுள் இருக்கத்தான் இருந்தது. ஒரு நிலையிலிருந்து அவன் விலக அதுதான் அவனுக்குத் துணை புரிந்து வந்திருக்கிறதென்பது புரிகிறது.

அவனையும் அறியாமல் அவனுடைய அந்தரங்கம் பாருக்குட்டியை எச்சரிக்கையுடன் ஒரு தடவை பார்த்தது.

"இன்னமும் ரயில் புறப்படவில்லையே?" என்றாள் பாருக்குட்டி, வெளியே தலைநீட்டி. வண்டியின் கார்டு போய்க் கொண்டிருந்தார். அவரைப் பார்த்து, "ஸாரே, வண்டி எப்போது புறப்படும்?" என்று கேட்டாள்.

"புறப்பட்டு விடும் அம்மா. எல்லாம் முடிந்து விட்டது" என்றார் அவர்.

"சீக்கிரம் முடியுங்கள்... பசி உயிர் போகிறது."

அவர் சிரித்தபடியே போனார்.

"ஸாரே, இங்கே நேந்திரம் பழம் கிடைக்குமா?" என்று கேட்டாள் மற்றொரு பிரயாணியைப் பார்த்து.

அவன் அவளைப் பார்த்த பார்வையில் நேந்திரம் பழம் எங்கே இருந்தாலும் உடனே போய்க் கொண்டு வந்துவிடுவான் போலிருந்

தது. உடனே வாங்கி வரப் புறப்பட்டும் விட்டான். காசுகூட வாங்கிக் கொள்ள வில்லை.

"ஆளைப் பார் ஆளை!... கள்ளத்தனமாகப் பார்க்கி றான்!" என்றாள் பாருக் குட்டி பலமாகச் சிரித்த வாறே.

நாணு உள்ளூற அவ ளுடைய இந்தச் சீற்றத்தை ரசித்தான். ஏனெனில் அந் தகைய கள்ளத்தனம் ஏதும் அவனிடம் இல்லை என்ப தால் அல்லவா இவ்வளவு நெருங்கி அவன் பழகுகி றான்? ஆனால் உண்மையில் அவனிடம் கள்ளத்தனம் இல்லையா? நெஞ்சின் மூலை யில் குறுகுறுக்கிறதே. இந்த உணர்வு என்ன? முதலியார் சொன்னாரே. நிஜமான காதலை அவன் அறிந்தால் அதன் இல்லாமைப் பிரமை மாறிப் போகு மென்று! கடவுளிடம் கொள்ளும் அன்புகூடக் காதலாம்! "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி..." என்று ஒரு பாடலை அம்மா பாடுவாளே! அப்பாவின் நினைவு வந்ததும் மீண்டும் எச்சரிக்கை உணர்வு தலை தூக்கிற்று.

"நீங்கள் தூங்கவேயில்லையே! படுக்கிறீர் களா?" என்று கேட்டாள் பாருக்குட்டி.

"படுத்தால்கூட நல்லதுதான்...ஆனால்..." கொட்டாவி பீறிக் கொண்டு வந்தது.

"ஆனாலென்ன? கம்மா படுத்து இப்படிக் காலை நீட்டிக்கொள்ளுங்கள்." அவள் நகர்ந்து உட்கார்ந்தவாறே சொன்னாள்.

நாணு படுத்தான். இந்நேரம் உட்கார்ந்தே வந்திருந்ததால் முழங்காலில் வலி கண்டது. காலை நீட்டி. "அப்பாடா!" என்றான்.

"ஏன், வலிக்கிறதா?"

"இல்லை, இல்லை..."

"பொய் சொல்லாதீர்கள்... நான் பிடித்து விடட்டுமா?"

"வேண்டாம்...வேண்டாம்."

அவள் அவன் காலைப் பற்றியே விட்டாள் அதற்குள். அந்த வெண்ணெய்க் கைகள் பட்டதும் காலில் இருந்த வலி நெருங்கக்கூடத் தாவி விட்டது. நாணு பதறியபடியே எழுந்து. "ஊஹூம்...இது கூடாது" என்றான்.

"ஏன் கூடாது?" பேசாமல் படுங்கள். சொல்கிறேன்."

"பாருக்குட்டி!"

அவள் முகம் சற்றே கறுத்தது. "அட. உங்களுக்கும் பயமாகத்தான் இருக்கா?" என்றாள். இதுவரை சிரித்தே வந்தவளின்



போபி: ஏன் தாத்தா உனக்கு வர வரக் கை ரொம்ப நடுங்குறதே!

தாத்தா: இல்லையே! நீ எப்பப் பார்த்தே?

போபி: நீ பூஜையில் மணி அடிக்கிற போது வடவடன்னு கை நடுங்கித்தே!

விழிகள் அப்போதுதான் கலங்கின. "யாருமே என்னைப் புரிந்து கொள்ள மாட்டீர்களோ? நாரா யண், நீங்களும் என்னைப் புரிந்து கொள்ளவில் லையா?" என்று கேட்டாள்.

கேட்டாளா? கேள்வியா அது! ஒரு பெரிய புதிருக்கு விடையல்லவா அது! நாணு வுக்கு அந்த விடைதான் வேண்டும். அது கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் எதிரே இருக்கிற அந்தப்பெண்ணை, அந்தப் பெண்மைக்குள் இருக்கிற குழந்தையை, அந்தக் குழந்தையின் அன்பு உள்ளத்தை, அந்த உள் ளத்தின் கள்ளமற்ற தன்மை யாவற்றையும் கருட்டிக் கொள்ளத் துடித்தான். ஆனால் காலடியில் அமர்ந்த கோலமே ஒரு பூகம்பமாகி விட்டதே! நெஞ்சடியில் என்றும் பிரளயமே பொங் காதோ!

"அதல்ல, பாருக்குட்டி... எனக்கு என் னவோ..."

"நான் சொல்வதைக் கேட்கிறீர்களா, இல்லாவிட்டால்?" பாருக்குட்டியின் உரிமை அதட்டிற்று. நாணு அவள் சொன்னபடியே கேட்டான். வண்டிக்குள் நடந்த இந்த நாட கம் மிகவும் ரசமாக இருந்தது மற்றவர் களுக்கு. உதட்டுக்குள்ளும் கண்ணுக்குள்ளும் சிரிப்பை மறைத்து அவர்கள் பார்த்த பார்வை! பெரிய பேச்சு!

அவர்கள் கிடக்கட்டும். மனத்துக்குள் விருந்து. அந்தக் கிழவன் எச்சரிக்கைப் பலகையைக் காட்டி, ஏதோ சொல்கிறானே, அது....?

"இந்தா குட்டி, பழம்!" என்று வெளிப் புறம் குரல் கேட்டது.

"யாரடா, உன் குட்டி?...சீ! போ!" என்றாள் பாரு கோபமாக.

"அட, கோபப்படாதே, குட்டி..."

"போகிறாயா, இல்லாவிட்டால்...?"


கிழவர் விழித்துக் கொண்டு, "என்னம்மா அது? யார் அங்கே?" என்று கேட்கவும் வெளியே நின்றவன் நழுவி விட்டான்.

நாணுவுக்கு அவளைப் பார்க்கவே பயமாக இருந்தது. நெஞ்சுக்குள்ளிருந்த கிழவனே எதிரே அமர்ந்திருக்கிறதுபோல ஒரு பிரமை. உள்ளும் வெளியும் எச்சரிக்கை உணர்வுகளே அவனுக்குத் தெரிந்தன.

கண் கழன்றது.

தூக்கத்துக்குள் அவன் மெல்ல மெல்ல நழுவினான். (தொடரும்)

சேமிப்பின் நன்மைகளை
சிறு வயதிலேயே சொல்லிக் கொடுங்கள்



ஒவ்வொரு வீட்டுக்கும் களிப்பூட்டுவது சின்னஞ் சிறுவர்கள். அவர்களை எப்போதும் சந்தோஷமாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும், பாதுகாத்தும் வரவேண்டும். இது நம்முடைய பொறுப்பு. அவர்களுடைய எதிர் காலத்துக்கும் நாம் வகை செய்யவும் வேண்டும். நல்ல ஆற்றல்களை அவர்களிடம் வளர்க்க வேண்டும். சிண்டிகேட் பாங்கியில் உங்கள் குழந்தைக்காக ஒரு சேமிப்புக் கணக்கு, அல்லது வளர்ந்து கொண்டே போகும் 'டிபாசிட்' கணக்கு இன்றே ஆரம்பித்து வையுங்கள். அதன் மூலம் சிறுவர்களாக இருக்கும்போதே அவர்களுக்கு சேமிப்பின் நலனை உணர்த்துங்கள்.


சிண்டிகேட் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு அலுவலகம்:
மணிபால்

SYNDICATE BANK LTD.

Regd. Office: MANIPAL

SYS/SBT/65



இணையற்ற வேலைப்பாட்டுக்கு
பிரசித்திபெற்ற
அரவிந்த்
மிக நேர்த்தியான உயர்ரகத் துணிகளைத் தயாரிப்பவர்கள்
ஸான்ப்கி பாப்ளின்ஸ்
ஷர்ட்டிங்ஸ்: ஸ்டிரைப், டாப்பி, செக், பைஜாமா
தோதிஸ்: மெர்ஸிரைஸ்ட் லான்: 5531, ஸூட்டிங்ஸ்: காபர்டீன்
பிரிண்ட்ஸ்: ப்ரிண்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்ளின்ஸ்
ஜோசவான கலர் புட்டாக்கள்
2x2 கவர்ச்சியான முழு வாயில்கள் - விளைவிலும், புட்டாக்களிலும்
SANFORIZED
Arvind Quality
டெரிலேஸ்ட்* மற்றும்
டெரிலேஸ்ட் டபுள்
டெஸ்டெட்
அரவிந்த் மில்ஸ் லிமிடெட்
அஹமதாபாத்
*REGISTERED USERS

சூழ்ச்சி பொய்த்தது!



''பன்னிரண்டு ஆயிரம் சிப்பாய்களா கொலையுண்டனர்? இங்கு தோல்வி கண்டதில் இந்திய உபகண்டத்திலிருந்தும் நாம் வெளியேறும் நிலை உண்டாகி விடலாம். சிந்திக்காமல் தொடங்கப்பட்ட போர் இது'' — கவர்னர் ஜெனரல் எல்லன் ப்ரோ வருத்தத்துடன் கூறினார்.

''என்னால் முடிந்த எல்லா உபாயங்களையும் செய்து பார்த்தேன். மலைகளைத் தாண்டிப்போவது கடினம். வளைவான குறுகிய கணவாய்களில் சிக்குண்டால் எதிரிகளின் தாக்குதலிலிருந்தும் தப்பவே முடிவதில்லை. நாம் முற்றிலும் கண்டறியாத வெய்யில்'' என்றார் ராணுவ தளபதி நாட் பரிதாபத்துடன். அவருடைய முகம் வெந்து கன்னி யிருந்ததை எல்லன் ப்ரோ கவனித்தார்.

''எப்படியிருந்தாலும் சரி, நாம் தோல்வி கண்டோம் என்று இந்திய மக்களுக்கும் இங்கிலாந்துக்கும் தெரியக் கூடாது. ஆப்கானிஸ்தானத்திலும் நமது ஆதிக்கம் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் ஆயிரம் ஆண்டுகள் மத்திய ஆசியாவிலும் இந்திய உபகண்டத்திலும் நிலைக்க முடியும்.'' — கவர்னர் ஜெனரல் எல்லன் ப்ரோவின் உதடுகள் உள் ஒலியாக ஒலித்தன.

''பாரசீகத்தின் கொட்டத்தை அடக்கினால்தான் இது சாத்தியம். இதற்கு ஆப்கானிஸ்தான் நமக்குத் தேவை. தளபதி நாட் தயங்கித் தயங்கிக் கூறினான். இவ்வளவும் நாம் ஆப்கானிஸ்தானத்தை வென்றிருந்தால்தானே சாத்தியம்?'' தளபதியின் பேச்சில் நிராசையின் சாயல் நிழலிட்டது.

''நாம் இவ்வளவு பெரிய இந்திய உபகண்டத்தை வென்றுவிட்டோம். சிறிய நாடு தான் ஆப்கன். ஆனால் அதை வெல்ல முடியவில்லை. ஓய்வு பெற்று நாம் இங்கிலாந்து திரும்பியதும் அங்கே நம்மை நாமேதான் வரவேற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.'' எல்லன் ப்ரோ கம்மிய குரலில் முணுமுணுத்தார்.

''மன்னிக்க வேண்டும். தங்கள் உத்தரவு கிடைத்ததும் நான்...''

''என்ன சாதித்து விட்டாய்? காபூலையும், கஜினியையும் அழித்து விட்டேன் என்று பெருமை அடித்துக் கொள்ளுகிறாயா?''—கவர்னர் ஜெனரல் சீறினார்.

''இல்லை, இந்திய எல்லையில் உள்ள முஸ்லிம்கள் உதவி செய்திருந்தால்...'' நாட் அதற்கு மேல் சொல்லத் தடுமாறினான்.

''ஏன் உளறுகிறாய்? எல்லைப்புறத்திலும் நமது ஆட்சிதான் நடைபெறுகிறது.'' கண் சிவந்து எல்லன் ப்ரோ தீயைக் கக்கினார்.

''அப்படி வெளிப்படையான எதிர்ப்புக் காணவில்லை. ஆப்கன் முஸ்லிம் நாடு. நாம் முஸ்லிம் நாட்டின் மீது படையெடுத்தோம். அதனால் எல்லையில் உள்ளவர்கள் நமக்கு உதவத் தயங்கினார்கள். அவசர உதவி கிடைக்காததால் தோல்வி உண்டாகியது.''

கவர்னர் ஜெனரல் நிதானித்தார்.

''ஆம், நீ சொல்வதும் சரிதான். எல்லை மாகாணத்தில் முஸ்லிம்களும், பட்டாணியர்களும் காபூலிகளும் அதிகம் என்பது தெரிந்ததுதான். அவர்கள் ஜாதி வெறி கொண்டவர்கள் என்பதும் தெரிந்ததுதான்....ஏதாவது உபாயம் செய்யாவிட்டால் இந்திய நாட்டின் நிர்வாகம் கூடப் பாதிக்கப்படலாம்.'' சிந்தனையின் எல்லையில் நடை பயின்றார் எல்லன் ப்ரோ. தளபதி நாட் மெள்ள அவரை நெருங்கினான்.

''என்ன?'' எல்லன் ப்ரோவின் புருவங்கள் அம்பேற்றிய வில்லைப் போல் விரிந்தன.

''நாம் இந்தப் போரில் தோல்வியுற்றதென்னவோ உண்மை. இந்த நாட்டில் உள்ள இந்துக்களின் உதவியை நாம் நாடினால்...'' அதற்கு மேல் 'நாட்'டின் நா எழவில்லை.

சதி ஆலோசனை செய்பவர்கள் தங்கள் வாக்கியங்களை முழுதும் சொல்வதில்லை. சற்று இங்கித வார்த்தைகளைக் கூறினாலே புரிந்து விடும். தளபதி நாட் இங்கு இதே முறையைக் கையாண்டான்.

''ஊம்... இந்துக்களின் உதவி கிடைத்தால் நல்லதே. உன் நாட்டு நிர்வாகத்திலும் அவர்கள் உதவி சரியாகக் கிடைக்கவில்லை. ஏதாவது மாய ஜால வித்தைகள் செய்தால் தான் அவர்கள் உதவி கிட்டும்.''

''நான் தங்களுக்கு இரண்டு அழகிய கதவுகளை...'' தளபதி தன்னுடைய பேச்சை முடிக்கவில்லை.

''ஆம். அவை மிகவும் அழகானவை. நல்ல வேலைப்பாடுகள் அமைந்தவை. இந்து தேவதைகளின் உருவங்கள் அவற்றில் செதுக்கப்பட்டுள்ளன. நான் அவற்றை ட்யூக் ஆப் வெல்லிங்டனுக்கு அனுப்ப முடிவு செய்துள்ளேன். நல்ல பொருள்களைச் சேகரித்து வைக்கும் அவர் இதைக் கண்டதும்'' எல்லன் ப்ரோ மகிழ்ச்சியுடன் கூறினார்.

''ஆனால் நான் கூற வருவது வேறு...''

''என்ன?''

கம்பீரமாகத் திரும்பிப் பார்த்தார் எல்லன் ப்ரோ.

''இதைக் கொண்டு இழந்த பெருமையைத் திரும்பவும் அடைவதாக இந்துக்களைப் பெருமிதம் கொள்ள வைக்கலாம் என்பது என் எண்ணம். எண்ணூறு ஆண்டுகளாகப் புகைந்து கொண்டிருக்கும் பகை புத்துயிர் பெறும். அவர்கள் முஸ்லிம்களை ஜன்ம விரோதிகளாகக் கருத ஆரம்பித்து விடுவார்கள்.'' தளபதி நாட் எதிர்காலத்தில் விளையக் கூடிய பயன்களை அடுக்கடுக்காக எதிரில் வைத்தான். ''இவை நாம் வெகு நாட்கள் இந்தியாவில் நீடித்திருக்க உதவும்.''

எல்லன் ப்ரோ நெஞ்சு நிமிர்ந்து விறைப்புடன் தளபதியை நோக்கினார். அவர் தமது சுருட்டின் சாம்பலை எதிரிகளை அழிப்பது போல் விரலால் தட்டிவிட்டு மறுபடியும் புகைத்து மேலே சொல்லும்படி உத்தரவு கொடுப்பது போன்றிருந்தது.

''பதினோராம் நூற்றாண்டில் இந்த நாட்டின்மீது முகம்மது கஜினி என்பவன் படை எடுத்தானும். சோமநாதர் ஆலயத்தை அழித்துக் கொள்ளையிட்டு எத்தனையோ ஒட்டகங்களில் அவ்வாலயத்தின் செல்வங்களை எடுத்துச் சென்றானும். அவன் அந்தக் கோயிலின் கதவுகளையும் கூட எடுத்துச் சென்றதாக...''

''நீ கேள்வியுற்றாய். அவ்வளவுதானே? அவன் ஏன் இந்தக் கதவுகளை எடுத்துச் சென்றானும்?''

''அவை மிகவும் அழகான வேலைப்பாடமைந்தவை. சிற்பியின் சிந்தனைக் களஞ்சியமாகத் திகழ்ந்தவை. அதோடு அவற்றில் நூற்றுக் கணக்கான வைரங்கள் புதைக்கப்பட்டிருந்தனவாம். இந்துமத தேவதைகளின் உருவங்கள் மதத்தின் சிறப்பைக் குறிக்கும். வைரங்கள் மன்னர்களின் செல்வத்தைக் குறிக்கும். அதனால் கதவுகளைத் தனது நாட்டுக்கு எடுத்துச் சென்றுவிட்டானும்.'' தளபதி நாட் தனது உபாயம் வெற்றி பெறுவதைக் கண்டு பேசும் மொழிக்குச் சிறகும் கட்டி வேகமாக்கினான்.

''அந்த வெறியன் கதவுகளைத் தூக்கிச் சென்றானா?'' எல்லன் ப்ரோ முழுக்க முழுக்க ஆங்கிலேயன். விவரம் முழுவதும் அறிய விரும்பினான்.

''இந்துக் கடவுளை அவமதிப்பது அவன் விருப்பம். தான் இறந்ததும் தனது சமாதியில் இந்தக் கதவுகளைப் பொருத்த வேண்டும் என்று ஏற்பாடுகள் செய்தானும்.''

''இந்தக் கதவுகளை வைத்துக் கொண்டு நாம் இந்துக்களின் ஒத்துழைப்பையும் பெற முடியும் என்பது உனது நம்பிக்கை. அது தானே?'' ப்ரோவின் உதடுகள் அசைந்தன.

''ஆம், நாம் இந்துக்களின் ஆதரவைப் பெற முடியும். அவர்களுடைய பெரிய படையை திரட்டி ஆப்கானிஸ்தானத்துக்குச் சென்றால்...''

''நல்ல திட்டம்தான். இவை சோமநாதத்தின் கதவுகள் என்று விளம்பரம் செய்து மறுபடியும் அவற்றை அந்தக் கோயிலில் அமைத்து விட ஏற்பாடு செய்யலாம். முஸ்லிம்களிடம் அவர்களுக்கு வெறுப்பும் அதிகரிக்கும். நாம் எந்த உதவியும் இந்துக்களிடம் பெறலாம். ஆனால்.....'' தயங்கியபடி எல்லன்ப்ரோ கூறினார்.

''இதனால் இந்திய முஸ்லிம் சமுதாயம் நம்மிடம் விரோதம் கொள்ளாதா?'' எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய நிர்வாகச் சிக்கலையும் கூடவே சிந்தித்தார் எல்லன் ப்ரோ.

''இதைப் பற்றிப் பின்னர் சிந்திக்கலாமே!'' என்றான் நாட் பணிவுடன்.



''மலிவாக் கிடைக்கிறது என்கிறதுக்காக இப்படி அளவு பார்க்காமல் வாங்கிண்டு போறீங்களே! உங்க பெண்ணுக்குச் சரியா இருக்க வேண்டாமா?''

''எல்லா சைசுக்கும் எனக்குப் பெண் குழந்தைகள் இருக்கு!''

''இல்லை, நாம் எதையும் தீரச் சிந்தித்தாக வேண்டும்'' என்றார் கவர்னர் ஜெனரல்.

''நான் தங்கள் உத்தரவு கிடைத்ததும் இந்தியா திரும்பிவிட முயன்றதாகவும் வரும் வழியில் கஜினிக்குச் சென்று சோமநாதர் ஆலயத்தைக் கொள்ளையிட்ட முகம்மதுவின் கல்லறையைப் பார்த்ததாகவும் அதன் கோபுரத்தைப் பீரங்கிகளால் தகர்த்து விட்டதாகவும் இந்துக்களிடம் பரப்பி விட்டால்..?'' தளபதி நாட் அஸ்திவாரத்தை மிகவும் ஆழப்படுத்த முயன்றான்.

''சரி, நீ போகலாம். நான் இதைப் பற்றிச் சிந்திக்கிறேன்'' எல்லன் ப்ரோ தனிமையை விரும்பினார். சதித் திட்டம் வகுப்பவர்கள் எப்பொழுதும் தனிமையைத்தானே சிறப்பாகக் கருதுவார்கள்!

''எதற்கும் இங்கிலாந்தின் ஆதரவைப் பெற்றாக வேண்டும்.''

''இந்துக்கள் நம்மிடம் விசுவாசமாக இருப்பார்கள்.''

''இந்துக்களும் முஸ்லிம்களும் விரோதிகளாகி விடுவார்கள். அதனால் நமக்கென்ன?''

தளபதி நாட்டும், கவர்னர் ஜெனரல் எல்லன் ப்ரோவும் பல வாரங்கள் பிரோஸ்பூரிலும், சிம்லாவிலும் தனிமையாகச் சந்தித்தார்கள்.

ஆப்கன் போரில் கண்ட தோல்வியை வெற்றியாக மாற்றி விடும் நோக்கத்துடன் எல்லன் ப்ரோ போர்க்களத்தினின்றும் திரும்பிய தளபதிகள் நாட்டையும், பொல்லக்கையும் பிரோஸ்பூரில் பிரமாதமாக வரவேற்றார். அதற்குப் பின் சிம்லாவினின்றும் இரண்டு மகத்தான பிரகடனங்கள் வெளியாகின.

இந்திய நாட்டு மன்னர்கள், சிற்றரசர்கள், இந்துக்கள் முதலியவர்களுக்குச் சொல் அலங்காரமான அந்தப் பிரகடனம் கூறியது.

''ஆப்கனை வென்ற எங்கள் ஆங்கிலேயரின் படை எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாட்டுக்குச் செய்யப்பட்ட தீங்குக்குப் பழி வாங்கியது. முகம்மத் கஜினியின் சமாதி இடிக்கப்பட்டது. அதில் பொருத்தியிருந்த சோமநாத் ஆலயக் கதவுகள் பாரத நாட்டுக்குப் பெருமையுடன் எடுத்துக் கொண்டு வரப்பட்டன.''

''இந்தக் கதவுகள் யுத்தப் பரிசாக இந் நாட்டுக்கு அளிக்கப்படுகிறது.'' இந்தப் பிரகடனங்களை வெளியிட்ட எல்லன் ப்ரோ, ''கதவுகள் பாரத நாட்டில் ஊர்வலமாகச் செல்லட்டும். பின்னர் அவை இந்து சாஸ்திர முறைப்படி சோமநாத் ஆலயத்தில் பொருத்தப்படட்டும்'' என்று உத்தரவிட்டார்.

1842ம் ஆண்டு இறுதியில் இந்த மகத்தான பணி ஆரம்பமாகியது. பஞ்சாப், சிந்து, சாகர், புந்தேல் கண்டம், நேபாளம், ஹைதராபாத் முதலிய இடங்களில் வெகுவாகச் சூறாவளிப் பிரசாரம் நடந்தது.

''முஸ்லிம்களின் காலத்தில் நடந்த கொடுமைகளுக்கு இது எடுத்துக்காட்டு.''

''நாங்கள் இந்துக்களுக்கு விரோதிகள் அல்ல.''

''உங்களுக்கு யாரால் கொடுமை செய்யப்பட்டிருந்தாலும் நாங்கள் அதை நீக்குவோம்.''

ஆங்கிலேயரின் பிரசார யந்திரம் வேகமாகச் சுழன்றது. நாட்டின் பல பகுதிகளில் கதவுகள் ஊர்வலமாக வந்தன. 1843ம் ஆண்டு ஜனவரி 18ந் தேதிய தமது கடிதத்தில் கவர்னர் ஜெனரல் பிரிட்டிஷ் மந்திரி ட்யூக் ஆப் வெலிங்டனுக்குப் பின்வருமாறு எழுதினார்:

''சோமநாத்தின் கதவுகளை மறுபடியும் அங்கு பொருத்துவதால் நமக்கு இந்து சமுதாயம் விசுவாசமாக இருக்க ஆரம்பிக்கும். இதில் எனக்கு ஐயப்பாடே இல்லை. நமது உண்மையான நோக்கம் இந்துக்களின் ஆதரவை அடைவதுதான். முஸ்லிம்கள் இதனால் கசப்படைய நியாயமே இல்லை.''

*　　　*　　　*

''என்ன இருந்தாலும் ஆங்கிலேயரிடம் நேர்மையுண்டு.''

''அவனுக்கு வியாபாரத்தில்தான் நோக்கம். மதத்தில் தலையிட மாட்டான்.''

''இந்து மன்னர்கள் கூட எண்ணிப் பார்க்க முடியாததை இவன் சாதித்து விட்டான்.''

''முஸ்லிம்கள் இந்த நாட்டைக் கொள்ளையடித்துப் பாழ்படுத்தினார்கள். இவனும்தான் ஆள்கிறான். கொள்ளை நடத்தித் தொந்தரவு தருகிறானா?''

''வெள்ளையர்கள் தவறு செய்தாலும் தண்டிக்காமல் விடுவதில்லை. இவ்வளவு என்ன செய்தான்?''

''கஜனியின் மாளிகையைப் பார்த்தாயா?''

''சோமநாதரின் அருள் என்று சொல்லு. ஆயிரம் ஆண்டுகள் ஆயினும் அதன் தெய்வீகத் தன்மை மாறவில்லை.''

''இந்தக் கதவுகள் வந்த பின்னர்தான் சோமநாத் கோயில் பூசாரிகளின் முகத்தில் மகிழ்ச்சி காணப்படுகிறது. இந்துக் கோயில் பழக்க வழக்கத்தை மதித்துப் பூசாரிகளை அழைத்து மரியாதை செய்கிறுனே!''

''அவன் ஆங்கிலேயனுயிற்றே! எதைச் செய்தாலும் முறைப்படிதான் செய்வான். பழக்க வழக்கத்தை மதிக்க வேண்டும்.''

கதவுகளுக்கு மலர் மாலைகளும், பட்டாடைகளும் அளிக்கப்படுகின்றன. மக்கள் கடல் போல் கதவுகளைக் காண வந்த வண்ணம் இருக்கின்றனர்.

இப்படி யெல்லாம் எண்ணிக் கனவுலகில் சஞ்சாரம் செய்து கொண்டிருந்த எல்லன்பரோ நினைவு பெற்றுப் பூலோகத்துக்கு வரப் பல மாதங்கள் ஆயின.

ஃ ஃ ஃ

நாட்களும் மாதங்களும் உருண்டன. இந்துக்களிடம் எந்த விதமான மாறுதலும் உண்டாகவில்லை. இந்து முஸ்லிம்கள், வடமேற்கே எல்லையில் உள்ளவர்களான பட்டாணியர்கள், காபூலிகள் இதைக் கண்டு பயப்படவும் இல்லை. பெஷாவரிலும், லாகூரிலும் கதவுகளைப் பற்றி ஒலிக்கும் பேச்சு நிழல் படிவது போல் வேறுவிதமான சூழ்நிலையும் உருவாகியது.

''இந்துக்களையும் முஸ்லிம்களையும் மோத விடச் செய்யும் பலமான முயற்சி இது!''

''சமுதாய வாழ்வில் ஒருவரையொருவர் பிரித்திருக்க முடியாது. ஆங்கிலேயர்கள் தோல்வியடைவார்கள்.'' ஒரு வயோதிகச் சீக்கியர் கூறினர்.

''ரஞ்சித் சிங் ஆப்கனை வெற்றி கொண்டாரே. இந்த ஆங்கிலேய வெள்ளைக் குரங்குகள் ஏன் மண்ணைக் கவ்வினர்கள்?'' — பெஷாவரின் நடுநாயகமாக விளங்கிய ஒருவர் கூறினர்.

''மத அடிப்படையில் அவன் போர் செய்ய வில்லை.'' ஒரு பட்டாணியன் கூறினன்.

''நாதிர்ஷா டில்லியைப் பல நாட்கள் கொள்ளையிட்டானே, அப்போது டில்லியின் அரசன் முகலாய வம்சத்தைச் சேர்ந்தவன் தானே? இருவரும் முஸ்லிம்கள் இல்லையா?'' காசிம்கான் என்ற பட்டாணிய வாலிபன் தவருத அம்புகளைத் தொடுத்தான்.

''ஆம்!'' என்றார் ஒரு சீக்கியக் கிழவர்.

''இந்துஸ்தானை அவமதித்த அந்த நாட்டின் உள்ளே புகுந்து பழி வாங்கியது ரஞ்சித் சிங். ஆதலால் அவருக்கு எல்லோருடைய ஆதரவும் இருந்தது.'' அணையில் நீர் கசியும் இடத்தைக் கண்டுபிடித்தான் காசிம்கான்.

''சோமநாத் கதவுகள் அங்கே இருந்திருந்தால் ரஞ்சித் சிங் விட்டு வந்திருப்பாரு?'' சீக்கியக் கிழவர் எழுந்து நின்றார்.

''கட்டாயம் கொண்டு வந்திருப்பார். வெள்ளைக் குரங்குகள் அமைதியாக வாழும் சமுதாயத்தில் விஷம் கலக்க முயலுகின்றன. இதன் உள் நோக்கத்தை அறிந்துவிடுவது நல்லது.'' காசிம் கான் சீக்கியக் கிழவரை நோக்கினன்.

காசிம்கானின் வாதத்தை அனைவரும் அங்கீகரித்தனர். ''இந்த நாட்டினின்று கொள்ளையடித்த நாதிர்ஷாவின் செயலுக்குப் பழிவாங்கிய மன்னன் ரஞ்சித் சிங்.'' இந்த வாதம் எங்கும் ஒளிபோல் பளிச்சிட்டது.

''அதோ, ப்ரைடன் என்ற டாக்டர் வருகிறார் போலிருக்கிறது. அவர் தளபதி நாட்டின் படைப் பகுதிக்கு டாக்டராக இருந்தவர். அவர் ஏன் தனியாக வருகிறார்?'' அவரை நன்கறிந்த காசிம் கூறினன். 'நதியின் நடுவே தனியாகத் தத்தளிக்கும் ஒருவனுக்குப் பெரிய மரக்கட்டை கிடைத்து விட்டது. எப்படியும் வெள்ளையரின் சோமநாத் கதவு ரகசியம் அம்பலத்துக்கு வரவேண்டும்' என்ற துடிப்பு அவனிடம் காணப்பட்டது.

டாக்டர் பிரைடன் வந்தார். அங்குள்ளவர்களை நிதானமாகப் பார்த்துவிட்டு ''என்ன காசிம், நலம்தானே?'' என்றார்.

''ஓ, என் அருமை டாக்டர்!'' அவன் எழுந்து நின்று அவரை இறுக அணைத்துக் கொண்டான்.

டாக்டர் ப்ரைடன் பெஷாவரில் பல ஆண்டுகள் ராணுவ டாக்டராக இருந்தவர். அவர் நன்ருக உருது பேசினர்.

''நான் ஆப்கன் போர்க்களத்திலிருந்தும் வருகிறேன், அப்பா.''

''தனியாகவா?'' என்று காசிம் பரிதாபத்துடன் கேட்டான்.

''ஒன்றும் கேட்காதே காசிம். கவர்னர் ஜெனரலின் உத்தரவு!'' என்று சொல்லி விட்டு, ''தளபதி நாட் முதலில் ஆயிரம் வீரர்களுடன் கிளம்பிவிட்டான். வரும்போது கஜினியையும், காபூலையும் தரைமட்டமாக்கி விட்டிருக்கிறன். நாங்கள் நான்கு நாட்கள் தாமதித்து வந்தோம். எங்களைத் தளபதி நாட்டின் படை என்று தெரிந்து கொண்டு தாக்கினர்கள். நான் ஒருவன்தான் அதில் மிச்சம்'' என்றார்.

''அப்படியா? படை முழுவதுமா கொல்லப்பட்டது?'' தளபதி நாட்டின் அக்கிரமச் செயலுக்காக மற்றவர் படபடத்தனர். ''படை முழுவதும் வெளியேறிய பின்னர் தானே தளபதி வரவேண்டும்.''

களைத்து மெலிந்திருந்த டாக்டரால் நின்று கொண்டே பேசமுடியவில்லை. காசிம் கான் அவருக்குக் கேக்கும், ரொட்டியும் அளித்தான். அரை நாழிகைக்குப் பின்னர் டாக்டர் கூறினர்: ''போரா அது? பாறைகளைப் பிளந்து கொண்டு எரிமலை போல் வீரர்கள் தோன்றுகிறார்கள். பல நூறு விரோதிகளைக் கொன்று குவித்துவிட்டு மறைகிறார்கள்.'' டாக்டர் பிரைடன் வானத்தையே நோக்கியவாறு கூறினர்.

''தளபதி நாட் அங்கிருந்து எதையாவது எடுத்து வந்தாரா?'' காசிம் விஷயத்தைக் கிரகிக்க இக் கேள்வியைப் போட்டான்.

"ஆம், எடுத்து வந்தார். இன்னுமா அது வந்து சேரவில்லை? அது கவர்னர் ஜெனரலுக்குக் கிடைத்திருக்கும் என்று எண்ணினேன்." பிரேரடன் ஒரே மூச்சில் கூறினார். அவருக்கு எங்கிருந்து தெம்பு வந்ததோ!

காசிம் சோர்வுற்றான். 'சோமநாத் கதவுகள் உண்மைதானா?' என்ற ஐயம் உண்டாயிற்று.

"எப்போது எப்படி எடுத்துச் சென்றார்?" ஒருவருடைய துணிச்சலான கேள்வி இது.

"தளபதி நாட் மூன்று வாரங்களுக்கு முன்னரே எடுத்துச் சென்றார். அதைத் தூக்கிக் கொண்டு வருவதில் என்ன சிரமம்?" காசிம்கானின் உடல் வியர்த்தது. பூமி அவன் கால்களுக்குக் கீழே ஓடி ஒளிந்தது.

ஒரு வியாபாரிகள் இதயத்தை அழுத்திப் பிடித்தவாறு "என்ன எடுத்துச் சென்றார்?" என்று கேட்டார்.

"இன்னுமா உங்கள்வரை செய்தி எட்டவில்லை? உலகமே அறிந்திருக்குமே இதற்குள்!" என்று டாக்டர் மற்றும் ஒரு முடிச்சைப் போட்டு வைத்தார்.

"ஏன் டாக்டர் வளர்த்துகிறீர்கள்? நீங்கள் என்றுமே இப்படித்தான்." காசிம் அலுத்துக் கொண்டான்.

"சொல்லுகிறேன், கேளுங்கள். தளபதி நாட் எடுத்து வந்தது 'தோல்வி' என்ற செய்தி. இதை அறிவிக்கத்தான் அவன் சிப்பாய்களுடன் வேகமாக வந்தான். இருபது பேர்கள் கொண்டது அவன் படை. அவனுடன் திரும்பியது சில பத்து சிப்பாய்கள்."

இந்த அவலநிலையிலும் டாக்டர் பிரகாசத்தை விடவில்லை. காசிம்கான் புத்துயிர் பெற்றவனாகத் தோன்றினான். அவன் எழுந்து நின்றான்.

"தளபதி நாட் கஜினியிலிருந்தும் அழகிய வேலைப்பாடுடன் கூடிய எதையாவது...?"

"எடுத்து வந்திருக்க முடியாது."

"கலை உயர்வு பெற்ற ஆலயக் கதவுகள்."

"இல்லை."

"அவரா தூக்கி வருவார்? அவருடன் வந்த சிப்பாய்கள் தூக்கி வந்திருப்பார்கள்."

"என்ன காசிம், பல மாதங்கள் சரியான உணவு கிடைக்காமல் அவதியுற்ற சிப்பாய்கள் இப்படிப்பட்ட கதவுகளை எப்படித் தூக்கி வந்திருக்க முடியும்? மீதம் உள்ள பீரங்கிகளையும் வெடி மருந்துகளையும் விரோதி நாட்டிலா விட்டு விடுவார்கள்? தளபதி நாட்டுடன் வந்தவர்களில் பாதிப்பேர் கைகால்களை இழந்தவர்கள். இவ்வளவு பெரிய கதவுகளை ஆப்கன் கைபர் கணவாயில் தூக்கி வருவதா? பூமி பிளந்து விழுங்குவது போல் அந்தக் கணவாய்கள் அவருடன் வந்த அத்தனை பேர்களையும் விழுங்கி விட்டனவே?"

"நீங்கள் திரும்பியது தளபதி வந்த வழியாகத்தானே?"

"ஆமாம். அதே வழியாகத்தான்."

"அங்கு யாரையாவது சந்தித்தீர்களா?"

"பல நோயுற்ற சிப்பாய்களை அவன் அநாதையாக விட்டு வந்துவிட்டான். அவர்களுக்கு நான் சிகிச்சை செய்யச் சிறிது நாட்கள் தங்கினேன். அவர்களும் என்னிடம்



[illegible] அவனை இருபது மூப்பது பேருடன்தான் திரும்பியிருக்க முடியும்.''

''உங்களால் எழுதித் தர முடியுமா?''

''கட்டாயம் தருகிறேன். உருதுவிலும், ஆங்கிலத்திலும் எழுதித் தருகிறேன்.'' எல்லன் ப்ரோவின் கபட நாடகத்தை அறியாத டாக்டர் ப்ரைடன் ஆங்கிலத்திலும் உருதுவிலும் எழுதிக் கொடுத்தார்.

ஃ ஃ ஃ

ஜாசிங்கானும் மற்றவர்களும் இனியும் பெஷாவரில் இருப்பார்களா? இருபது வாலிபர்கள் குதிரைகளில் புறப்பட்டுவிட்டார்கள். அவர்களில் இந்து வாலிபர்கள் இருந்தார்கள். சீக்கிய வாலிபர்கள் இருந்தார்கள். பட்டாணியரும், காபுலிகளும் இருந்தார்கள்.

அந்த வட்டாரத்தில் உயர்ந்தவர்கள் என்று மதிக்கப்பட்ட சில வயோதிகர்களும் பின்னணியில் வந்தார்கள்.

''தளபதி நாட் எத்தனை வீரர்களுடன் திரும்பினார்? யார் கதவைக் கொண்டுவந்தது?''

''எண்ணூறு ஆண்டுகளாக மரத்தால் செய்த கதவுகள் அப்படியே இருக்குமா? இவ்வளவு ஆண்டுகளாக அதிலுள்ள வைரங்களை எடுத்துக் கொள்ளாமல் இருப்பார்களா? வைரத்தை எடுக்கும்போது கதவு பின்னப்படாதா? தளபதி நாட் கொண்டு வந்த கதவுகள் புதிதாகவே காணப்படும் காரணம் என்ன?''

''இவை சோமநாத்தின் கதவுகள் இல்லையாம்.''

''வெள்ளையன் செய்தவையாம். இவன் செய்த கதவுகளையா கோவிலில் வைப்பது?''

''இதைக் கொண்டு நாட்டில் மோதலை உண்டாக்க முயலுகிறானாம்.''

''ஆப்கானிஸ்தானத்தில் மறுமுறை படையெடுக்க இந்துக்களின் படை எடுத்துச் செல்ல முயற்சி செய்கிறானாம். இதற்குத்தான் முஸ்லிம்களுக்கு எதிராக இந்துக்களைத் தூண்டுகிறானாம்.''

''ஆப்கன் போரில் ஒன்றரைக் கோடி செலவையும், இருபது ஆயிரம் வீரர்களின் மரணத்தையும் மறைக்கச் செய்யும் முயற்சி இது.''

மக்களின் மனநிலையில்தான் என்ன வேகமான மாறுதல்! வாலிபர்கள் புது வெள்ளம் போல் ஊர்வலம் சென்ற ஊர்களுக்கெல்லாம் சென்றனர். அவர்களுடைய ஆணித்தரமான வாதத்தைக் கேட்டு இன்னும் பலர் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். உண்மை தன்னுடைய பலத்தைக் காட்டிக் கொண்டது.

அவர்கள் சுல்தான்களையும், மன்னர்களையும் சந்திக்கவில்லை. தனவந்தர்களை அணுகவில்லை. ஜமீன்தார்களைச் சந்திக்கவில்லை.

கடை வீதிகளிலும் சந்தைகளிலும், சந்து பொந்துகளிலும் உள்ளவர்களிடமே விஷயத்தைச் சொல்லி டாக்டர் ப்ரைடன் கடிதங்களையும் காண்பித்தார்கள். புயலும், தீயும் கூடியது போல் செய்தி பரவிற்று. மக்கள் கொதிப்படைந்தனர். பலரும் இதைப் பரவச் செய்ய முன்வந்தனர்.

எல்லன் ப்ரோ [illegible] கலவை கண்டு கொண்டிருந்தார். மணலால் கட்டிய தமது கோட்டை தகர்ந்து கொண்டிருப்பது கண்டு அவர் வியந்தார். ''டாக்டர் ப்ரைடன் இறந்திருப்பார் என்று கருதினோம். அவர் ஏன் ராணுவ ரகசியங்களை யெல்லாம் வெளியிட்டார்?''

இந்தத் திட்டம் உருவாகும் முன்னரே சில நல்ல ஆங்கிலேயர்கள் எல்லன் ப்ரோவை எச்சரித்திருந்தார்கள். அவர்கள் இங்கிலாந்துக்குத் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதியிருந்தனர். அங்கிருந்து எல்லன் ப்ரோவுக்குக் கண்டனங்கள் வந்தபடி இருந்தன. இப்போது உள்நாட்டின் நிலை வேறு விதமாகத் திரும்பியது கண்டு அவர் நடுக்கமுற்றார்.

இனியும் ஊர்வலம் தொடர்ந்து செல்ல அவர் விரும்பவில்லை.

''இந்தக் கதவுகளையும் ஊர்வலத்தையும் இந்துக்கள் லட்சியம் செய்யவே இல்லை. முஸ்லிம் சமுதாயம் நமக்கு விரோதமாக்கப்பட்டதுதான் மிச்சம்'' என்று ஒரு பிரபல ஆங்கிலேயர் எழுதினார்.

எல்லன் ப்ரோ தடுமாறினார். மலைப் பிரதேசத்தில் உள்ள சிம்லா அவர் உடலை நடுங்க வைத்தது. ஊர்வலம் ஆக்ராவை நெருங்கிய சமயம் அது.

''கதவுகள் சோமநாத் கோயிலைச் சேர்ந்தவை அல்ல என்பது தெரிந்ததால் ஊர்வலம் நிறுத்தப்படுகிறது. கதவுகள் பாதுகாப்புடன் ஆக்ரா கோட்டையில் வைக்கப்படும்''—கவர்னர் ஜெனரலின் உத்தரவுப்படி கதவுகள் ஆக்ரா கோட்டையில் வைக்கப்பட்டன. அதில் ''இவை சோமநாத் கோயில் கதவுகள் இல்லை என்பது பின்னர் தெரிய வந்ததால் வைக்கப்படுகின்றன'' என்று எழுதித் தொங்க விடப்பட்டது. இந்து முஸ்லிம்களைப் பிரித்து வைக்க முயன்ற முதல் முயற்சி தோல்வியுற்றது. விஷக்கடியிலிருந்தும் இந்து முஸ்லிம் சமுதாயம் தப்பியது. இந்து முஸ்லிம்கள் ஒன்றுபட்டனர்.

''படையெடுத்து வந்த வெறியர்களின் அடாத செயலுக்கும், இன்றைய முஸ்லிம் சமுதாயத்துக்கும் என்ன சம்பந்தம் என்பது வெள்ளை வெறியர்களுக்கு உணர்த்தப்பட்டது!''

1843ல் வெள்ளையர்கள் செய்த இந்தச் சதித் திட்டத்தால் இந்துஸ்தானத்தின் மக்கள் வெள்ளையர் ஆட்சியை ஒழிக்கத் தருணத்தை நாடி நின்றனர்.

இந்த ஒற்றுமைதான் 1857ல் சிப்பாய்க் கலகம் என்று அழைக்கப்பட்ட முதல் சுதந்திரப் போராக மலர்ந்தது. கடைசி முகலாய மன்னன் பகாதூர் ஷா தலைமை தாங்கினார். ராணி லட்சுமி பாயும் தாந்தியா டோப்பேயும் மகத்தான தியாகங்களைச் செய்தனர். நானா சாகப்பின் சாகசங்கள் வெள்ளையரின் குடலை நடுங்க வைத்தன என்பதெல்லாம் நம்மைத் தட்டி எழுப்பிய சுதந்திர எழுச்சிச் சரித்திரத்தின் சாசனமென அமைந்துள்ளன.

சோமநாத் கதவுகள் ஏற்படுத்திய ஒருமைப்பாடுதான் இன்றைய பாரதத்தில் மேலும் வலுப்பட்டிருக்கிறது.

அத்தியாயம் இருபது


இருவருக்கிடையே.....

"சக்கரவர்த்திகளைப் பார்த்தால் நன்றாகத்தானே இருக்கிறார்கள். மகா நவமித் திருவிழாவுக்கும் ஏற்பாடு செய்யச் சொல்லியிருக்கிறார்களே?" என்றார் நாகமநாயக்கர் அமைச்சர் சாளுவ நரசிம்மரிடம்.

"வெளித் தோற்றத்துக்கு அப்படித்தான் இருக்கிறார்கள். நாம் இனி நெடு நாட்கள் உயிரோடு வாழப் போவதில்லை என்று நேற்று விழாவின்போது அவர்கள் கூறியதை நீங்கள் கேட்கவில்லையா? அணையப் போகு முன்பு சுடர் விட்டு எரியும் தீபம் போலத்தான் அவர்கள் நடமாடுகிறார்கள். பெரும்பாலும் அவர்கள் கொண்டாடப் போகும் கடைசித் திருவிழாவாக இது இருக்கும். அதனால்தான் மிகவும் கோலாகலமாக இதைக் கொண்டாடி விட்டுப் போக வேண்டுமென்று நினைக்கிறார்கள்...."

நாகம நாயக்கருக்கு நண்பரின் இந்தப் பேச்சு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. தமக்கு ஏற்பட்டிருந்த மன மாற்றம் சிறிதுகூட அவருக்கு ஏற்படவில்லை என்பதைக் கண்டுகொண்டார் அவர். அதை அவரது முகக் குறிப்பால் உணர்ந்து கொண்டார் சாளுவ நரசிம்மர்.

"நண்பரே! சக்கரவர்த்திகள் என்றைக்குக் கண்மூடுகிறார்களோ அன்றைக்கே நம் இருவரது பதவிகளும் பறி போய்விடும். தகுதிக்கும் திறமைக்கும் ஏற்றபடி அதிகாரிகளை நியமிக்கும் பழக்கம் கிருஷ்ணதேவராயரோடு





ராஜ்யபாரி போகிறது. அவருடைய நெருங்கிய உற்றார் உறவினர்களான இந்த அமர நாயக்கர்கள் சக்கரவர்த்திகள் உயிரோடிருக்கும் வரையில்தான் அடங்கியிருப்பார்கள். ஒரு வேளை உங்களை இந்த விஜயநகரத்தில் இருப்பதற்கு அவர்கள் அனுமதித்தாலும் எனக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கவே கிடைக்காது. நான் பிறப்பால் தமிழன். அவர்களாக என்னை வெளியேற்றுவதற்கு முன்னும் நானே வெளியேறுவதற்கு வழி தேடிக் கொள்ள வேண்டியதுதான்.''

திடுக்கிட்டுப் பேரதிர்ச்சியுற்றார் நாகம நாயக்கர். தமிழர் — தெலுங்கர் என்ற அந்தப் பிரிவினைப் பேச்சை அவர் அன்றுதான் முதன் முறையாகத் தம்முடைய நண்பரின் வாயால் சொல்லக் கேட்டார். அரியநாத முதலியாரைப் போலவே சாளுவரும் தொண்டை நாட்டிலிருந்து அங்கு வந்து குடியேறியவர் தாம். ஆனால் அவர் தெலுங்கு நாட்டுப் பெண்மணியை மணந்து கொண்டு அதுவரையில் எவ்வித மன வேற்றுமையும் இன்றி வாழ்ந்து வந்தார்.

'என்னுடைய சம்பந்தியாகப் போகும் இவருக்கா இப்படி ஒரு கவலை வந்துவிட்டது!' என்று நினைத்த நாகமர் ''வேண்டாம், நமக்குள்ளே இப்படி ஒரு பிரிவினை ஏற்பட நீங்கள் இடம் கொடுக்க வேண்டாம்!'' என்றார் பதற்றத்தோடு.

நாகம நாயக்கரைச் சந்தித்து அமைச்சர் சாளுவ நரசிம்மர் பேசிக் கொண்டிருந்த அதே சமயத்தில் மாளிகையின் பின்புறத்தில் கமலா தேவியும் லட்சுமியின் தாயாரும் அளவளாவிக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் அவர்களுக்கு அருகில் இருந்துவிட்டு, லட்சுமி மெல்ல நழுவினாள். விசுவநாதனைச் சந்திக்க வேண்டும் என்ற பரபரப்பு அவளுக்கு.

தனியே சிந்தனையில் ஆழ்ந்திருந்த விசுவநாதனின் அருகில் அவள் சென்றபோது அவன்



அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு ஏதுமே பேசாதிருந்தான். இயல்பாக அவளைக் கண்டவுடன் மலர்ச்சியுறும் முகம் அன்று வாட்டம் அடைந்திருந்தது. கண்களில் புத்தொளி பொங்கவில்லை.

"என் மீது கோபமா உங்களுக்கு?" என்று கேட்டவாறே அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்தாள் லட்சுமி; "மிகவும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டிய இந்த நாளில், என்னவோ போலிருக்கிறீர்களே!"

"மகிழ்ச்சியா? அது எங்கே இருக்கிறது?" என்று அவனுடைய விழிகள் அவளைக் கேட்டனவே தவிர, அவன் அதைக்கூட அவளிடம் வாய்விட்டுக் கேட்கவில்லை.

"உங்கள் தந்தையாருக்கு மலைபோல் வந்த துன்பம் பனிபோல் விலகி விட்டது. என்ன தண்டனை கிடைக்கப் போகிறதோ என்று நானும் அப்பாவும் மிகவும் குழம்பிப் போயிருந்தோம். அதற்காகவும் நீங்கள் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும். அடுத்தாற்போல், நேற்று என் அப்பா நடந்து கொண்ட விதத்தைப் பார்த்தால் நாம் மீண்டும் சந்திக்கவே முடியாதுபோல் தோன்றியது. இப்போது அவர்களே என்னை வற்புறுத்தி இங்கு அழைத்து வந்திருக்கிறார்கள். அதற்காகவும் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். இல்லையா?"

"உன் அப்பா எனக்கு அளித்த தண்டனையைக்கூட நான் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. ஆனால் நீ அளித்த தண்டனைதான் என்னை மிகவும் துன்புறுத்துகிறது. அதை என்னால் தாங்கவே முடியவில்லை" என்று குமுறலோடு கூறினான் விசுவநாதன்.

"நான் தண்டனையளித்தேனா?"

"ஆமாம்; நீதான் என்னை அந்தச் சமயத்தில் கைவிட்டு விட்டாயே. எனக்காகப் பரிந்து நீ உன் அப்பாவிடம் ஒரு சொல் கூடச் சொல்லவில்லை. என்னை அவர்கள் இடித்துரைத்த போது எப்படி உன்னால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடிந்தது?"

விசுவநாதன் அவளை வேதனையோடு விழித்துப் பார்த்தான். அவனுடைய முகத்தின் வாயிலாக அவனது அகத்தின் அடித்தளத்தையே அவள் தன் விழிகளால் ஊடுருவினாள். அவனது நோக்கிய நோக்கை, நுணுக்கிய நுண்ணுணர்வைத் தெரிந்து கொண்ட லட்சுமி திடுக்கிட்டாள். மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தவாறே, "என்னை மன்னித்து விடுங்கள். என்னை மன்னித்து விடுங்கள்!" என்று தேம்பினாள்.

"லட்சுமி! எனக்கு உயிருக்குயிரான நண்பன் ஒருவன், போர்க்களத்தில் நான் பகைவரால் தாக்கப்படும் வேளையில், என்னைத் தனியே விட்டு விலகிக் கொண்டால் எப்படியிருக்கும்? அப்படித்தான் நான் உன்னால் கைவிடப்பட்டது போல் உணர்ந்தேன். உன் அப்பாவின் விருப்பு வெறுப்புக்குத் தக்கபடியே உன் அன்பும் மாறக் கூடியது என்று நான் கனவிலும் கருதவில்லை."

"நீங்கள் என்னைப் புரிந்து கொள்ளவே இல்லை" என்றாள் லட்சுமி; "என் அப்பாவை அங்கு கண்டவுடனேயே எனக்கு மூச்சே நின்று விட்டதுபோல் தோன்றியது; ஏனோ இப்போதெல்லாம் எனக்கு அவர்களைக் காண்பதற்கே அச்சமாக இருக்கிறது. நான் என் சுய நினைவிலேயே இல்லை."

"அச்சமா? எதற்காக நீ அவர்களிடம் அஞ்ச வேண்டும்?"

"நீங்கள் மதுரையில் வெற்றி பெற்ற செய்தியைக் கேட்டதிலிருந்தே அவர்கள் என்னிடம் கடுமையாக நடந்து கொள்கிறார்கள். முன்போல் என்னிடம் எதையும் வாய்விட்டுக் கூறுவதில்லை."

விசுவநாதனின் மனம் ஓரளவு ஆறுதலடைந்தது. தான் அவளை விட்டுப் பிரிந்து சென்ற இடைக்காலத்தில், அமைச்சர் அவளை மிகவும் அச்சுறுத்தியிருக்க வேண்டுமென்று நினைத்தான்.

"தந்தையாரிடம் நாம் அன்பு கொள்ள வேண்டியதுதான்; அவர்களை மதித்து நடக்க வேண்டியதும் நம் கடமை. ஆனால், அன்பு செலுத்துவது வேறு; அஞ்சி நடப்பது வேறு. அஞ்சுவதற்குத்தான் அஞ்ச வேண்டுமே தவிர, தீமைக்கு அஞ்சக் கூடாது. மனிதர்களுடைய பெரும் பகை அவர்களுக்கு வெளியே இல்லை; அது அவர்களுக்கு உள்ளேயும் இருக்கிறது. அச்சம் என்பதும் உட்பகைதான்."

"உறவைப் பற்றிப் பேசவேண்டிய வேளையில் பகையைப் பற்றிப் பேசுகிறீர்களே!" என்று கலக்கத்தோடு கேட்டாள் லட்சுமி.


"உன்னுடைய அப்பாவின் கருத்து என்ன என்பதை என்னால் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. என் அப்பாவை ஓரளவு எனக்குத் தெரியும். சாம்ராஜ்யத்துக்குத் துரோகம் செய்ய வேண்டுமென்ற நினைவு அவர்களுக்குத் தோன்றியிருக்காது. இது விஷயத்தில் உன் அப்பாவின் தூண்டுதலும் இருக்குமென்றே நான் சந்தேகப்படுகிறேன்."

நடுநடுங்கினாள் லட்சுமி. நடந்து முடிந்து போன விஷயங்களை இனியும் பேச வேண்டாமென்று அவனிடம் மன்றாடினாள்.

"என் அப்பாவைப் பொறுத்தவரையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் மனம் மாறி விட்டார்கள். மீண்டும் அவர்களுடைய மனத்தில் துரோக நினைவுகள் வளர்ந்து விடக் கூடாது. ஓரளவு நீயும் நானுமே நம்முடைய தந்தையார்களைப் பொறுத்த வரையில் விழிப்போடு நடந்து கொள்ள வேண்டும்."


"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள் லட்சுமி.

"முதலில் உன் அச்சத்தை உதறித் தள்ள வேண்டும். அடுத்தாற்போல் உன் அப்பா இரகசியமாக நம் சாம்ராஜ்யத்துக்கு எதிரான வேலைகளில் ஈடுபடுகிறார்களா என்பதைக் கவனிக்க வேண்டும். அப்படி ஏதும் நடைபெற்றால் அதை நான் ஆரம்பத்திலேயே தடுத்துவிட முடியும். அவர்களுக்கு ஏதும் நேராமலேயே தடுக்க முயல்வேன். இல்லாவிட்டால் அமைச்சர் அப்பாஜிக்கு நேர்ந்த கதி அவர்களுக்கும் நேரக் கூடும்."



பார்கோ

கேஸ் மாண்டில்கள்



சிறந்த ஒளிக்கும்
நீடித்த சேவைக்கும்

தயாரிப்பவர்கள் :

பார்கோ மாண்டில் ப்ராடக்ட்ஸ்

848-B, கோட்டப்பத்தர் ரோடு,
பரக்காபம்பரம்-56 AS.

ரூ.10,000/- ஜெயிக்க!

144 ரொக்கப் பரிசுகள்

கால்கேட் பேபி பவுடர் புகைப்படப் போட்டி!



1½ வயதிற்குக்கீழோ அல்லது 1½ முதல் 3 வயது வரையிலோ உள்ள குழந்தை உங்களுக்கு இருக்கிறதா? இந்த இரு பிரிவுகள் எதிலும் உள்ள குழந்தைகளின் புகைப்படங்களை அனுப்பிவைக்கலாம். <u>ஒவ்வொரு பிரிவிலும்</u> 72 ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும்:

ரூ. 1,000 முதல் பரிசு

ரூ. 500 இரண்டாவது பரிசு

மற்றும் ரூ. 50 வீதம் 70 ஆறுதல் பரிசுகள்!

கலந்துகொள்வது எப்படி :
மிகவும் சுலபம்! உங்களுக்குத் தேவையானதெல்லாம் இதுதான்
ஒரு புகைப்படம் — பொருத்தமான வயதுப்பிரிவில் உள்ள உங்கள் குழந்தையின் புகைப்படம்
அச்சிட்ட ரசீது — கால்கேட் பேபி பவுடரின் ஒரு லார்ஜ் அல்லது ஜயன்ட் சைஸ் டப்பாவை வாங்கினதற்கு அத்தாட்சியாக ஒரு அச்சிட்ட ரசீது.
ஒரு பிரவேசப்பத்திரம் — நீங்கள் பவுடர் டப்பாவை வாங்கும் கடையிலேயே கிடைக்கிறது.
பரிசு பெற எத்தனை அற்புதமான வாய்ப்புகள்!
இப்பொழுதே கலந்து கொள்ளுங்கள்!

முடிவு தேதி: ஜூன் 30, 1966

வீடுகளுக்கும் மற்றும் உணவு விடுதிகளுக்கும் ஓர் அரிய சாதனம்

லீக்கோ நவீன வீட்டு எரி பொருள்

சிக்கனமானது • மற்ற எரிபொருள்களைவிட அதிக அனலை ஈந்து நீண்ட நேர வெப்பத்தை கொடுக்கிறது • புகையாதது • எந்தரக கரி அடுப்பினிலும் உபயோகப்படுத்தவல்லது.




சிறிய 'லீக்கோ' துண்டுகளை எடுத்துக் கொள்ளவும்.



பிறகு மெல்லிய அடுக்காக அடுப்பினில் பரப்பி வைக்கவும்.




வழக்கமான முறையில் எரிய வைக்கவும்.



சில நிமிடங்கள் கழித்து நன்றாக சுடர் விட்டவுடன் மேலும் வேண்டிய அளவு 'லீக்கோ' சேர்த்துக் கொள்ளவும்.

நெய்வேலி லிக்னைட்
கார்ப்பொரேஷன் லிமிடெட்,
நெய்வேலி-1.



LECO

லட்சுமி குழம்பிப் போய் மௌனமாகவே அமர்ந்திருந்தாள். அவளால் இந்த ஆண்மக்களின் போக்கையே புரிந்து கொள்ள முடியவில்லை. நெடுநாட்கள் பிரிவுக்குப் பிறகு, தடையேதுமின்றிச் சந்திக்கும் நேரத்தில் இதையெல்லாம் எதற்காக விசுவநாதன் பேச வேண்டும்?

"நம்முடைய திருமணத்தைப் பற்றி ஏதும் நீங்கள் கூறவில்லையே?" என்று கேட்டாள் லட்சுமி.

அப்போதுதான் விசுவநாதனுக்கும் அந்த நினைவு வந்தது. "சக்கரவர்த்திகள் இந்த ஆண்டு மஹாநவமித் திருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட விரும்புகிறார்கள். என் அப்பாவுக்கும் உன் அப்பாவுக்கும் அந்த வேலைகளைக் கவனிப்பதற்குத்தான் நேரம் இருக்கும். எனக்குமே அதனால் புதிய பொறுப்புக்கள் வரக்கூடும். திருவிழா முடிந்தவுடன் அவர்களே முன்னின்று அதை நடத்தி வைப்பார்கள்."

"இந்தத் திருவிழாவின் போதாவது நீங்கள் வீர விளையாட்டுக்களில் கலந்து கொள்ள வேண்டும். நான் கண்டு மகிழ்வதற்காகவாவது நீங்கள் கலந்து கொள்ள வேண்டும்!" என்றாள் லட்சுமி.

"உன் ஒருத்திக்காகவே நான் இதற்கு உடன்படுகிறேன்" என்றான் விசுவநாதன்.

லட்சுமிக்கு இது தாங்க முடியாத பெருமையாக இருந்தது. எந்த ஆண்டிலுமே விசுவநாதன் கலந்து கொண்டதில்லை. இளைஞர்கள் கூட்டத்துக்குப் பின்னேயிருந்து அவர்களை ஊக்கப்படுத்தி வந்திருக்கிறானே தவிர, நேரடியாக அவனே அந்த ஆடுகளத்தில் குதித்ததில்லை.

பிறகு அவர்கள் மஹாநவமி என்று அழைக்கப் பெற்ற நவராத்திரித் திருவிழா பற்றிக் குதூகலத்தோடு பேசிக் களித்தார்கள். விஜயநகரமே புதுப் பொலிவு பெற்று விளங்கும் காலம் அது. குறிப்பாக இளைஞர்களுக்கும் மங்கையருக்கும் அது மறக்க முடியாத திருவிழா.

போர்களையும், துன்பங்களையும், அன்றாடக் கடமைகளின் சோர்வுகளையும் அறவே மறந்து நாட்டினர் அனைவருமே அதில் பங்கு கொண்டு களிப்படைவார்கள்.

"நம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கலைகளில் வல்லவர்கள் வந்து கூடப் போகிறார்கள். பல வகையான ஆடல்களும் பாடல்களும் நடக்கப் போகின்றன. பல மொழி பேசும் கவிஞர்களும் அறிஞர்களும் வந்து சொற்போர் நடத்துவார்கள். மற்போர்களும் வாட்போர்களும் இம்முறை பெரிய அளவில் நடக்கப் போகின்றன. நம் நாட்டுச் சிற்றரசர்களைத் தவிர, அண்டை நாடுகளிலிருந்து பாமினி அரசர்களையும் விருந்தினர்களாகச் சக்கரவர்த்திகள் அழைக்கப் போகிறார்கள்!" என்று பெருமையோடு விழாவைப் பற்றிய விவரங்களை லட்சுமியிடம் கூறினான் விசுவநாதன்.

"நீங்கள் கலந்து கொள்வதாலேயே அது சிறப்பாக இருக்கும்!" என்றாள் லட்சுமி.

"நான் கலந்து கொள்ளும் தினத்தன்று உன் அப்பா உன்னை மாளிகையில் அடைத்து விட மாட்டாரல்லவா?" என்று விளையாட்டாகக் கேட்டான் விசுவநாதன்.

ஏனோ அந்த விளையாட்டுப் பேச்சு அவளுக்குச் சுருக்கென்று தைத்தது. விசுவநாதனும் சாளுவ நரசிம்மரும் களத்தில் குதித்து நேருக்கு நேர் வாள் முனை நீட்டி நிற்பது போலவும், அவர்களுக்கிடையில் அவள் அகப்பட்டுக் கொண்டு தவிப்பது போலவும் உணர்ந்தாள்.

அத்தியாயம் இருபத்தொன்று

ஒற்றுமையும் வேற்றுமையும்

விஜயநகரத்து அரண்மனையின் மந்திராலோசனை மண்டபத்தில் முக்கியமான ஒரு சிலர் மட்டிலும் கூடியிருந்தார்கள். சக்கரவர்த்தியின் தம்பி அச்சுதராயர், மருமகன் ராமராயர், சாளுவ நரசிம்மர், நாகமநாயக்கர் ஆகியோர் அடங்கிய கூட்டம் அது. சற்று நேரத்துக்கெல்லாம் அங்கு கிருஷ்ண தேவராயர் விசுவநாதனோடு வந்து சேர்ந்தார்.

"மஹாநவமித் திருவிழா பற்றி ஆலோசனை நடத்துவதற்காகவே உங்களை அழைத்திருக்கிறேன்: வழக்கமாக ஆண்டுதோறும் நடப்பது போல் அல்லாமல் இது எல்லா வகையிலும் சிறப்புள்ளதாக இருக்க வேண்டும்" என்று தொடங்கினார் சக்கரவர்த்தி.

ஒவ்வொருவரும் அவரவருக்குத் தோன்றிய கருத்துக்களைக் கூறலானார்கள். அமைச்சர் சாளுவ நரசிம்மரும் விசுவநாதனும் மட்டிலும் ஏதும் கூறவில்லை.

"விழாவின் வெளிச் சிறப்புக்களைக் குறித்த மட்டிலும் நீங்கள் கூறியதையெல்லாம் நாம் கவனிப்போம். ஆனால், இவ்வளவுக்கும் மேல் இந்த விழாவின் போது மற்றொரு முக்கியமான காரியத்தையும் சாதிக்க வேண்டும்."

சாம்ராஜ்யம் முழுவதிலும் அங்கங்கே ஆட்சி புரிந்து வரும் சிற்றரசர்கள் வழக்கமாக அந்த விழாவுக்கு அழைக்கப்படுவதில்லை. குறிப்பாக அருகில் இருந்த சிலரும் சக்கரவர்த்திக்கு நெருங்கிய உறவினர்களான சிற்றரசர்களுமே அழைக்கப்பட்டார்கள்.

"காரணத்தோடுதான் நான் பலரையும் அழைக்க வேண்டும் என்கிறேன்" என்றார் சக்கரவர்த்தி: "நம்மோடு கருத்து வேறுபாடு கொண்டவர்களையும் நம்மிடம் உள்ளூறப் பகை கொண்டவர்களையும்கூட நாம் அழைக்கத் தவறிவிடக் கூடாது: அவர்களைத் தான் வலிந்து அழைக்க வேண்டும்."

காரணம் மற்றவர்களுக்கு விளங்கவில்லை. அதையும் சக்கரவர்த்தியே கூறினார். "ஒன்றுபட்டு இந்தச் சாம்ராஜ்யத்தோடு உறவு கொண்டு வாழ வேண்டிய அவசியம் இப்போது அவர்களுக்கு முன்னைவிட அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. நமக்குப் புதுப் புது அபாயங்கள் வெளிநாடுகளிலிருந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அவர்களால் சாம்ராஜ்யத்துக்கும் வலிமையுண்டு: சாம்ராஜ்யத்தால் அவர்களுக்கும் பாதுகாப்பு உண்டு. இந்த விழாவை ஒரு முகாந்திரமாக வைத்துக் கொண்டு அவர்களை நாம் இங்கு கூட்டிப் பேச வேண்டும்."

சக்கரவர்த்திக்கு ஏற்பட்டிருந்த கவலையை விசுவநாதன் நன்கு புரிந்து கொண்டான். சாளுவநரசிம்மரும் அவர் போக்கில் கிருஷ்ண தேவராயரின் சிந்தனைகளை எடை போடத் தொடங்கினார்.

திடீரென்று சக்கரவர்த்தி, "ஒற்றுமையை நாம் மற்றவர்களுக்கு உபதேசம் செய்வதற்கு முன்பாக, நாமே நமக்குள் அதைக் கடைப் பிடித்து வாழ்ந்தால் நல்லது" என்றார். இதைக் கேட்டவுடன் அங்கிருந்த எல்லோருமே வெலவெலத்துப் போனார்கள்.

அவருடைய தம்பி அச்சுதராயருக்கும் மருமகன் ராமராயருக்கும் ஒற்றுமை இல்லை என்பது சக்கரவர்த்திக்குத் தெரியும். அது போலவே அமைச்சர் சாளுவநரசிம்மர் அவர் தம்பி அச்சுதராயரிடம் கொண்டிருந்த அளவுக்கு ராமராயரிடம் பரிவு கொண்டிருக்கவில்லை என்பதும் தெரியும்.

"நாமெல்லாம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே இப்போது இருக்கிறோம். இந்தச் சிறு குடும்பத்தின் விரிவே நம்முடைய சாம்ராஜ்யம். முதலில் நமக்குள் ஓர் ஒற்றுமை வேண்டும். சாம்ராஜ்யத்தை ஆள்வோருக்குள் ஒற்றுமையில்லாவிட்டால் அந்தச் சாம்ராஜ்யமே சீரழிந்து போகும். சாம்ராஜ்யம் அழியுமானால் பிறகு யார்தாம் இங்கு வாழ முடியும்?"

அச்சுதராயரும் ராமராயரும் ஒருவரையொருவர் உற்றுப் பார்த்துக் கொண்டனர். அவர்களுடைய பகையுணர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் சக்கரவர்த்திக்குப் பிறகு யார் சிம்மாசனத்தில் அமர்வது என்பதே யாகும். உறவுமுறை கொண்டு பார்த்தால் அச்சுதராயரே பட்டத்துக்கு உரியவர். ஆனால், ராமராயரோ ஆட்சித் திறனில் வல்லவராயிருந்ததோடு, கிருஷ்ணதேவராயரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராகவும் இருந்தார்.

"எனக்குப் பிறகு இந்தச் சாம்ராஜ்யத்தின் சுமையை யார் ஏற்றுக் கொள்வது என்பது பற்றி ஒரு குழப்பம் ஏற்பட்டிருப்பது போல் தோன்றுகிறது. என்னுடைய மூத்த குமாரன் இறந்து விட்டான். இளைய குமாரனோ கைக் குழந்தையாக இருக்கிறான். ஆகவே, நான் விபத்துக்குள்ளாகிய போதே இப்படி ஒரு சிக்கல் ஏற்பட்டு விட்டது எனக்குத் தெரியும். கைக் குழந்தைக்கு முடிசூட்டிவிட்டு, ராமராயர் அதன் காவலராக ஆட்சி செலுத்தப் போகிறாரா? அல்லது அச்சுதராயரே முடி சூடிக் கொள்ளப் போகிறாரா?"

கிருஷ்ணதேவராயர் கேள்விகளோடு தம்முடைய பேச்சை நிறுத்தி விட்டு மற்றவர்களுடைய முகங்களை நோக்கினார். பரபரப்பு நிறைந்து விட்டது அந்த மந்திராலோசனை மண்டபத்தில். அச்சுதராயருக்கும் ராமராயருக்கும் நிலைகொள்ள வில்லை. சக்கரவர்த்தியின் அடுத்த சொல்லை அவர்கள் ஒவ்வொருவரும் எதிர்பார்த்திருந்தனர்.

"அரசர்களை அடுத்து அவர்களுடைய குமாரர்களே சிம்மாசனத்துக்கு வருவது என்பதுதான் நம்முடைய நாட்டு வழக்கம். அதன்படி பார்த்தால் இரண்டு வயதுகூட நிரம்பாத என் இளைய குமாரன்தான் பட்டத்துக்கு வர வேண்டும். அப்படி அவன் வந்தால் ராமராயர்தாம் ஆட்சியை நடத்த வேண்டிய நிலை ஏற்படும்..... ஆனால்....."

"சக்கரவர்த்திகளே!" என்று தன்னையும் மீறி ஆவேசத்துடன் குறுக்கிட்டான் விசுவநாதன்; "அப்படி ஏதும் இப்போது நடைபெற வேண்டிய நிலை வந்து விடாது; வந்து விடக் கூடாது, சக்கரவர்த்திகளே!"

விசுவநாதனைப் பார்த்து மெல்லப் புன்னகை பூத்தார் கிருஷ்ணதேவராயர். "வந்தாலும் வராவிட்டாலும் நாம் இப்போதே எதிர்காலம் குறித்து ஒரு தெளிவுடன் இருப்பது நல்லதல்லவா? அப்படி இல்லாவிட்டால் அதனால் சாம்ராஜ்யமே பிளவுபட்டுச் சிதறி விடக் கூடும். நான் எதையும் சாம்ராஜ்யத்தை நினைவில் வைத்துக் கொண்டே முடிவு செய்ய விரும்புகிறேன்."

'என்ன முடிவு அது?' என்ற வினா அங்கிருந்த ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழுந்தது.

"இது வரையிலும் இருந்துவரும் நம் நாட்டுப் பழக்கத்துக்கு எதிராக நான் முடிவு செய்கிறேன். இப்போது கைக் குழந்தையாக இருந்து வரும் என் இளைய குமாரன் ஒருபோதும் சிம்மாசனத்துக்கு வர மாட்டான். அவன் வளர்ந்து பெரியவனாகிய பிறகும்கூட அவனுக்கு இந்த சாம்ராஜ்யத்தின் சிம்மாசனம் கிடையாது. அவன் சக்கரவர்த்தியாக வரக் கூடாது என்பது என் கட்டளை!"

யாருமே சிறிதும் எதிர்பாராத பேரதிர்ச்சியாக இருந்தது இந்தச் செய்தி. விசுவநாதன் கண் கலங்கி விட்டான். சக்கரவர்த்தி தமது மூத்த குமாரனை எவ்வளவு ஆர்வத்தோடு வளர்த்து வந்தார் என்பதை அவன் அருகில் இருந்து கவனித்தவன். அந்த இளம் வயதிலேயே அவனுக்கு முடிசூட்டி வைத்து, அவனுக்கு அமைச்சராகத் தம்மை மாற்றிக் கொண்டு அவனுக்கு ஆட்சிக் கலையைக் கற்றுக் கொடுத்தவர் அவர். அதுதான் அப்பாஜியின் சூழ்ச்சியால் வெறும் கனவாக மாறி விட்டதென்றால், அடுத்த குமாரனுக்குமா இந்த நிலை?

"என்னுடைய குமாரனின் வாழ்க்கையை விட எனக்குச் சாம்ராஜ்யமே பெரிது!" என்றார் கிருஷ்ணதேவராயர்; "இந்த சாம்

சாம்ராஜ்ஜிய ஒற்றுமை நிலைபெறவேண்டுமென்ப தற்காகவே நான் இப்படிச் செய்கிறேன்.''

''எனாதகு பிறகாவது அவர் சக்கரவர்த்தி யாக வரக் கூடாதா?'' என்றுன் விகவ நாதன்.

''வேண்டாம்! அடுக்காற்போல் சிம்மாச னத்துக்கு வரப் போகிறவருக்கு என் குமாரன் ஒரு சஞ்சலத்தைத் தர வேண் டாம். எனக்குப் பிறகு நான் என் தம்பி அச்சுதராயனையே சக்கரவர்த்தியாக நியமிக் கிறேன். ஆனால் அச்சுதராயன் சக்கரவர்த்தி யாக இருந்தாலும், ராமராயரும் இவனும் ஒற்றுமையுடன் இருந்து இந்தச் சாம்ராஜ் யத்தை ஆட்சி செய்ய வேண்டுமென்பதே என் விருப்பம். இவர்கள் இருவரும் ஒரு மனப்பட்டு உழைத்தால்தான் இந்தச் சாம் ராஜ்யம் உறுதியோடு நிலைக்கும். அச்சுதராய னல் மட்டிலும் இதன் சுமையைத் தனியே தாங்க முடியாது. ராமராயர் இந்த முடிவி னல் மனம் வருந்த மாட்டார் என்றே நம்பு கிறேன். நாம் எல்லாரும் சாம்ராஜ்யத்தின் ஊழியர்கள். சக்கரவர்த்தியான நானும் ஊழியன்தான்; நீங்களும் ஊழியர்களே. இந்த எண்ணம் இருந்தால் ஒற்றுமை தானுகவே வளர்ந்து விடும்!''

கூடியிருந்த அனைவரும் வாய் பேசாது மௌனமாக வீற்றிருந்தனர். அச்சுதராய ரால் அவர் உள்ளத்தில் பொங்கி வந்த ஆனந்தத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவர் ஆற்றலில் குறைந்தவர்தாம்; என்று லும் கிருஷ்ணதேவராயரின் தம்பி. குடிமக் [illegible] படியான வேறு எந்த ஏற்பாட்டையும் சக்கரவர்த்தியால் செய்ய முடியவில்லை.

''இந்தச் செய்திகளெல்லாம் இப்போது உங்களுக்குள் இருக்கட்டும். இதன்படியே ஓலைகள் எழுதச் செய்து வருகிறேன். முதலில் நம் விழாவுக்கான ஏற்பாடுகளைக் கவனி யுங்கள். விருந்தினர்களாக வரும் சிற்றரசர் களுக்கு எவ்விதக் குறைபாடுகளும் ஏற் படாதபடி பார்த்துக் கொள்ளுங்கள். அவர் களே சாம்ராஜ்யத்தின் தூண்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.''

சக்கரவர்த்தி எழுந்து உள்ளே சென்றார். அவர் செய்த முடிவைக் கேட்டு முதலில் ராமராயர் அதிர்ச்சியடைந்தார் என்றாலும், உடனே அந்த அதிர்ச்சியிலிருந்து அவர் மீண்டு விட்டார்.

''உங்களுக்கு என் வாழ்த்துக்கள்!'' என்று மனமொப்பி அச்சுதராயரை வாழ்த்தி விட்டுச் சென்றார் ராமராயர்.

சாளுவ நரசிம்மரும் அச்சுதராயரும் அன் றிரவு வெகுநேரம் வரையிலும் தனித்துப் பேசிக் கொண்டிருந்தனர். சாளுவநரசிம்ம ருக்கு இந்த ஏற்பாடு எல்லையற்ற மகிழ்ச்சி யைத் தந்தது. திறமையும் துணிவுமற்ற ஒருவர் தலைமைப் பொறுப்புக்கு வந்தால், அவர் தம்முடைய விருப்பங்களை எளிதாக நிறைவேற்றிக் கொள்ள முடியுமல்லவா?

''ராமராயரை மட்டும் நம்பியே நம்பா தீர்கள்!'' என்று அச்சுதராயரிடம் ஆலோசனை கூறி வைத்தார் அமைச்சர். (தொடரும்)

படித்துப் பாருங்கள்

ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி தோத்திரம்

ஆதிசங்கரர் இயற்றிய ஸ்தோத்திரங் களின் பெருமை அளவிடற்கரியது எனில், அவற்றிலும் ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி ஸ்தோத் திரத்துக்குத் தனிப்பெருமையுண்டு. சிறிய நூலாயி னும் அத்வைதசாரத்தை அப்படியே பிழிந்த ளிப்பது 'ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி ஸ்தோத்திரம்'. இதற்கு ஆசாரியர்களின் பிரதான சீடருள் ஒரு வரான ஸ்ரீசுரேச்வராசாரியர் 'மானஸோல்லா ஸம்' என்ற பெயரில் அற்புதமான விளக்க வுரை இயற்றியுள்ளார். பிற கட்சிகளையும் எடுத்துச் சொல்லி அத்வைதத்தை ஆணித் தரமாக நிலைநாட்டும் 'மானஸோல்லாஸம்' மெய்யாகவே அநுபூதிமான்கள், அறிஞர்கள் ஆகியோரின் மனத்துக்கு உல்லாசம் அளிப்பது தான். இவ்விரிவுரைக்கு மிகவும் உயர்ந்த முறையில் ஐம்பதாண்டுகளுக்குமுன் மேல் மங்கலம் ஸ்ரீ த. சுந்தரராஜ சர்மா அவர்கள் தமிழாக்கம் எழுதினார்கள். வெறும் தமிழாக்க மாக மட்டுமின்றித் தமது அறிவும் அநுபவ மும் காட்டிய வகையில் விளக்கமும் அளித் தார். இந்தச் சிறந்த கிரந்தம் இப்போது மூலத்துடன் வெகு நல்ல முறையில் தமிழுல கத்துக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பெரிய குளம் ஸ்ரீ வி. ஒய். நாகேசுவரய்யர் அவர்கள் இப்பதிப்பின் செலவினைத் தாமே ஏற்று, இந்நூலை இலவசமாக வழங்க முன்வந்திருப் பது போற்றுதலுக்குரிய பணியாகும்.

(பதிப்பாளர்: வி. ஒய். நாகேசுவரய்யர், பெரியகுளம், மதுரை மாவட்டம்)

ஸ்ரீ சங்கரஜயந்தி விழா மலர்

மேலை மாம்பலத்திலுள்ள ஸ்ரீ பக்தஸமா ஜத்தினர் ஸ்ரீ சங்கரஜயந்தியை ஒட்டி இவ் வழகிய மலரை வெளியிட்டிருக்கிறார்கள். ஸ்ரீ திரிபுரசுந்தரி வேதபாத ஸ்தவம், ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கம் ஆகியவை தமிழ் அர்த்தத்துடன் வெளியிடப்பட்டிருக்கின்றன. பிரம்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ சோமதேவ சர்மா அவர் களின் 'பூஜா தத்துவ'மும், பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரவர்களின் 'உத்தவர் கண்ட பக்தை'களும் இம் மலருக்குச் சிறப் புச் செய்யும் கட்டுரைகள்.

(வெளியீடு: ஸ்ரீபக்த சமாஜம், மேலைமாம் பலம், சென்னை-33; விலை குறிப்பிடவில்லை.)



மாறுதல்

எஸ். லட்சுமிசுப்பிரமணியம்

"அப்போது கட்டாயமாய் நாளைக்கு 'காஸ்' அடுப்பைக் கொண்டு வந்து பொருத்தி விடச் சொல்கிறீர்களா?" என்று கேட்டுக் கொண்டு எழுந்து நின்றாள் நீலா.

"கட்டாயம். நாளைக்குச் சனிக்கிழமை. ஒரு நேரம்தான் வேலை. ஆனாலும் பரவா யில்லை. அப்படி இல்லையென்றால் ஞாயிற்றுக் கிழமை செய்துவிடச் சொல்கிறேன். லீவு நாளானாலும் பரவாயில்லை" என்றார் அடுப் பைக் காண்பித்த அஸிஸ்டெண்ட்.

"நோ, நோ. நாளைக்கென்றால் நாளைக்குத் தான்" என்று வற்புறுத்தும் குரலில் சொன் னாள் நீலா. குழல் போன்ற குரல். மிரளும் கருவிழிகள். கன்னம் குழிந்த புன்னகை.

"ஆகட்டும். அப்படியே."

நீலா கையைக் குவித்து வணக்கம் சொல்லி விட்டு, சிரித்த முகம் மாறாமல் விடை பெற்றுக் கொண்டு விட்டாள். சேகரனும் கூட வந்தான். அவனுக்கு அந்தக் கடைக் காரரைத் தெரியும். அந்த அஸிஸ்டெண்டின் கண்டிப்பான பேச்சும் கூடப் பழக்கம்தான். ஆனால் அவர்கள் அன்று நீலாவிடம் பழகிய விதமே வேறாகத்தான் இருந்தது.

அந்த அனுபவம் அவனுக்குப் புதியது அல்ல. நீலாவின் ராசியே அப்படி. தபால் நிலையத்துக்குப் போனால் கண் சிமிட்டும் நேரத்தில் காரியம் ஆகி விடும். வெறும் பையன் போனால் கிடைக்காத மைதாவும் ரவையும் அவள் கூடப் போனால் வந்துவிடும். அன்று இவோட்டரிலும் கூட அவர்களுக்கு டிக்கட் கிடைத்து விட்டது; ஜன்னல் கதவு மூடிய பிறகும்கூடத்தான்.

அது வெறும் முகராசி மட்டும் அல்ல. அந்தப் பழக்கத்தில் ஓர் இனிமை. குரலில் ஒரு மென்மையான அழுத்தம். கலகல வென்று உதிரும் புன்னகையில் தவழும் குளிர்ச்சி. பேச்சின் சரளத்தில் ஓர் இயற்கை யான மெருகு. அவளுக்கே தெரியும் அது. அவளுக்குத் தன்னுடைய கவர்ச்சியில் ஓர் அபார நம்பிக்கை.

கூட்டுப் புழுவாய், தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருந்த அவனைக் கவர்ந் திழுத்ததும் கூட அந்த வசீகரம்தானே? தலை நிமிர்ந்து பார்த்து வழக்கம் இல்லை அவனுக்கு. கல்யாணம் ஆகுமுன் தங்கைகளை வெளியே அழைத்துக் கொண்டு போனால், அவன் மூன்

நடை முன்னும் போவான். அவர்கள் பின்னும் வாயைத் திறக்காமல் வர வேண்டும்; வேறு யாரோ என்பதைப் போல. அவளைக் குரல் கொடுத்துக் கூப்பிட்டு விடக் கூடாது. சற்று உரக்கச் சிரித்துவிடக் கூடாது. "ஒரு முழம் கதம்பம் வாங்கித் தருகிறாயா?" என்று தப்பித் தவறிக் கேட்டுவிடக் கூடாது.

நீலாவை மணந்து கொண்ட பிறகு மெதுவாய் அவன் சட்டை உரித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. அவளுடைய துடிப்பும் வேகமும் பொரியும் சுபாவத்துக்கு அவனால் ஈடு கொடுக்க முடியாவிட்டாலும் ஓரளவு அவனும் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியமாகி விட்டது.

அவளைத் திருப்திப்படுத்தவோ, அல்லது அவளுக்கு இணையாக நிற்கவோ அவனும் அவள் எடுத்து வைத்த உடைகளை அணிந்து கொண்டான். நறுக்காகப் பேசத் தொடங்கினான். கலகலவென்று பழக முன்வந்தான். அந்தச் செய்கைகளிலும் தோற்றத்திலும் ஓரளவு வெற்றி தெரியும் போது, நீலா தன் காலில் தானே பூப் போட்டுக் கொள்வாள். முகத்தில் பெருமிதமும் மகிழ்ச்சியும் மலர்ந்து நிற்கும். கடலில் நடுங்கும் அலை நுரை கதிரொளியின் வண்ணத்தில் மிளிர்ந்து அழகு நலுங்கத் தோன்றுவது போல.

ஆனாலும் சில சமயம் அவள் மட்டுமல்ல, அவன் உணர்ச்சிகளும் பின்தங்க, நின்று விடுவான். அந்த நிலையையும் சந்தர்ப்பத்தையும் அவனால் ஏற்று விழுங்க முடியாததைப் போல. குரலின் அழகும் கார்வை நயமும் இருந்தாலும் ஓரளவுக்கு மேல் உச்சத்தை எட்ட முடியாததைப் போல, அவனும் தயங்கித் திகைத்து விடுவான்.

"இந்த அளவுக்கு நீலாவுக்கு ஒரு பரிமளிப்பு அவசியம்தானா? அவசியமாக இருந்திருக்கலாம்; மணமாகும்வரை. இப்போது மணமாகி, ஓர் இளந் தாயுமாகப் போகிறவளுக்கு? தெளிந்து அடங்கும் சுபாவம், அமைதியும், நிறைவும் தெரியும் அடக்கம், இன்னும் அழகாக இருக்குமல்லவா?

நினைப்பதோடு சரி. சொன்னால் அவள் என்ன நினைத்துக் கொள்வாளோ என்று சொல்வதில்லை. பேச்சின் நழுவலில் தவறிப் போய் ஏதோ ஒரு பொருளில் மனம் புண்பட்டுவிடுமோ என்று அவன் அந்தப் பேச்சை எடுப்பதே இல்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தது அவர்கள் முதல் சந்திப்பு. பாங்கில் உட்கார்ந்து பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை கணக்குகளைச் சரிபார்த்து முடிக்கும் வேலையில் மும்முரமாக இருந்தான். அலுவல் நேரம் முடிந்து ஐந்து நிமிஷங்கள் ஆகியிருக்கும்.

கம்பிகளுக்குப் பின்னால் அந்த முகம் தெரிந்தது. விரல்களுக்கிடையே 'டோக்கன்'.

"நேரமாகி விட்டதே அம்மா?"

"பரவாயில்லை ஸார். இரண்டு நிமிஷங்கள் வெளியே போய் வரலாமென்று—"

"இப்போது ஐந்து நிமிஷம் ஆகிவிட்டது."

"வேடிக்கையாகப் பேசுகிறீர்களே ஸார்?"

அவ்வளவு தூரம் பேசிவிட்ட சந்தோஷத்தில் தலையைக் குனிந்து கணக்குகளைச் சரி பார்க்கத் தொடங்கி விட்டான் சேகர்.

"ஸார், ப்ளீஸ். தொந்தரவு பிறகு பண்ணிக் கொள்ளாதீர்கள்!"

வம்புக்கு இழுக்கும் குறும்பு நிறைந்த குரல். நகைப் பெட்டி மெத்தையில் உருளும் வைரம் போல, ஒளி தெறிக்கும் புன்னகை. அப்புறம் எதிர்க்கும் தைரியம் இல்லாமல், விரல்கள் தாமாய் ஜன்னலின் சிறு கதவைத் திறந்தன.

"தாங்க்ஸ்."

பணிவான நன்றி செலுத்தும் குரல் இல்லை அது. "அப்படி வாருங்கள் வழிக்கு" என்று தட்டிக் கொடுக்கும் பாவனைதான் தெரிந்தது அதில்.

பத்து நாட்கள் ஆகியிருக்கும். மறுபடியும் பணம் வாங்கிக் கொண்டு போக வந்திருந்தாள் அந்தப் பெண். அவனைப் பார்த்ததும் பழகிவிட்ட, விசாரிப்பது போன்ற அந்தப் பார்வை. குறும்பாய் உதிரும் புன்னகை. அவனை அறியாமல் முகம் மலர்ந்து அவளை நிமிர்ந்து பார்த்தான்.

மெல்லிய இளம் பச்சை நைலான் புடவை. இறுக இறுகக் கை பிதுங்கும் சோளி. உயரத்தை உயர்த்தும் கட்டு. வாளிப்பும் கட்டும், வளர்ச்சியும் பூரிப்புமாக, அலட்சியமாய் நிமிரும் முகம். அவனால் அந்தப் பார்வைக்கு ஈடுகொடுக்கக்கூட முடியவில்லை.

"என்ன ஸார் அப்படிப் பார்க்கிறீர்கள்? இன்றைக்கு ஐந்து நிமிஷங்கள் முன்னால்..." என்றாள் அவள்.

சட்டென்று தன்னைத் தெளிய வைத்துக் கொண்டு, "எப்படி வேண்டும்?" என்றான்.

"டென்ஸ்."

கூடவே அந்தச் சொல்லுக்கு இரண்டு அர்த்தம் தெரிந்தது போல ஒரு சிரிப்பு. அவன் நோட்டுக்களை எண்ண ஆரம்பித்தான்.

கணக்கு வைக்கும் புத்தகத்தை எடுத்துக் கொண்டு போக மறந்து விட்டாள். அப்புறம்தான் தெரிந்தது. அவன் இருக்கும் தெருவேதான் அவள் தங்கை இருப்பதும். அதைக் கொண்டு போய்க் கொடுக்க எடுத்து வைத்துக் கொண்டான்.

அதிலிருந்து அவர்கள் வீட்டுக்குப் போய் வரும் பழக்கம் ஆரம்பமாகிவிட்டது.

ஒரு நாள் எங்கேயோ போய் வீட்டுத் திரும்பிக் கொண்டிருந்தான். மணி ஏழரைக்கு மேல் ஆகிவிட்டது. பஸ் நிற்கும் இடத்தில் ஏகக் கூட்டம். வரும் பஸ்களில் ஒன்றும் அந்த இடத்தில் தயங்கக் கூட இல்லை.

சட்டென்று அந்தப் புறமாக வந்த டாக்ஸி ஒன்றை நிறுத்தக் கையை நீட்டினான். இருளில் பின்புறம் ஒரு முகம் பார்வையில் தெரிந்தது. பார்வையில் படவில்லை. டாக்ஸியின் வேகம் குறையவில்லை. ஏமாற்றத்தோடு கை இறங்கிற்று. சற்றுத் தள்ளிப் போய் டாக்ஸி நின்றது.

"நீங்கள்தானா? ஏறிக்கொள்ளுங்கள்."

நீலாவின் முகம் வெளியே எட்டிப் பார்த்தது. அவன் முன் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்து கொண்டான்.

''நான் முந்தைய ஸ்டாப்பிங்கில்தான் ஏறு வேன். துணையாக நீங்கள் வந்தது நல்லதாகப் போயிற்று.''

அவளுக்கு அவன் துணையா? அந்தச் சுவாதீனமான பேச்சில் அவன் மனம் ஒரு கணம் அயர்ந்தது. பழகப் பழக எல்லையில்லா அற்றது போன்ற அந்தக் கவர்ச்சி, பயமற்றுத் திரும்பும் பார்வையில் சிலிர்க்க வைக்கும் துணிவு.

''நீங்கள் இன்னும் 'தாங்க்ஸ்' சொல்லவில்லையே?''

அந்தக் குரலின் விறுவிறுப்பும், அவனை வம்புக்கு இழுப்பது போன்ற குறுகுறுப்பும் அவனால் சமாளிக்கக் கூடியதாக இல்லை.

அப்புறம் மணமான பிறகு அந்தப் பேச்சு வரும்போது, நீலா, கைகள் அவன் மார்பின் மேல் மாலையாக வழிய, பின்புறமாய்ச் சாய்ந்தபடி, அவனைச் சீண்டும் குரலில் சொல்லுவாள்.

''அன்று உங்களிடம் எனக்கு மிகவும் பிடித்தது அந்த நேர்மையும் பண்பும்தான். நான் கூப்பிட்டிருந்தாலும்கூட முன்புறம் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்து கொண் டீர்களோ? அதற்குத்தான் சொல்கிறேன்.''

உண்மைதான். அவனுடைய கலகலப்பான சுபாவம் அவனைக் கவர்ந்ததைப் போல, அவனுடைய பண்பும் பணிவும் அவளுக்குப் பிடித்திருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவனைத்தான் மணந்து கொள்வே னென்று தந்தையிடம் விடாப்பிடியாகப் பிடிவாதம் பிடித்திருப்பாளா?


மணமாகி வந்த பிறகு அவனுடைய முதுகில் 'ஷொட்டு' கொடுத்த நண்பர்கள் எத்தனை பேர்; கண் சிமிட்டலும் பொறாமைக் குரலுமாக. அவன் எதிரே நீலாவைப் பாராட்டியவர்களும்கூட உண்டு; அவன் கண்ணில் இலேசாய்க் கசியும் பொறாமையைப் பொருட்படுத்தாமல்.

''என்னதான் சொல்லு. மன்னிக்குத் தான் அந்தப் புடவை எடுப்பாக இருக்கிறது'' என்று ஒரு தங்கை பாராட்டுவாள். ''மன்னியின் சாமர்த்தியத்துக்குச் சொல்ல வேணுமா என்ன? அண்ணாவைப் பார்த்தால் தெரியவில்லையா?'' என்று குரலைத் தாழ்த்திக் கொள்வாள் மற்றவள்.

பாங்குக்குப் பக்கமாக ஒரு போர்ஷன் பார்த்துக் கொண்டு வந்தாயிற்று. முதலில் சில நாட்கள் அடிக்கடி வந்து விட்டுப் போவாள் நீலா. அவள் போனதும் பக்கத்து நாற்காலிகளிலிருந்து பேச்சு கிளம்பும். வாயிலிருந்து புறப்பட்டதற்கெல்லாம் சிரிப்புத் தான். மழை பெய்து ஓய்ந்த அமைதி கிடைக்க அரை மணி நேரம் ஆகும்.

மணமாகுமுன் இருந்தது வேறு; இப்போது வேறு. அவளுக்கு எப்படி அதைப் புரிய வைப்பது? அவனிடம் அவளுக்கு இருந்த உரிமையை அவள் சொல்லிக் காட்டுவது பண்பாக இருக்காது. அவள் தப்பாக எடுத்துக் கொண்டு விடக் கூடாது. ஆனால் அவளுக்கு இவ்வளவு யோசனையும் பக்குவமான முன்ஜாக்கிரதையும் அவசியமா?

அன்று அவள் அவன் வேலை செய்யுமிடத்துக்கு வந்த போது பக்கத்தில் யாரும் இல்லை.



ஏதோ சொல்லிவிட்ட அவசரமாகப் பதில் எழுத வேண்டிய தபால் ஒன்றைக் கொடுத்து விட்டுப் போனாள். பேச்சின் முடிவில் ஜன்னலின் சிறு கதவோரம் தலையைச் சாய்த்து, அவனை அனுப்பி வைக்கும் பாவனையில் கண்ணைச் சிமிட்டினான் சேகரன். நீலா சட்டென்று கையை உள்ளே விட்டு அவன் முகத்தில் விரல்களைப் பதித்தாள். கன்னத்தில் ஒரு கிள்ளு. அவன் மேனி முழுவதும் அதன் சிலிர்ப்பு எழுந்து அடங்குமுன் அவள் மின்னலென மறைந்து விட்டாள்.

காரியாலயத்திலா? என்ன தைரியம்? பக்கத்தில் யாரும் இல்லைதான். அன்று அவனுக்கு ஓவர்டைம் வேலை என்றாலும், யாரும் வரச் சந்தர்ப்பம் இல்லை என்றாலும் —

சட்டென்று திரும்பிப் பார்த்தான். ஏஜண்ட் ஸ்பெஷலின் கதவை மூடிக்கொண்டு உள்ளே போய்க் கொண்டிருந்தார். அவர் பார்த்திருப்பாரா?

மாதக் கடைசி நாள். சம்பளம் கடைசி வேலை நாளன்று கிடைத்து விடும். அன்று சம்பளம் கிடைத்த உற்சாகத்தோடு வீட்டுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தான். ஏஜண்ட் கூப்பிட்டு அனுப்பினார். வேலை முடிந்தாயிற்று. அந்த வேளையில் அவர் அவனிடம் பேசும் வழக்கம் இல்லை. அன்று என்ன தனியான அக்கறை?


அவருடைய அறையில் யாரும் இல்லை. அவன் போய் உட்கார்ந்து இரண்டு நிமிஷங்களுக்கு அவர் பேசக்கூட இல்லை. அப்புறம் தலைக்கு மேல் சுற்றிய மின் விசிறியை அண்ணாந்து பார்த்தபடி சொன்னார்.

''காரியாலயத்துக்கு வந்து போகிற போது பார்த்திருக்கிறேன் உங்கள் மனைவியை. இப்போது பக்கத்திலேயே குடி வந்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன்.''

அவனுக்கு வியர்த்தது. அன்று அவர் கவனித்திருக்க வேண்டும்.

''என்னைச் சரியாகப் புரிந்து கொள்வீர்கள் என்று நினைத்து இந்த வேண்டுகோளைச் சொல்ல நினைக்கிறேன்'' என்று டிராயரிலிருந்து ஒரு கல்யாண அழைப்பை எடுத்தார். ''பத்து நாட்களில் என் மைத்துனிக்குக் கல்யாணம். நான்தான் நடத்துகி

ராலி:பேன் அரைவிட்டு அரை நகர்த்த இலகுவாக இருப்பதேன்?



ஒரே வார்த்தையில் பதில்—இலேசுத்தன்மை!

வேறெந்த மின்விசிறியையும் விட இலேசானது!

எட்டே கிலோ எடையுள்ள ராலி:பேன் வேறெந்த மின் விசிறியையும் விட நகர்த்த இலகுவான இலேசுத் தன்மை வாய்ந்தது. எனினும், அசாதாரண நிலை திடம் உடையது அது.

விசேஷக் கைப்பிடி

விசேஷக் கைப்பிடி பொருத்தப்பட்டிருப்பதால் ராலி:பேன் எளிதில் தூக்கி, வேண்டிய இடத்திலிருந்து, வீசு விரும்பிய தென்றலின் பக்கத்திலே நிலைக்கத் துணை புரிகிறது!


மேலான கல்லுழைப்பு, பாதுகாப்பான ஓட்டம், அமைதியான இயக்கம், அழகு கண்ட பாணி- இவையனைத்தும் வாய்க்க, ராலி:பேன் வாங்குவதற்கு ஈடில்லை.

மேலும் கிடைப்பவை: ஒயிலான மேடை ராலி:பேன், மற்றும் எக்ஸாஸ்ட் :பேன்.

ராலி:பேன் பற்றிய முழுவிவரப் பிரசுரத்தினை இலவசமாகப் பெற, இக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்பவும்: ராலிஸ் இந்தியா லிமிடெட், 21, ரேவலின் ஸ்ட்ரீட், பம்பாய்-1.

பெயர் ______________________

விலாசம் ______________________



குளுமையான தென்றல் தவழவே:

ராலி:பேன்

ராலி க்ரூப்பின் தயாரிப்பு.

Bensons/I-RFN-103 -TAM

றேன். பொதுவாக வந்தவர்களை வரவேற்று, சாமர்த்தியமாக உபசரித்து அனுப்ப உங்கள் உதவி தேவை — அதாவது — உங்கள் மனைவியை அனுப்பி வைத்தால், உபகாரமாக இருக்கும்.''

அவனுள் ஓர் அலை எழுந்து ஓய்ந்தது.

''அதற்கென்ன ஸார்?'' என்றான் மிகுந்த ஆறுதலோடு.

''அப்படி இல்லை. சில காரியங்களுக்குச் சில பேர்கள்தான் தகுந்தபடி நடந்து கொண்டு சமாளிக்க முடியும்.''

''ஆகட்டும், ஸார்!''

''தாங்க்ஸ். நான் மறுபடியும் சொல்லி அனுப்புகிறேன்.''

சேகரன் அரட்டுச் சிரிப்போடு நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு எழுந்திருந்தான்.

கலியாணத்தில் அத்தனை சந்தடியிலும் கூட்டத்திலும், அவள்தான் அவன் கவனத்தைக் கவர்ந்தபடி இருந்தாள். பம்பரம் போலச் சுற்றி உழைத்தாலும் சற்றும்அயர்ச்சி தோன்றாத முகமலர்ச்சி. சற்றே காற்றடித்தாலும் இசைக்கும் தந்தி போல ஒரு கலகலப்பு. சிறிது நேரத்துக்கு ஒரு தடவை கண்ணாடி உடையும் சப்தமாய்க் 'கொல்' என்று எழும் சிரிப்பொலிக்கு நடுவே அவளைக் காணலாம். பேசியும், சிரித்தும், கொம்மாளமடித்த விருந்தினர் கூட்டத்தில் பரிமளிப்பாக விளங்கியது நீலாவேதான்.

அவன் மனத்துள் ஏதோ இலேசாய்ப் புழுங்கிற்று. சொல்ல வகையின்றி, பேச வாயில்லாதவனைப் போல, தனியனாய் உட்கார்ந்திருந்தான்.

கலியாணத்துக்கு ஜெனரல் மானேஜர் உள்பட எத்தனையோ பேர்கள் வந்திருந்தார்கள். மரியாதையாய் ஒதுங்கியபடி நின்று, உணர்ச்சிகளை விநயமாய்க் கட்டுப்படுத்திக் கொண்டு உபசரிக்கும் விதரணைக்காக நீலா பொறுத்துக் கொண்டிருக்க வில்லை. அவர்களிடமும்கூட அதே தாராளமான, சரளமான, பழக்கம்தான். ஜெனரல் மானேஜர் பந்தாரி சற்றுக் கண்டிப்பான பேர்வழி... இறுகின தாடையும் கடித்த உதடுமாகப் பழகுபவர். அவர் நீலாவைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டு போனாரோ? அவர் பார்வையிலிருந்து அனுமானமாய் எதையும் சொல்ல முடியவில்லை.

இரவு எல்லாம் முடிந்து வீடு திரும்பியதும் அவன் ஒரு தீர்மானமாய்க் காத்திருந்தான். கண்களில் கனிந்த பார்வையுடன் ஆடி அசைந்து நடந்து அவனருகில் வந்து, நாற்காலியின் பிடியில் உட்கார்ந்து கொண்டாள் நீலா. தாம்பூலத்தைக் கன்ன ஓரத்தில் அடக்கிக் கொண்டிருந்தாள். பளபளக்கச் சிவந்த உதடுகளில் புன்னகை பரவியது.

''எனக்கும்கூட அத்தனை அலுப்பைக் காணோம். நீங்கள் அயர்ந்து போய் உட்கார்ந்திருக்கிறீர்களே? உடம்பு சரியாகஇல்லையா?''

''உடம்பு சரியாகத்தான் இருக்கிறது.''

''பின்னே?''

அவன் அவள்புறம் திரும்பிப் பார்த்தான். சொல்லிவிடலாமா? எப்படி ஆரம்பிப்பது? என்ன விதமாகச் சொல்வது?

''எனக்குத்தான் வாயில் தாம்பூலம். இருந்தும் பேசிக் கொட்டுகிறேன். உங்களுக்கு என்ன?'' என்று கன்னத்தை நிமிண்டினாள்.

''இப்போது நீ சொன்னதுதான். இந்த மாதிரி நீ பேசிக் கொட்டுவதுதான் எனக்குப் பாந்தமாக இல்லை. இதைப் போல் அள்ளித் தெளித்துக் கொண்டு உன் சுழற்சியில் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்து கொண்டு — நான் தப்பாகச் சொல்ல வில்லை — அதுதான் எனக்குச் சங்கடமாக இருக்கிறது.''

சற்று வியப்போடு அவனைப் பார்த்தாள். ''உண்மையைச் சொல்லுங்கள். உங்களுக்குப் பெருமையா? பொறாமையா?''

''இரண்டும் இல்லை.....'' அவன் குரல் தடுக்கிற்று. ''அது உன் இயற்கையான சுபாவம். எனக்குத் தெரியும். ஆனாலும் அதில் கொஞ்சம் கொஞ்சமாய் ஒரு மாறுதல் அவசியம் என்று நினைக்கிறேன்.''

அவள் தன்னை விடுவித்துக் கொண்டு எழுந்து நின்றாள். தான் சொல்ல நினைத்ததை இன்னும் பக்குவமாகச் சொல்லி யிருக்கலாமோ, என்ற நினைப்பை அவனால் அகற்ற முடியவில்லை.

கொஞ்ச நாட்களாய் நீலாவிடம் ஒரு மாறுதல். வீட்டிலும்கூட வழக்கம் போலக் குரல் சிதறக் கதவின் மணி நாதமாய்க் கேட்காது. தாழ்ந்த கண்களின்மேல் இமை தூக்குவதில்லை. பணிவிடைக்குக் குறைவில்லையானாலும், கேட்ட கேள்விக்குத் தலையாட்டலுக்கு மேல் பதில் இல்லை.

பழைய துள்ளலும் துணிவும் இல்லை. பேச்சிலும் பார்வையிலும் தனி அடக்கம்; அமைதி. எதையோ சொல்லப் பிரியப்படாமல், மனத்தில் விளிம்பு கட்டி நிறுத்தி வைத்து விட்டது போன்ற தோற்றம்.

அன்று வேலை முடிந்து வெளியே வந்த போது, ஏஜண்ட் காரின் கதவைத் திறந்தபடி நின்று கொண்டிருந்தார். அவன் வரும்வரையில் உள்ளே ஏறவில்லை. அவனைப் பார்த்ததும் கண் சமிக்ஞையில் அவனைக் கூப்பிட்டார்.

''வருகிற ஞாயிற்றுக்கிழமை காலையில் வீட்டுக்கு வா. உங்கள் இரண்டு பேருக்கும் அங்கேதான் சாப்பாடு.''

''என்ன விசேஷம் ஸார்?''

''ஒன்றுமில்லை. வாயேன். உன்னிட்டேயும் கூடக் கொஞ்சம் பேச வேண்டும்.''

ஞாயிற்றுக்கிழமை வரை அவனுக்கு நிம்மதி இல்லை. அவர் வீட்டுக்கு நீலாவை அழைத்துக் கொண்டு போன பிறகும், அங்கே அவருடன் தனியாகப் பேசக் காத்துக் கொண்டிருந்தான். சாப்பாடான பிறகு வெற்றிலைத் தட்டோடு, அவனை ஒரு கையில் பிடித்து அழைத்துக் கொண்டு அவர் மாடிக்குப் போனார். நாற்காலியில் எதிரும் புதிருமாக உட்கார்ந்தும் கொஞ்ச நேரம் பேசவில்லை.

கடைசியில் அவர் பேச ஆரம்பித்தபோது அவர் குரலில் கோபத்தைவிட ஏமாற்றம்

அதிகமாக இருந்தது: கண்டிப்பைக் காட்டிலும் வருத்தம்தான் தொனித்தது.

''நேரே விஷயத்துக்கு வந்துவிடலாமென்று நினைக்கிறேன்.'' ''நாம் வேலை செய்வது ஒரு வியாபார ஸ்தாபனம். இதில் நாம் முன்னுக்கு வருவது, அங்கே நாம் நடந்து கொள்ளும் விதத்தைப் பொறுத்தது. அந்த இடத்தில் மக்கள் நம்மைக் கவனிக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.''

அவனுக்கு அந்த நிகழ்ச்சி ஞாபகம் வந்தது. நீலா பாங்குக்கு வந்த சம்பவத்தையா குறிப்பிடுகிறார் அவர்? அப்படியானால் சொல்லி விடலாம். ''அவள் இனிமேல் வரமாட்டாள் ஸார். வந்தாலும் இனி அவள் பழைய நீலா இல்லை—'' சொல்ல நினைக்கும் போதே குரல் கம்மிற்று.

''நம் வெற்றியெல்லாம் நம் குடும்பத்தின் அமைதியைத்தான் பொறுத்திருக்கிறது சேகரன். குடும்பத்தின் அமைதி, நாம் காரியாலயத்தில் நிம்மதியாக வேலை செய்வதைப் போல, வீட்டில் அவர்கள் சந்தோஷமாக இருப்பதைத்தான் பொறுத்திருக்கிறது.

''என் மனைவி சந்தோஷமாக இருக்கிறாளா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க நான் ஆராய்ச்சி நடத்த வேண்டியதில்லை. நாம் அதை வலை போட்டுப் பிடிக்க வேண்டியதும் இல்லை. அவளுடைய உற்சாகமான பேச்சு, பூரிப்பான சிரிப்பு, உள்ளம் தெரிகிற மாதிரி துள்ளலான சுபாவம், மனத்துக்குப் பிடித்த உடை இதிலிருந்து எனக்குத் தெரிந்து விடும்.

''அந்த மாதிரி பார்க்கிற போது — என் மனைவி நாலைந்து தடவை தற்செயலாய் உன் மனைவியைக் கடை வீதியில் சந்தித்துவிட்டுச் சொன்னதை வைத்துக் கொண்டு சொல்கிறேன் — நீ உன் மனைவியை நடத்துகிற விதம் எங்களுக்குத் திருப்திகரமாக இல்லை.''

சேகரன் அடிபட்டது போலப் புதிதாக நிமிர்ந்து பார்த்தான். அவர் குரல் இப்போது இறுகியிருந்தது. ஏதோ ஒரு கண்டிப்பாய்ப் பேச முன்வருவது தெரிந்தது.

''உன்னுடைய மனைவியின் சுபாவம் எங்களுக்கு மிகவும் பிடித்திருந்தது. நான் மறுபடியும் சொல்கிறேன். அவளால்தான் உன்னுடைய சங்கோசம் நிறைந்த 'பர்ஸனாலிடி'யைக்கூடக் கொஞ்சம் சரிப்படுத்த முடிந்தது. உன்னுடைய வேலையிலும் பேச்சிலும் கூட ஒரு சுறுசுறுப்பும் தெம்பும் இருந்தன. உனக்கு இன்னும் புதிய பொறுப்புக்களைக் கொடுக்கக் கூட நான் ஜெனரல் மானேஜரிடம் சொல்லுவதாக இருக்கிறேன்.

''ஆனால் என் மனைவி சொல்வதைப் பார்த்தால் நீ வீட்டில் சரிவர நடந்துகொள்வது போலத் தோன்றவில்லை. உன்னை எனக்குத் தெரியும். ஆனாலும் என் மனைவி சொல்வதில் முழுத் தப்பு இல்லை என்று எனக்கும் தோன்றுகிறது; இன்று உங்களைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்த பிறகு. அவள் முன்னைப் போல இல்லை. எதையோ சொல்ல முடியாமல் அவஸ்தைப்படுகிற மாதிரி தோன்றுகிறது.''

''ஸார், நீங்கள் நினைக்கிற மாதிரி...''

''இது உன் குடும்ப விஷயம். உண்மை. ஆனாலும் நான் சொல்வதை ஓர் அண்ணன் சொல்வதைப் போல எடுத்துக் கொள். நீ ஒரு பாங்கில் வேலை செய்பவன். அங்கே வேலையின் முக்கிய நோக்கம் ஒரு பொருளின் உண்மையான மதிப்பைக் கண்டுபிடிப்பது. உயர்ந்த மதிப்புள்ளவற்றைப் போற்றுவது. இரண்டும்தான். உனக்கு நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. போகலாம், வா.''

அவர் எழுந்து விட்டார். அவனைப் பேச விடவில்லை.

வீடு திரும்பும் வழியில் அவனால் நீலாவிடம் அந்தக் கேள்வியைக் கேட்காமல் இருக்க முடியவில்லை. ''உன்னிடம் அந்த அம்மாள் ஏதாவது சொன்னாளா?''

''ஆமாம், 'உன் கணவர் நல்ல மனிதர். நீ எதற்கும் கலங்கக் கூடாது' என்று தைரியம் சொன்னாள். எனக்குப் புரியவேயில்லை; அது என்னவென்று அர்த்தம்?'' உதட்டை மடித்துத் தலையைச் சொடுக்கினாள், சூழ்நிலையை மறந்து.

அவன் இலேசாய்ச் சிரித்தான்.

''சொல்ல மாட்டீர்களா?'' என்று அவன் தோளைப் பிடித்துக் குலுக்கினாள். உடனே தனக்கு விதித்துக் கொண்ட கட்டுப்பாடு நினைவுக்கு வந்தது. கையைச் சட்டென்று இழுத்துக் கொண்டாள். அவன் சிரிப்பு பெரிதாயிற்று.

''ஒன்றுமில்லை நீலா — நீ இப்போது இருந்தாயே — அந்த மாதிரி — பழைய நீலாவாகவே இரு. அது போதும்!'' என்றான்.



உஸ்தாத் ஆஸ்ராம் கூறுகிறது.
"அது
Osram
ஆஸ்ரம் தானா என்று
பார்ப்பதில் பலம்
இருக்கிறது"
GEC உமது உத்திரவாதம்
தி ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி
ஆப் இந்தியா பி. லிமிடெட்

சேவைக்கு ஒரு சகோதரி

லோனிகோல்பெல்டன்

— அருக்குமா



சாரதா சட்டம் பதினொன்று வயதுக்குட்பட்ட பெண்களுக்கும் பதினெட்டு வயதுக்குட்பட்ட பையன்களுக்கும் கல்யாணம் கூடாது என்று தடுத்ததையன்றி, அதை மீறி எப்படியோ கல்யாணம் என்று நடந்து விட்டால் அதை ரத்து செய்யச் சட்டம் இடம் தரவில்லை. மேலும், பெற்றோர்கள், புரோகிதர்கள், மற்றும் சம்பந்தப்பட்ட ஆட்களின் மீது யாரேனும் புகார் செய்தாலன்றி அதிகாரிகள் தாங்களாகவே நடவடிக்கை எடுக்க முடியாமல் தடுக்கப்பட்டனர். யாரேனும் அச்சட்டம் மீறப்பட்டிருப்பதாகப் புகார் செய்ய விரும்பினால், அவர்கள் அதைச் சட்ட மன்றங்களுக்கு முன்தான் சொல்ல வேண்டும். இவ்வாறு புகாரை ஏற்றுக் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்படும். வழக்குத் தோற்றுவிட்டால் புகார் கொடுத்தவர் நூறு ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும்! அது மட்டுமல்ல; புகார் கொடுத்த கையோடு தேவையானால் நாம் நூறு ரூபாய் அபராதம் செலுத்தக்கூடிய அளவுக்கு வசதி உள்ளவர்தான் என்பதற்குப் பாங்கியிலிருந்து அத்தாட்சிப் பத்திரம் வாங்கிச் சமர்ப்பிக்க வேண்டும்!

வழக்கு ஜெயித்து விட்டால் தந்தை அல்லது அந்தக் குழந்தைக்கு முக்கிய பாதுகாப்பாளராக உள்ள ஆடவர், கல்யாணத்தை நடத்தி வைத்தவர், மணமகன் (இருபத்தொரு வயதுக்கு மேற்பட்டிருந்தால்) ஆகியோர் ஆயிரம் ரூபாய்வரை அபராதம் செலுத்தும்படியாகவோ அல்லது ஒரு மாதம் வரை சிறைவாசம் அநுபவிக்கும்படியாகவோ இருக்கும்.

இந்திய அரசாங்கம் இந்தச் சட்ட விஷயமாக மிகவும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருந்தது. தங்கள் உறவினர், சுற்று வட்டாரத்தினருக்குத் தீங்கு இழைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ளவர், வேண்டுமென்றே பொய்க் குற்றச்சாட்டுகளைக் கொண்டு வருவதைத் தடுப்பதற்கு ஓரளவு பாதுகாப்பு ஷரத்துக்கள் வேண்டியதுதான் என்று இச்சட்டத்தின் ஆதரவாளர்கள் ஒப்புக் கொண்டார்கள். முதன் முதல் சாரதா சட்டம் சட்டசபையில் ஆலோசிக்கப்பட்ட பொழுது சர் அலெக்ஸாண்டர் மட்டிமன் (Sir Alexander Muttiman) என்பவர் இவ்வாறு கூறினார்.

"சமூகம் முன்னேற வேண்டும்; மக்களிடையே சரியான அபிப்பிராயங்கள் உருவாக வேண்டும். இதற்குமுன்பே சட்டப்படி பலவந்தமாகச் சீர்திருத்தங்களைச் செய்ய முயலுவதில் ஆபத்துக்கள் உண்டு. அந்த ஆபத்துக்களை எதிர்கொள்வதைவிட மிகவும் நிதானமாகச் செயல்படுபவன் என்ற நிந்தனையை ஏற்கவே நான் தயாராக இருக்கிறேன். இந்த மசோதாவைக் கொண்டு வரும் கனம் அங்கத்தினர் அவர்கள், முக்கியமாகத் தாக்கியிருக்கும் தீங்கைப் பற்றி நானறியேனில்லை. ஆனால் அவருக்கு ஓர் எச்சரிக்கை தர விரும்புகிறேன். மிகவும் வேகமாக, தீவிரமாக அவர் செயலாற்ற

மூயன்றால் அவரால் பொதுமக்களின் ஆதரவு கிடைக்காவிட்டால் பிறகு அவர் களுக்கு இச்சட்டத்தின் மீது ஏற்படும் வெறுப்பு அனைத்தும் அவர்மீது விழாது. நிர்வாகப் பொறுப்பு பெற்றிருக்கும் அரசாங்கத்தின் மீதுதான் விழும். அந்தக் காரணத்திறுலேயே நாம் வெகு எச்சரிக்கையுடன் நடக்க வேண்டும்.''

முடிவில் அச்சட்டம் சட்டசபையில் அதிகார வர்க்கம் முழுவதாலும் ஆத ரிக்கப்பட்டது. பதினைந்து ஓட்டுக்களுக்கு எதிராக அறுபத்தேழு ஓட்டுக்கள் பெற்று மசோதா நிறைவேறியது.

சட்டம் அமுலாக்கப்பட்டவுடன் வலு வாகச் செயல்படுமென்று அனைவரும் எண்ணினர். இதன் விளைவாக, 1929ம் ஆண்டின் இறுதியிலும், 1930ம் ஆண் டின் தொடக்கத்திலும் மசோதா சட்ட சபையில் நிறைவேறியும்கூட அது அமு லுக்கு வருவதற்குமுன் இருந்த ஆறு மாத இடைவெளியில் — இந்தச் சட் டத்தை எதிர்த்தவர்கள் குழந்தை விவாகங்களுக்கான அநுமதிகள் மறுக் கப்படுவதற்கு முன்பாகவே செயலாற்ற விரைந்தனர். நடக்கக் கூடத் தெரியாத குழந்தைகளுக்காக வரதட்சிணை சேமிக் கவும் வரன் தேடவும் முற்பட்டனர்.

பலர், வெகுநாட்களாக நிலவித்து வந்த சமூகப் பழக்க வழக்கங்களில் அரசாங்கக் குறுக்கீட்டைக் குறித்துத் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்ளும் வகையில் அந்த ஒரு கார ணத்துக்காகவே — தங்கள் பெண்களின் விவாகத்துக்கு ஏற்பாடு செய்யலாயினர். படிப்பு வாசனையில்லாத பாமர மக்க ளிடம் சட்டத்தின் தன்மை பற்றித் தாறுமாறான அபிப்பிராயங்கள் கூறப் பட்டன. இந்தச் சட்டம் அமுலுக்கு வரத் தொடங்கிப் பதினைந்து வருட காலம் வரை நாட்டில் எந்தக் கல் யாணமுமே நடக்கக் கூடாது என்று அரசாங்கம் தடை விதித்திருப்பதாகச் சிலர் கதை கட்டி விட்டதைப் பலர் நம்பினார்கள். 1931ம் ஆண்டு சென்ஸஸ் கணக்கு எடுத்த போது பார்த்ததில், சட்டம் கட்டாயமாக அமுலுக்கு வருவ தற்கு முந்திய ஆறுமாத காலத்தில் குறைந்த பட்சம் முப்பது லட்சம் சிறுமி களும், இருபது லட்சம் பையன்களும் மணவாழ்க்கையில் தள்ளப்பட்டனர் என் பது அதிகாரபூர்வமாகத் தெரிய வந்தது.

சட்டம் அமுலுக்கு வந்தபிறகும் அர சாங்கம் அதன் நோக்கங்களைத் தெளிவு படுத்தவும் மக்களைச் சட்டத்துக்கு உட் பட்டு நடக்க வைக்கவும் தீவிரமாக முற்படுவதற்குப் பதிலாகச் சட்டத்தை எதிர்த்தவர்களின் மீது நடவடிக்கை எடுக்கக் கோழைத்தனத்துடன் அஞ்சு வதாகத் தெரிந்தது. 1930ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ம் தேதி, பன்னிரண் டாயிரம் முஸ்லிம்கள் அடங்கிய கூட்ட மொன்று டில்லியின் ஜும்மா மசூதியில்





கல்லடிபட்ட பையன்

(சிங்காரத்தின் லீலைகள்)

1. ஸ்கூல் அடையாள பாட்ஜ் காணவில்லை. அழுக்கடையவில்லை. சுத்தமாக இருக்கிறது. தற்செயலாக அது விழுந்திருக்குமானால் போக்கு வரத்து வாகனங்களின் சக்கரங்க ளிடையே அகப்பட்டுக் கந்தையாகி இருக்கும். தவிர அது தானாக நைந்து விழுந்ததாகத் தெரிய வில்லை. வேண்டுமென்றே பிய்த்து எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அதன் பக்கங்களில் துருத்திக் கொண்டிருந்த நூலிழைகள் கூறின.

2. கைவிடப்பட்ட லாரி நின் றிருந்த இடத்தில் உள்ள சேறு. 'நான் எப்படி போனர்' பார்த்த நம்பர் பிளேட்டில் படிந்திருந்த சேறு—இதை ஒப்பு நோக்கும்போது அந்தப் பையன்தான் வேண்டு மென்றே போலீஸின் கவனத்தைக் கவருவதற்காக அப்படி அதில் சேற்றை அடித்திருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறான் சிங்கா ரம். நம்பர் பிளேட் சரியாக இல்லை என்று கான்ஸ்டபிள் அந்த லாரியை 'புக்' செய்வான் என்று ராமு எண்ணியே அப்படிச் செய்திருக்க வேண்டும். கான்ஸ்டபிள் அந்த லாரியை எச்சரித்து அனுப்பவே, ராமு அவனை இகழ்ச்சியாகப் பேசிச் சீண்டியிருக்கிறான்; அப்படியாவது அந்த லாரியை போலீஸ் புக் செய் யாதா என்று. அப்போது பலன் இல்லாவிட்டாலும் சிங்காரத்தின் கைகூறும் திறமையும் ராமுவின் செய்கைக்குப் பலனளித்து விட்டன.





ஒன்பது வயதுப் பெண்ணுக்கும் பதினொன்று வயதுப் பையனுக்கும் நடக்கவிருந்த ஒரு கல்யாணத்தைக் காணக் கூடியிருந்தது. அக் கல்யாணத்துக்குக் காரணமாயிருந்த அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி ஜில்லா மாஜிஸ்திரேட்டுக்கு மனு அனுப்பப்பட்டது. ஆனால் அவ்வேண்டுகோளை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. தமிழ் நாட்டில் ஒரு கிராமக் கர்ணம் இந்தச் சட்டத்துக்கு மாறாக நடந்தார் என்பதால் ஜில்லா கலெக்டர் அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார். ஆனால் மேலதிகாரிகளின் உத்தரவுப்படி அவரை உடனே மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளும்படி நேர்ந்தது. சென்னையில் ஹைகோர்ட் நீதிபதி ஒருவர் பதினெட்டு வயது நிரம்பிய தமது மருமகனைப் பதினொரு வயதுப் பெண்ணொருத்திக்கு விவாகம் செய்து தருவதாக நிச்சயித்தார். அவர் சட்டத்தை மீறுவதற்கு அஞ்சினார். பிரிட்டிஷ் இந்தியாவில்தானே இச்சட்டம் அவரைப் பாதிக்கும்? ஆகவே அவர் கல்யாண வீட்டினர், புரோகிதர்கள், மேளக்காரர்கள், சமையற்காரர்கள் உள்பட அனைவரையும் பெங்களூருக்கு அழைத்துச் சென்று விட்டார்!

முன்பின் அறியாத ஒருவர் ஒரு சிறு பெண்ணை ஐஸ்ஹவுஸுக்கு அழைத்து வந்தார். அந்தச் சிறுமி தமது மகளென்று சகோதரி சுப்புலக்ஷ்மியிடம் கூறினார். சாரதா சட்டத்துக்கு எதிராகத்தான் அப்பெண்ணுக்குக் கல்யாணம் ஆகியது. விவாகம் நடந்து ஒரு வார காலத்தில் அப்பெண்ணின் கணவன் இறந்து விட்டான். அந்த விதவைச் சிறுமியைச் சகோதரி இல்லத்தில் சேர்த்துக் கொண்டு படிக்க வைக்க முடியுமா என்று அவர் கெஞ்சிக் கேட்டார்.

சகோதரி அப்போது லேடி வில்லிங்டன் ஹைஸ்கூலுக்கும் பயிற்சிக் கல்லூரிக்கும் மேற்பார்வையாளராக இருந்த மிஸ் டொரார்டுடன் கலந்து ஆலோசித்தாள். சேர்த்துக் கொள்ளலாம் என்று ஒத்துக் கொண்டாள் மிஸ் டொரார்டு. "ஆனால் அப்பெண்ணின் தந்தை மீது புகார் செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்கச் செய்ய வேண்டும். அது மற்றவர்களுக்கு ஒரு படிப்பினையாக அமையும்."

"அப்பெண்ணின் தந்தை தண்டனைக்கு உரியவர்தான். ஆனால், அவர் மீது வழக்குத் தொடரப்பட்டால் இந்த விஷயம் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளி வந்து விடுமே? சிறைவாசத்தினால் ஏற்படும் கஷ்டத்தைவிட மிக மிக அதிகமான அளவில் தம் மாப்பிள்ளையின் சாவினால் அவர் துன்பம் அநுபவித்து விட்டார். தவிர, இந்த வழக்கைத் தொடர்ந்தது நாம் என்று தெரியாமல் போகாது. பிறகு இதே போன்ற தவற்றைச் செய்த வேறு பல பெற்றோர்கள் தம் பெண்களைப் படிக்க வைக்க நம்மிடம் அழைத்து வரமாட்டார்கள். இந்த ஒரு காரணத்துக்காகவேனும் இந்தத் தகப்பனார் சொன்ன விஷயத்தை நாம் மறந்து விடவேண்டும் என்று நினைக்கிறேன்."

மிஸ் டொரார்டு இதை ஒப்புக் கொண்டாள்.

சகோதரியின் மாணவிகளில் * நூற்றுக் கணக்கானவர்கள் இப்போது வேலைக்குச் சென்று விட்டார்கள். பலர் சென்னை ராஜதானியில் உள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் வேலை செய்தனர். மற்றவர்கள் இன்னும் வெகுதூரம் சென்று விட்டிருந்தனர். அவர்களில் வயதில் மிகப் பெரியவர்கள் அந்நாட்களிலேயே — பள்ளி மாணவிகளாக இருந்த போதே — தங்களையும் அறியாமல் விதவைகள் இல்லத்தின் இலட்சியச் சேவைகளுக்குச் சிறந்த பிரசாரகர்களாக விளங்கியவர்கள். ஐஸ்ஹவுஸில் முன்பு தங்கியிருந்த விதவைகள் இப்போது பலதரப்பட்ட தத்தம் வேலைகளில் ஈடுபட்டு, குழந்தை விவாக ஒழிப்புக்கும், சாரதா சட்டத்தின் வெற்றிக்கும் துணை புரியும் வகையில் சிறந்த பிரசாரம் செய்து வந்தார்கள். எங்கோ ஓரிருவர் நீங்கலாக, அவர்களில் யாரும் பொதுமேடைகளில் ஏறிச் சொற்பொழிவுகள் ஆற்றவில்லை. அதற்குப் பதிலாக அவர்கள் பெண் கல்வி என்பதைச் சாத்தியமாக்கியதோடு, அதனை மிகவும் கவர்ச்சிகரமானதாகவும் செய்து, அதன் மூலம் ஆக்கரீதியில் பலவந்தமற்ற முறையில் மக்களிடையே மனமாற்றத்துக்கு வழி வகுத்துக் கொண்டிருந்தனர்.

சட்டம் நல்ல முறையில் செயல்படுவதற்கு இதுவே சிறந்த வழியென்று சகோதரி நம்பினாள். இந்த நம்பிக்கையில் தனித்து நிற்கவில்லை. சாரதா சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, முற்போக்குள்ள பல பெண்கள் ராஜதானி முழுவதும் பல இடங்களில் கூட்டங்கள் நடத்தத் தீர்மானித்தனர். இவை சாதாரணமாகப் பொதுக் கூட்டங்களுக்கு வராத பெண்களுக்காகவே முக்கியமாக ஏற்பாடு செய்யப்பட்டன. இந்தப் பெண்களுக்கு விஷய ஞானமூட்டும் சொற்பொழிவுகள் (The Hindu Ladies enlightenment Lectures) என்று பெயர் பெற்ற அவை மிக வெற்றிகரமாக நடந்தேறின. அவைகளில் பத்து சொற்பொழிவுகளை ஆற்றிய சுப்புலக்ஷ்மி தான் சென்ற இடங்களிலெல்லாம் கவனமாகக் கேட்ட பெருங் கூட்டத்தைக் கண்டாள். பின்னர் 1930ம் ஆண்டு டிஸம்பர் மாதம் திருநெல்வேலியில் நடந்த பெண்கள் மகாநாடு ஒன்றுக்குத் தலைமை தாங்கச் சம்மதித்தாள். பெரிய அரசியல் விஷயங்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்த வருடம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. காந்தியடிகள் தண்டி யாத்திரை தொடங்கி, உப்பு சத்தியாக்கிரகம் செய்ய, தெற்கே ராஜாஜி வேதாரண்யத்துக்கு நடத்தார். தலைவர்களும் அவர்களைப் பின்பற்றிய ஆயிரக்கணக்கானவர்களும் சிறையிடப்பட்டனர். தேசியக் காங்கிரஸைச் சேர்ந்த தொண்டர்களும் ஆதரவாளர்களும் சிறையிடப்பட்டனர். இந்தச் சூழ்நிலையில் அரசாங்க ஊழியம் செய்யும் ஒருத்தி தேசியக் காங்கிரஸைச் சேர்ந்த தொண்டர்களும் ஆதரவாளர்களுமான நூற்றுக்கணக்கான பெண்களுக்கு மத்தியில் ஒரு மகாநாட்டில் கலந்து கொண்டு அமர்ந்திருப்பது ஆபத்தானது.

அந்த ஆபத்துக்குத் துணிந்துதான் ஆக வேண்டும் என்று உணர்ந்தாள். (தொடரும்)

புதுமை! வரி யணிந்த பற்பசை!



ஸிக்னல்


கிருமிகளைத் தாக்கும் செவ் வரிகள் தரித்தது!

துலக்கிய வாய் முழுதும் தூய்மை நிலவும்!

❶ உங்கள் பற்களைத் துலக்கும் ❷ துலக்கிய வாய் மணக்கும்.

❋ அந்தச் சிவப்பு வரிகளிலே இருப்பது ஹெக்ஸாக்ளோரபீன்.

பற்களின் துப்புரவுக்கு ஒரு புதிய உதவு: கிருமிகளைத் தாக்கும் செவ் வரிகள் கூடிய ஸிக்னல்: வாய் நிரம்பும் தூய்மைக்கென்றே வாய்த்த ஒரு பற்பசை. பற்களைத் துலக்கும்போதே, உங்கள் மூச்சையும் மணமுடன் தூய்மைப்படுத்துகிறது அவ் வரிகளிலுள்ள ஹெக்ஸாக்ளோரபீன். காரணமா? நாற்றமுண்டாக்கும் கிருமிகளை உடனடியாக ஒழிக்கவல்ல பாதுகாப்புப் பொருளே ஹெக்ஸாக்ளோரபீன். எனவே, ஸிக்னல் தேய்த்த வாய் முழுதும் தூய்மையின் ஆட்சி. கோலச் செவ்வரிகள், கொப்பளிக்கும் நுரைவளம், குளுகுளு பெப்பர்மின்டுப்போன்ற சுவை... ஆஹா! அருமை குடும்பத்திலுள்ள எவரைத்தான் கொள்ளை கொள்ளாது? வாய் முழுமையும் தூய்மையே தூய்மை, வாயார உணரலாம். இன்றே பெறுங்கள் ஸிக்னல்.



...உங்கள் பற்களைத் துலக்கும்,
துலக்கிய வாய் மணக்கும்.

லின்டாஸ்–SG. 3A-140 TM

இந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தரமானதொரு தயாரிப்பு



காட்டுப் பூனை

—எஸ். பாபு—

சுப்பு ரெட்டியார் சுகஜீவனம் செய்து வந்தார். பிதுரார்ஜிதமான சொத்து நிறைய இருந்தது. வாலிப மிடுக்கு இருந்தது. ஊரிலே எவனும் சமதையில்லே என்று வீரய வருவார். அடக்கி ஆளுவார் இல்லே. கட்டிய மனைவி பெட்டிப் பாம்பு. கோழிச் சண்டை, நாய்ச் சண்டை, குஸ்திப் பந்தயம் என்று ஏதாவது வம்பு வேலைகள் செய்துகொண்டே பொழுது போக்குவார். அதற்கேற்ற சகாக்களும் அமைந்தனர். ஜெயிப்பு, தோற்பு, போட்டி, பந்தயம் என்று காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கும்வரையில் அதுவே வேலை. வயது முப்பதாகிறது. — ஒன்றிரண்டு கூடவும் இருக்கலாம். ஆனால் மனசு வளர வில்லே. வயது வந்தவர் என்று அவரைச் சொல்ல இயலாது.

படித்தவர்தான். கல்லூரியில் கூட மூன்று ஆண்டுகள் படித்துவிட்டு, பரீட்சைக்குப் பணமும் கட்டிவிட்டு, 'படித்து என்னடி பண்ணவேணும்?' என்று கேட்டுக்கொண்டே பரீட்சை எழுதாமல் கிளம்பிவிட்டார். பரீட்சை எழுதியிருந்தால் தேறிப் பட்டமும் பெற்றிருப்பார். பண உதவியோடும் தேறுத அசடு அல்ல — தேறிவிடப் போதிய அறிவு இருந்தது. அவசியம் இல்லே—அவ்வளவுதான்!

ஒரு நாள் காலை நேரம். எவனோ ஒரு குறவன் — ஒரு கூண்டிலே காட்டுப் பூனையைக் கொண்டு வந்தான். ஐம்பது ரூபாய் விலை கேட்டான்.

''என்னடா அப்படி அதிசயம் இந்தக் காட்டுப் பூனையிடம் — ஐம்பது ரூபாய் வள்ளிசாகக்கேட்க?'' என்று கேட்டார் ரெட்டியார்.

''அதிசயம் இல்லாமலா கேட்பேனுங்க? ஐயா கோழிச் சண்டை, நாய்ச் சண்டையெல்லாம் பார்த்திருப்பீங்க. இந்தக் காட்டுப் பூனை பொல்லாத பூனைங்க. நான் சாப்பாட்டுக்காக வளர்த்தது. எனக்கு இப்ப பெண்டாட்டி கட்டிக்கப் பணம் தேவைப் படுதுங்க. இல்லாட்டி விப்பனுங்களா?'' என்றான் குறவன்.

''எதுக்கடா உபயோகம் இந்தக் காட்டுப் பூனை? என்ன பண்ணும்? அதைச் சொல்லு முதல்லே. அதுக்கப்புறம் உன் கல்யாணச் சேதியைக் கேட்டுக்கிறேன்'' என்றார் சுப்பு ரெட்டியார்.

''அதுங்களா? எவ்வளவு பெரிய நாயா இருந்தாலும் குதறிக் கொன்னுப் போட்டுடுமுங்க. அதைச் செயிக்க எந்த நாயாலேயும் முடியாதுங்க'' என்றான் குறவன்.

''பார்த்தா இத்துனூண்டுதானேடா இருக்கு...''

''உருவம் சின்னதுதானுங்க. ஆனால் ஒரு நாயோடு — எம்மாம் பெரிய நாயாத்தான் இருக்கட்டுமே — வுட்டுப் பாருங்க...''

ரெட்டியார் வீட்டு வராந்தாவிலேயே ஓர் அறை இருந்தது. அதற்குள் காட்டுப் பூனையைக் கூண்டிலிருந்து அவிழ்த்து விட்டார்கள். டேர்ரஸ் போட்ட அறை; ஜன்னல்களையும், வாயிற் கதவையும் சாத்திவிட்டால் அது எங்கும் தப்பி ஓடிவிட முடியாது. உடனேயே காட்டுப் பூனையின் வீரத்தைப் பரீட்சை பார்க்க எண்ணிய ரெட்டியாருக்கு ஒரு பெரிய நாயும் கிடைக்காமலா போய் விடும்...? காட்டுப் பூனைக்கும் நாய்க்கும் சண்டை மூன்று நிமிஷங்கள் கூட நீடிக்க வில்லே. நாய் என்னவோ வீரமாகத்தான் உறுமிக் குலைத்துக் கொண்டு காட்டுப் பூனையைப் பாய்ந்து பாய்ந்து விரட்டியது. காட்டுப் பூனை அதன் பற்களுக்குக் கிட்டவில்லே; பாய்ந்து பதுங்கிப் பாய்ச்சல் காட்டி அதன் முதுகின் மேல் பாய்ந்து தலையில் அறைந்து கொன்று விட்டது.

குறவனுக்கு உடனே ஐம்பது ரூபாய் கிடைத்து விட்டது. குறக் குட்டி கிடைத்த மாதிரித்தான் என்று ஆட்டமும் பாட்டுமாக அவன் போய்ச் சேர்ந்தான். ரெட்டியார் அந்தக் காலத்தில் ரோமாபுரியில் சீஸர் மன்னர்களில் ஒருவராகப் பிறந்திருக்க வேண்டியவர் — காலந் தவறிப் பிறந்து விட்டார். அவர் உடனேயே தாராளமான பணச் செலவில் ஒரு பெரிய கூண்டு ஒன்று கட்டுவித்தார். அதற்குள் சிறிய கூண்டு ஒன்றில் காட்டுப் பூனையின் வாசஸ்தலத்தை அமைத்தார்.

அதற்குப் படுத்துறங்கக் கம்பளி வைத்துத் தைத்த ஒரு கூண்டு கூடத் தயார் செய்தார். முன் கூண்டு, பெரிய கூண்டு போர்க்களம். அதற்குள் அவர் காட்டுப் பூனைக்குச் சவால் சொல்லிக் கொண்டு வந்த நாய் விடப்படும். அது காட்டுப் பூனையைக் கண்டு சிலிர்த்துக் கொண்டு நிற்கும்போது காட்டுப் பூனையின் கூண்டு திறந்து விடப்படும். மூன்று நான்கு நிமிஷங்களில் நாயின் ஆயுள் முடிந்துவிடும். காட்டுப் பூனை ராணி போல் அசந்தர்ப்பம் ஏதும் நடக்காதது போல முன்னங் கால்களை நாக்கால் நக்கிக் கொண்டு ரெட்டியாரின் பாராட்டுதலை எதிர்பார்த்துத் தன் சிறிய கூண்டுக்குள் போய் உட்கார்ந்துவிடும்.

ரெட்டியாரைப் போலவே காட்டுப் பூனையும் ஐந்தாறு மாதங்களில் சுற்றுப்புறத்தில் பிராபல்யம் அடைந்து விட்டது. இப்போது கோழிச் சண்டை, குத்துச் சண்டை முதலிய வற்றையெல்லாம் சுருக்கிக் கொண்டுவிட்டார் சுப்பா ரெட்டியார். அவர் விசுவாசமெல்லாம் தோல்வி அறியாத உருவத்தில் சிறிய தன் காட்டுப் பூனை மேலேதான் இருந்தது. எங்கேயாவது ஊருக்குப் போனாலும் கூடத் தம் காட்டுப் பூனையையும் தம்முடன் எடுத்துப் போவார். ரயிலில் போனாலும் அதன் கூண்டில் முழு சார்ஜ் கொடுத்து உடன் வரும். காரில் போனால் அதற்கென்று ஒரு டிரெயிலர் வான் செய்து அதில் கூண்டை வைத்துக் கொண்டு வருவார்.

இப்படி ஏழெட்டு மாதங்களும் ஆகிவிட்டன. நாட்டு நாய்கள் மட்டுமல்ல. புல்டாக், அல்சேஷியன், ஹவுண்டர், ஷெப்பர்டு என்று பலரக உயர்ந்த அச்சு நாய்கள் கூட ரெட்டியாரின் காட்டுப் பூனையிடம் வாலாட்ட முடியாமல் பலியாகி விட்டன. எழுபது என்பது நாய்களுக்கும் அதிகம் இருக்கும் என்று சொல்லிக் கொண்டார்கள். இருந்தும் ரெட்டியார் இன்னமும் அதிகமாகத் தன் காட்டுப் பூனையுடன் சண்டையிட நாய்கள் வருவதில்லையே என்று கவலையுற்றிருந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மீண்டும் ஒரு முறை ஒரு குறவன் வந்தான். அவனோடு ஒரு குறத்தியும் வந்தாள். ஒரு நாயும் வந்தது. அந்தக் குறவன்தான் தன்னிடம் அந்தக் காட்டுப் பூனையை விற்றவன் என்று சுப்பா ரெட்டியாருக்கு நினைவிருக்க நியாயமில்லை தான். இந்தக் குறத்தியைக் காசு கொடுத்துக் கண்ணாலம் கட்டத்தான் அவன் அந்தக் காட்டுப் பூனையை அடித்துச் சாப்பிட இயலாமல் அவரிடம் விற்றுவிட்டுப் போனான் என்பதும் அவருக்கு ஞாபகம் இல்லை. காட்டுப் பூனையைப் பற்றி அவர் எத்தனையோ கதைகளை நிஜமென்று நம்பியே அவ்வப்போது கட்டிவிட்டு வந்திருந்தார். அவற்றில் எதை உண்மை என்று நம்பினாரோ — அவருக்கே தெரியாது.

''ஐயாவுக்கு ஞாபகமில்லீங்களா?'' என்றான் குறவன்.

''யாருடா நீ?'' என்றார் சுப்பா ரெட்டியார் சிவந்த கண்களுடன்.

''காட்டுப் பூனை சௌக்கியங்களா?'' என்றான் குறவன்.

''என்னடா என் காட்டுப் பூனையைப் பற்றி விசாரிக்க நீ யாருடா? உன் நாயை அதனோடு சண்டைக்கு விட்டுப்பார்க்கிறாயா?'' என்று கேட்டார் ரெட்டியார்.

''வேண்டாமுங்க. உங்க பூனை செத்துடுங்க'' என்றான் குறவன்.

''அட உனக்கு என்னடா தைரியம்?'' என்று குதித்தார் ரெட்டியார் மீசை விரைக்க. ''எத்தனை தேசத்து நாய்களைக் குதறிப் போட்டிருக்கிறது என் பூனை? என்ன தைரியமடா உனக்கு?'' என்றார் கண்களை உருட்டி விழித்துப் பார்த்தபடி.

குறவன் வினயமாக ''வேண்டாமுங்க, சொன்னேன். விஷப் பரீட்சை பார்க்காதீங்க. உங்க கூண்டு காலியாயிடும்'' என்றான்.

''இப்படியும் சொல்லலாச்சா?'' என்று உரக்கக் கூவிக் கொண்டே ரெட்டியார் அவனை அடிக்கவே வந்து விட்டார்.

குறவனுக்கும் ரெட்டியாருக்கும் நடந்த வாக்குவாதத்தைப் பார்க்க, பார்த்து அனுபவிக்க ஊர் முழுதுமே கூடிவிட்டது.

குறத்தி ஏதோ தன் குறவன் காதண்டை சொன்னாள்: உடனே குறவன் இன்னும் அதிக வணக்கத்துடனும் விநயத்துடனும் சொன்னான்: ''என் நாய் மேலே நான் பத்து ரூபாய் பந்தயம் கட்டத் தயாராக இருக்கேன்'' என்றான்.

இது ரெட்டியாரின் சினத்தைப் பத்து மடங்காக அதிகமாக்கியது. ''அட நாயே!'' என்றார். உடனே சமாளித்துக் கொண்டு ஒரு குறவனுக்குத் தாழ்ந்து போகலாமா என்று, ''உன் பத்து ரூபாய்க்கு எதிராக நான் இதோ ஆயிரம் ரூபாய் கட்டறேன். உன் நாயைக் கூண்டில் விடு'' என்றார். தன் மடியிலிருந்து பத்து நூறு ரூபாய் நோட்டுகளை எண்ணி அங்கிருந்தவர்களில் ஒருவரை நடுவராக வைத்து அவரிடம் தந்தார். குறவன் குறத்தியிடமிருந்து ஒரு ஒரு ரூபாயாக எண்ணிப் பத்து ரூபாய் எடுத்து நடுவரிடம் தந்துவிட்டு ''ஒரு வேண்டுகோளுங்க! பணத்தோடு செத்துவிட்ட பூனையையும் எனக்குக் கொடுத்து விடணுமுங்க'' என்றான்.

சுப்பா ரெட்டியாருக்கு அப்படியும் ஆகி விடும் என்று எண்ணவே தோன்றவில்லை.

குறவன் நாயைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டு ''சுப்பா, போ. பழைய கறுப்பிதான்'' என்றான். அதைக் கொண்டு போய்க் கூண்டு வாயிலைத் திறந்து உள்ளே விட்டான். சிறிய கூண்டில் இருந்த காட்டுப் பூனை நாய் உள்ளே வந்ததைக் கண்டதுமே இருந்த இடத்திலிருந்து பாயத் தயாராகப் பதுங்கியது. நாய் நடுக் கூண்டில் குரைக்காமல், சிலிர்க்காமல் காட்டுப் பூனையையே கவனித்துக் கொண்டிருந்தது. வால் மட்டும் சற்றுச் சிலிர்த்தது. அப்படியொன்றும் வளமான நாயும் அல்ல — தெரு நாய். ரெட்டியார் அலட்சியமாக, ''பூனைக் கூட்டைத் திறந்து விடு'' என்றார். கூண்டுக் கதவு திறந்ததுமே காட்டுப் பூனை பாய்ந்தது. அதை எதிர்பார்த்தது போலவே நாய் நாலு கால்களையும் வளைத்துப் பதுங்கியது. அது

நின்றிருந்தால் அதன் தலைமேல் பூனை அமர்ந்து அதை அறைந்து கொன்றிருக்கும். அது சாய்ந்ததும் பூனை மூன்றடி பின்னும் தள்ளி நாலு கால் பாய்ச்சலில் விழுந்த வேகம் சமாளித்துத் திரும்புவதற்குள் அந்த நேரத்துக்காகவே காத்திருந்தது போல் குறவனின் நாய் சட்டென்று திரும்பிக் காட்டுப் பூனையின் மண்டையின் பின்புறத்திலே ஒரு காலால் அறைந்தது. அடிபட்ட காட்டுப் பூனை உயிரற்றுக் கீழே சாய்ந்துவிட்டது..

''கப்பா, வா'' என்று கூப்பிட்டான் குறவன்.

நாய் ஒரு சிறு காயம்கூட இல்லாமல் திரும்பி வந்தது குறவனிடம்.

கப்பா ரெட்டியாருக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. எப்படி நடந்தது என்று பிரமித்துப் போய் நின்றுவிட்டார். தம் மேலேயே அடி விழுந்தது மாதிரிதான் அவர் நினைப்பு. நடுவர் ஆயிரத்துப் பத்து ரூபாயையும் குறவனிடம் நீட்டினார்.

''பணத்துக்கென்னங்க. ஐயா கிட்டயே இருக்கட்டும். தேவையானப்போ வாங்கிக்கிறேன். குறவன் நூறு ரூபாயை மாத்தப் போனா போலீசு பிடிச்சுக்க மாட்டாளா? எங்க பணத்தை மட்டும் கொடுத்திடுங்க. பூனையையும் நாங்க எடுத்துக்கிறோம். ஐயா சாப்பிட மாட்டாங்களே அதை'' என்றான் குறவன். குறத்தி தன்னுடைய கணவனைக் கொஞ்சும் பார்வையில் குளிர்வித்துக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள்.

தன் பணத்தையும் வாங்கிக் கொண்டான். இறந்து கிடந்த காட்டுப் பூனையையும் தூக்கிக் கொண்டான் குறவன். ''ஐயாவுக்கு என்னை இப்பக்கூடக் கியாபகம் இல்லீங்களா?'' என்றான். அவன் கண்கள் சிரித்துக் கொண்டிருந்தன.

காட்டுப் பூனையைப் பறிகொடுத்த துயரத்துடன் நிமிர்ந்து பார்த்தார் கப்பா ரெட்டியார். தன் பெயர் கொண்ட நாயைத்தான் அவர் அதிகக் கோபமாகப் பார்த்தார். அவர் அதை விழுந்து பிடுங்கி விடுவார் போல இருந்தது.


''ஐயாகிட்ட இந்தக் காட்டுப் பூனையை ஐம்பது ரூபாய்க்கு வித்துவிட்டுப் போனது நான்தானுங்க. இவளைக் கட்டிக்கத்தான் பணம் வாங்கிட்டுப் போனேன்'' என்றான்.


ரெட்டியாருக்கு லேசாக ஞாபகம் வந்தது.

''இந்த நாய் பிடித்த காட்டுப் பூனைதாங்க இது. காட்டுப் பூனையோடு சண்டைபோடப் பழகிய நாய்களுக்குத் தெரியும்; எப்படிக் காட்டுப் பூனையைக் கொல்லணும், கொல்லாமல் பிடிக்கணும் என்பது. கப்பன் காட்டுப் பூனைகளை வேட்டையாடப் பழகிய நாய்ங்க. வர்றேனுங்க'' என்று அங்கு இருந்தவர்களுக்கெல்லாம் கும்பிடு போட்டுவிட்டுக் கிளம்பி விட்டான் குறவன், குறத்தியும் நாயும் பின் தொடர.

கப்பா ரெட்டியார் வெறிச்சிட்ட பார்வையுடன் அவர்கள் போவதையே பார்த்துக் கொண்டு நின்றார். நிறைந்திருந்த அவர் வாழ்வு சூன்யமாகி விட்டது — பாவம்!

வாராது வந்த துயில்!





வட்டமேஜை

- விலைவாசி ஏற்றம்
- வீட்டு நரகம்!
- நியாயம் பிறக்குமா?

சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் குமாஸ்தாக்கள் (என்.ஜி.ஓ.) ஆகியோருக்குச் சாமான்கள் விலைவாசி உயர்ந்தால் கிராக்கிப் படி உயர்கிறது. விலைவாசி உயர்வு—கிராக்கிப் படி உயர்வு - இப்படிச் சங்கிலித் தொடர் போல் மாறி மாறி வந்து கொண்டிருக்கிறது.

பெரிய தொழிற்சாலைகள், கம்பெனிகள் இவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் சங்கம், யூனியன் எல்லாம் இருக்கின்றன.

ஆனால் எங்களுக்குச் சங்கம் கிடையாது. யூனியன் கிடையாது. தலைவர்கள் இல்லை. ஆனால் நாங்கள் லக்ஷோப லக்ஷம் பேர்கள் பரவலாக இருக்கிறோம். விலைவாசிகள் விஷம் போல் ஏறிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் நாங்களும் வாழ வேண்டியிருக்கிறது. மனம் உடைந்து போயிருக்கிறோம்.

நாங்கள் யார்? இருபது முப்பது வருஷ காலமாகச் சிறு தொழில் நடத்தி, வியாபாரம் செய்து, ஓர் இடத்தில் வேலை செய்து ஈ தேன் சேர்ப்பது போல் — எறும்பு மழைகாலத்துக்கு முன் உணவு சேகரிப்பது போல் ஓர் ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வாங்கிக் கொண்டு சிறு குடிசை கட்டிக் கொண்டு வாழுகிறோம்.

இந்தச் சொற்ப நிலத்திலிருந்து வரக்கூடிய நெல்லையும் சர்க்கார் குறைந்த விலையில் கட்டாயமாகக் கொள்முதல் செய்துவிடுகிறார்கள். நெல்லை மட்டும் சர்க்கார் குறைந்த விலையில் கொள்முதல் செய்கிறார்களே தவிர எண்ணெய், பருப்பு வகையறுக்கள் — விறகு இவைகளின் விலைவாசிகள் ஏகத்தாறுக ஏறிக் கொண்டே போகின்றன. அதைக் கட்டுப்படுத்த சர்க்கார் ஒருவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எப்படி நாங்கள் வாழ்க்கை நடத்த முடியும்?

கன்னியாகுமரி வி. ஆர். சுப்பய்யர்

வீட்டுச் சொந்தக்காரர்கள் வீட்டின் முன் புறம் இருந்து கொண்டு மீதியுள்ள இடங்களில் சிமெண்டு ஷீட்டுகளையும், தட்டிகளையும் வைத்துத் தடுத்துக் குடும்பத்துக்கு இரண்டு அறை வீதம் நான்கு குடிகளுக்கு இடம் கொடுத்து ரூ. 200 அட்வான்சும் ரூ. 45 வாடகையும் வாங்கி விடுகிறார்கள். அவர்கள் குழாய் வரி மாதம் ரூ. 23 கட்டிவிட்டுப் புதுக் குடித்தனக்காரர்களிடம் ரூ. 8 வசூலிக்கிறார்கள். இரவு ஆறு முதல் ஒன்பது மணி வரை விளக்கு எரிய ஒரு குடும்பத்துக்கு ரூ. 2. இரவு ஒன்பது மணிக்கு மேல் யாரும் உள்ளே வர முடியாமல் வாசல் கதவை அடைத்து விடுவார்கள். அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் நாங்கள் சம்பளத்தில் நான்கில் ஒரு பாகம் வாடகையாகக் கொடுத்துவிட்டு, வீட்டு வரி அதிகாரிகள் வரும் போது உண்மையைச் சொல்வோமென்றும் அடுத்த நாளே சண்டை போட்டு, 'காலி செய்' எனச் சொல்லிவிடுகிறார்கள். வீட்டு வரி அதிகாரி வருவதைத் தெரிந்து, வீட்டுக்காரர் 'சொந்த உபயோகம்' எனப் பொய் சொல்லி அனுப்பி விடுகிறார்.

பொள்ளாச்சி எஸ். ருக்மிணி

உதகமண்டலம், ஸ்னோ டவுன் ரோட்டில் 1.50 செண்ட் பூமி என் கணவருக்கு 1937ம் ஆண்டு அரசினரால் கந்தாய பூமியாக அளிக்கப்பட்டது. அதுமுதல் 1942ம் ஆண்டு விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேலும் ஐம்பது செண்டு பூமியைச் சேர்த்து அளித்தார்கள் அரசினர். காடாக - பள்ளமாக இருந்த, விவசாயத்துக்கு ஏற்றதல்ல என்று அரசினரால் வஜா செய்யப்பட்டிருந்த பூமி எங்கள் குடும்பத்தினர் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்ததன் காரணமாக விவசாயத்துக்குத் தகுந்ததாக மாறியது. 1942ம் வருடம் நீலகிரி ஜில்லா கலெக்டர் மெக்லாலின் என் கணவரைப் பாராட்டி உற்சாகம் அளித்துக் கௌரவித்தார்.

1959ம் வருடம் என் கணவர் இறந்துவிட்டார். நான் என் ஒன்பது குழந்தைகளையும் வைத்துக் காப்பாற்ற ஒரே மூலதனம் இந்தப் பூமியாகும். 1962ம் வருடம் நீலகிரி ஜில்லாவில் உருளைக்கிழங்கு பூஷண நோய் வந்துவிட்டபடியால் என்னால் அந்த வருடக் கந்தாயப் பணத்தைக் கட்ட இயலாமற் போய் விட்டது. உதகை தாசில்தார் அவர்களால் என் வீட்டில் உள்ள மரம், இரும்பு, பித்தளைச் சாமான்கள் ஜப்தி செய்யப்பட்டன. அதுமுதல் நான் கந்தாயப் பணத்தை முன்பாகவே செலுத்தி விடுவது வழக்கம். 1964ம் வருடம் இரண்டு ஹரிஜனங்கள் வந்து என் பயிர்களைப் பிய்த்து எறிந்துவிட்டு 70 செண்டு பூமியை ஆக்கிரமிப்பு செய்து கொண்டனர்.

கடந்த 5-3-66 அன்று என் வீட்டைச் சுற்றி நான் போட்டிருந்த பயிர்களைப் பட்டப் பகலில் பிய்த்து எறிந்து கொண்டிருக்கையில் உதகை தாசில்தார் நேர்ப் பார்வையிட்டு அவர்களை அவ்விடமிருந்து அகன்றுவிடுமாறு கூறிச் சென்றார். ஆயினும் அவர்கள் மேலும் மேலும் நாசப்படுத்தியே விட்டனர். பின்னர் அவ்விடம் ஒரு வீடும் கட்டிக் கொண்டனர். இது விஷயம் நான் எனக்குத் தெரிந்த மட்டில் ஜில்லா தாலுக்கா அதிகாரிகள், முதலமைச்சர், விவசாய அமைச்சர், இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜ் ஆகிய அனைவருக்கும் தெரியப்படுத்தினேன். இது வரை ஒரு நடவடிக்கையும் எடுக்கக் காணோம்!

நீலகிரி ஆர். லிங்கம்மாள்

Edited printed & published by T Sadasivam on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk Madras-10

REGISTERED NO. ML 4392
Registered as a Newspaper in Ceylon

